# நித்தியமல்லி

பூவை எஸ். ஆறுமுகம்

கலைஞன் பதிப்பகம்

தியாகராயநகர் :: சென்னை-17

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற் பதிப்பு: 1967.
உரிமை: கலைஞன் பதிப்பகத்தாருக்கேகே.

விலை ரூ. 2. 75

அச்சிட்டோர்: பாரதம் பிரஸ், சென்னை-17.

# ஓர் அறிமுகம்

பெண் இல்லையேல், வாழ்க்கை இல்லை.

வாழ்க்கை இல்லையேல், கதை இல்லை.

ஆம்; பெண்மையின் வாழ்க்கையும், வாழ்க்கையின் கதையும் கூட்டாக உறவு கொண்டு ஓர் உண்மையை நடத்திச் செல்லும் போதுதான், ஆண்மையின் விதியும் விதியின் தத்துவமும் இறைமைப் பண்பாட்டின் பின்புலத்தோடு இயங்கி இயக்கப்பட்டு, அதன் இனிய விளைபலனாக, இலக்கிய நயம் செறிந்த—யதார்த்தச் சித்தார்தம் நிரம்பிய நல்லதொரு குடும்பக்கதை கிடைக்கிறது.

அத்தகைய அழகான—அன்பான—இயல்பான கதையொன்று எனக்கும் கிடைத்தது. அது ஒரு பெண்மையின் சரிதம். பெண்மைச் சக்திக்கு ஆரம்பமும் முடிவுமாகக் கொண்ட அப் பெண்மைச் சக்தியின் எதிரெதிர்ப் பண்பாடுகளின் மோதல்களை விளைவித்த நடப்புக் கதை அல்லவா அது!

அந்த நடப்புக்கு ஒரு நாயகி வேண்டுமே!

அவள்தான், குமாரி தமிழ்ச்சுடர். தமிழை மறந்து விடப் போகிறீர்கள்!—ஏனென்றால் அவள் கோபித்துக் கொள்ளுவாள். முந்தித்தவம் கிடந்து முந்நூறுநாள் சுமந்து ஈன்ற தன் அன்னையான மரகதத்தம்மாள் தமிழை மறந்து சுடர் என்று தன்னை அழைப்பதைக் கூட அனுமதிக்காத கன்னி அவள்!

அவளை—தமிழ்ச்சுடரை வாழவைக்க இரண்டு குடும்பங்களின் பின்னணிக்கதை முயற்சி செய்கிறது. ஒரு நல்ல ஆரம்பமும் ஒரு நல்ல முடிவும் அவளுக்குக் கிடைப்பதற்குள் எத்தனை எத்தனை பிரச்னைகள் குறுக்கிட்டுவிடுகின்றன!

வாழ்க்கை என்பதே ஒரு பிரச்னைதான்! அது ஒரு போராட்டமும் கூட!...

ஆனால், குமாரி தமிழ்ச்சுடரின் பக்குவம் பெற்ற கன்னி நெஞ்சிலே வாழ்க்கை ஒரு சாதனையாகவும் கடமையாகவும் மணம் பரப்புகின்றது!

உண்மைதான்: நித்தியமல்லி என்றால், தமிழ்ச்சுடருக்கு நிரம்பவும் ஈடுபாடு. அந்த ஈடுபாடுதான் அவருக்கு அப்பூவின் உண்மைச் சக்தியை உண்டு பண்ணிக் காட்டுகிறதோ?

* * *

நாலேநாலு பாத்திரங்களையே உயிர்ப்பாகக் கொண்டு இந்தக் குடும்பநவீனம் உருவாகியுள்ளது. எனக்கே உரிய தனித்தன்மையுடனும் சிந்தனைத் தெளிவுடனும் இக்கதை தொடர்ந்து முடிந்துள்ளதாக இலக்கிய ஆர்வலர்களாகிய உங்களால் ஒரு தீர்ப்பை உருவாக்கிக் கொள்ள முடிந்தால், அதுவே என்னுடைய இருபதாண்டு இலக்கியப்பணிக்குக் கிட்டிய வெற்றியாகும்!

தொடர்ந்து தமிழ் இலக்கியத்தை வளர்க்கவும் வாழ்த்தவும் கடமையும் ஈடுபாடும் கொண்டவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய ஒரு திரும்பு முனைநேரம், இது.

இந்நிலைமையில், கழிந்த ஆண்டின் தமிழ்நாட்டு அரசாங்கம் இலக்கிய வகையிலே, என்னுடைய 'பூவையின் கதைகள்' நூலுக்குப் பரிசளித்துப் போற்றிய இன்பநினைவை நான் எப்படிமறக்கக் கூடும்?

மேற்குறித்த திரும்பு முனையின் விளைவாக என்னுடைய எழுத்துக்கள் பலபல நூல்களாக வடிவம் பெற்று முன்னைப் போல வெளிவரத் தொடங்கியுள்ளன.

இந்நவீனம் அவ்வகைப்பட்டதாகும்.

நவீனம் நவீனமான அமைப்புடன் உருவாகியுள்ளது போலவே, இந்நவீனம் நவீன அமைப்புடன் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. பதிப்பகத்தினரும் நானும் நன்றிப்பரிவர்த்தனை செய்துகொள்ளக் கூடாது! எங்கள் பிணைப்பு அப்படி!

ஆனால் இலக்கிய ஆர்வலர்களாகிய உங்கள் அன்புக்கு என் நன்றி எப்போதும் காத்திருக்கிறது!

வணக்கம்

# 1. பரிசை மறுத்தாள் கன்னி!

அழகின் கம்பீரமான மிடுக்குடன் அந்த நிலைக் கண்ணாடியின் முன்னே வந்து நின்றாள் தமிழ்ச் சுடர். அவளுடைய எழிலை அந்தரங்கமான அன்புடன் அக்கண்ணாடி வாங்கிக் கொண்டிருக்க வேண்டும். இல்லையென்றால் அந்தக் கண்ணாடிக்கு அவ்வளவு அழகு கை கூடியிருக்க முடியுமா? அவள் கொண்டிருந்த தூய்மையான அழகுக் கவர்ச்சியின் பிரதிபலிப்பையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தாள் அவள்; பார்த்து சிரித்துக்கொண்டேயிருந்தாள்.

பூச்சரத்தைச் சீர்படுத்த, கழுத்தை லேசாகப் பின்வசமாகச் சாய்த்தாள். முடியின் சுமை முதுகுக்கு அணை கொடுத்தது. பூச்சரம் இப்போது வெகு நளினத்துடன் அமைந்துவிட்டது. பதக்கத்தில் கூடியிருந்த வெள்ளைக் கல், பச்சைக்கரைக் கட்டுக்கு ஓர் எடுப்பைத் தந்தது.

மார்பில் தவழ்ந்து நெளிந்து கொண்டிருந்த 'டெரி லின் நைலக்ஸ்', நழுவத் துடித்தது; அதைப் பொய்க் கோபத்துடன் செம்மை செய்தாள் தமிழ்ச்சுடர். தனக்குத்தானே குனிந்து பார்த்துக்கொண்டிருந்த அவள் நிமிர்ந்தாள். நயமானதொரு புன்னகை அந்த மிகுந்த அதரங்களின் கரைகளை அணைத்திருந்தது. 'நௌ ஐ ஆம் ஆல் ரைட்' — அவள் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள்.

காலை இளம் பரிதியின் ஆரோக்கியமான கிரணங்கள் அவளுக்குக் காலத்தைச் சொல்லிக் காட்டின. மணி எட்டு, நிமிஷம் பத்து, விஞடி ஏழு!—மீண்டும் அவள் தன் வசப்பட்டுத் திரும்பினாள்.

நிலைப்படியில் வந்து நின்ருள். மரகதத் தம்மை "அம்மா சுடர், வாம்மா பலகாரம் சாப்பிட, அப்புறம் தோசை ஆறிப் போயிடாதா? ரெண்டு தோசையைச் சுட்டு தட்டிலே வச்சுட்டு வந்திருக்கேன். தோசைச்கல் வேறே தீஞ்சிடப் போகுது, சுடர்'' என்ருள். பாசத்தின் கலவையில் சொற்கள் பிணைந்தன; ஒலித்தன.

தமிழ்ச்சுடர் மெல்ல நடந்து வந்தாள். ''நீ என்னம்மா, எப்பவுமே தமிழை மறந்திடுறியம்மா?' என்ருள்.

அரைக்கணம் மரகதத்தம்மைக்கு ஒன்றும் புரியவில்லை. தன் மகளின் கேள்வி அவளுக்குக் குழப்பத்தைக் கொடுத்தது. வெள்ளைப் புடவையின் முன்றுனையைக் கொய் தெடுத்து, முகத்தில் துளிர்த்திருந்த வேர்வைத் துளிகளைக் கொய் தெடுத்தாள். பிறகுதான் அவளுக்குச் சட்டென்று விஷயம் பிடிபட்டது. ''ஓஹோ! உன்னைத் தமிழ்ச்சுடர்னு அழைக்காமல் வெறும் சுடர்னு அழைச்சதுக்காக அப்படிச் சொல்றியாம்மா?··· நீயுந்தான் எவ்வளவோ தரம் எனக்கு ஞாபகப்படுத்துகிருய். நானும் தான் அதை மறந்துக் கிட்டேயிருக்கேன். சரியம்மா தமிழ்ச்சுடர், வா, சாப்பிடலாம். அப்புறம், பரிசு விழாவுக்கு நேரமாகிப் போகுதம்மா!···'' என்று துரிதப்படுத்திஞள் தாய்.

மகள் பின் தொடர்ந்தாள்.

7

தோசையின் இனிய மணமும் புதினாச் சட்டினியின் சுவையான வாசனையும் பரவிக் கிடந்தன.

ரங்கூன் தடுக்கில் தமிழ்ச் சுடர் குந்தினாள். செவ்வலரிப் பூவிரல்கள் தோசையைத் துண்டாடிக் கிள்ளின. இதழ்களிலே ருசி கனிந்திருக்க வேண்டும். அவள் நப்புக் கொட்டிச் சாப்பிட்டாள். குவளைத் தண்ணீரை "அண்ணாந்து' குடித்தாள். இடது புறச்சேலையை இழுத்து விட்டுக் கொண்டாள்.

சூடும் சுவையும் ஓடோடி வந்தன. "போதும் அம்மா."

"இந்த ஒரு தோசையை மட்டும் சாப்பிடம்மா. சுடர்··· தமிழ்ச்சுடர்.

அதுக்குள்ளே, முட்டைத் தோசை ரெடியாயிடும்!···

தமிழ்ச்சுடர் பாசத்தின் பரிவுடன் பெற்றவளை ஏறிட்டுப் பார்த்தாள்.

மரகதத் தம்மையின் விழிகளிலே கலக்கம் தடம் காட்டியது. "உங்கப்பாவுக்கு முட்டைத் தோசன்னா போதும், ஒரே கொண்டாட்டம்தான்!" அவளால் தொடர்ந்து பேச்சைத் தொடர முடியவில்லை; தொண்டையை அடைத்தது.

தமிழ்ச்சுடரின் நெஞ்சு கனகனத்தது. தோசைக் கல்லின் கரையோரங்களில் எண்ணெய்த் துளிகள் 'சுரீர்' என்று ஓசைப்படுத்தின.

விரிந்து கிடந்த செய்தித்தாள் தமிழ்ச்சுடரின் கவனத்தைக் கவர்ந்தது. 'அப்பா இருந்திருந்தால், இப்போது என் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னைக்கு ஒரு முடிவு கிடைத்திருக்கும் அல்லவா? பாவம், அம்மா! அவர்களால்

என்ன செய்ய முடியும்? எண்ணங்களின் நிழலில் ஒதுங்கிய அவளது கன்னி மனம், இப்போது பத்திரிகையில் ஈடுபட்டது.

இந்திரா காந்தி பிரதம மந்திரியாக வெற்றிபெற்ற நிகழ்ச்சியை எடுத்து சொன்னது நாளிதழ். பெண்மைச் சக்தியின் வெற்றியைப் போற்றி, அவ்வெற்றியில் மகிழ்ந்தது தமிழ்ச் சுடரின் உள்ளம். சரித்திரத்தின் புதிய ஏடு மீண்டும் புறட்டப்பட்டிருப்பதாகவும் அவள் கணித்தாள்.

முட்டைத் தோசை தட்டில் விழுந்து மணம் கூட்டியது.

"சாப்பிடம்மா!"

"ஊம்!"

தமிழ்ச்சுடர் சாப்பிட்டு முடித்து எழுந்து கை கழுவினுள். பிறகு தன் அன்னைக்குத் தன் கையாலேயே தோசை சுட்டுப்போட்டாள் ஏதோதோ சிந்தனைகளின் ஊமைச் சலனத்தில் ஊடாடிக்கொண்டிருந்த தாயை வலுக்கட்டாயப்படுத்தி சாப்பிடச் செய்தாள் அவள்.

மரகதம்மையும் மகள் பேச்சை தட்டமுடியாமல் தட்டைக் காலி செய்தாள். அவளது தாய் இதயம் பாசத்தால் நிரம்பி வழிந்தது.

கைகளைக் கழுவிக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள். தமிழ்ச்சுடர். தன் அறைக்கு வந்தாள். மேஜை மீது இருந்த பவுடர் டப்பாவை எடுத்துக் கொண்டு மீண்டும் நிலைக்கண்ணுடியின் முன் போய் நின்றுள். பவுடரின் வாசனையும் பால்முகத்தின் கவர்ச்சியும் வழிந்தன. அந்த ரம்மியமான சூழலிலே அவள் எதையெல்லாமோ எண்ணினுள்; எண்ணத்தின் சூழலிலே ஏதோதோ ஆசைக்கனவுகள் குமிழ்பறித்து விளையாடத் தொடங்கின. அவ்விளை

யாட்டிலே அவளது கன்னி மனத்தின் சில இலட்சியங்களும் பங்குபற்றின. 'கனவு, திட்டம், லட்சியம் ஆகியமையச் சிந்தனைகள் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையல்ல!' என்று அவள் தனக்குத்தானே அடிக்கொருமுறை சிந்தித்துத் தெளிந்த நிலைகளை—நினைவுகளை யெல்லாம் அவள் நினைவு கூர்ந்தாள். அந்நினைவின் மனமோகனப் பின்னணியில் அவளுள்ளே தோன்றிய அவ்வுருவம், அவளுக்குச் சுகந்தத்தின் கம்பீரத் தூதுபோல அமைந்தது. "மிஸ்டர் உதயணன்!' என்ற பெயரை அவள் மனம் மின் ஒலிப்பதிவு செய்து காட்டியது.

ஒரு சம்பவத்தை அவளால் மறக்கவே முடியாது.

* * *

அன்று காலேஜ் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். சாந்தோம் பஸ் நிறுத்தத்தில் அவள் வந்து நின்றாள். ஆடித் தென்றல் இதமாக வெண்சாமரம் வீசிக்கொண்டிருந்தது. அச்சுகம் அவளுக்கு மிகவும் தேவைப்பட்டது டவுனுக்குப் புறப்படவேண்டும்,

அப்போது பஸ் வந்துவிட்டது-

தமிழ்ச்சுடர் பஸ்ஸில் ஏறிவிட முனைந்தாள், கூட்டம் நெரித்தது. ஆகவே, ஒதுங்கினாள். ஒதுங்கினாளா? ஆம்; ஒதுங்கிக் கொள்ளாத ஆண்களுக்கு மத்தியில், அவள் ஒதுங்குவதைத்தவிர வேறு என்ன செய்யமுடியும்? அத்தகைய அவசரக்காரர்களைப்பற்றி ஆத்திரம் கொண்டாளவள் ஆனாலும் பெண்-அதிலும் கன்னிப் பெண்ணால், அடாவடி பேச முடியுமா? பேசினால் அது நாகரிகப்பண்பு ஆகுமா? 'சே' — அவள் இக்குறிப்பை அடக்கக்கூடவில்லை. தன்னுள் சொல்லிக் கொண்டாள். இந்நிலையில் வேர்வை வழியத் தொடங்கிவிட்டது. கைப்பிடித் துணிக்

கொண்டு துடைத்துக் கொண்டாள். காலாறச் சற்று இடம் மாற்றி நிற்க எத்தனம் செய்தபோது உதயண னின் இள நீலவர்ணக்கார்—அம்பாஸிடர்—தூதுபோல அங்கு வந்து நின்றது போலும்!

"ஹலோ!" என்முன் உதயணன்.

தமிழ்ச் சுடர் புன்னகை செய்தாள். போதமும் போதையும் மடைகட்டி மணம் கட்டிப் பதித்திருந்த உதடுகளுக்கு நாணப்பட சொல்லியா தரவேண்டும்? ரோஜாப் பூக்கள் கதுப்புக்களில் மலர்ந்தன

தான் வீட்டுக்குச் செல்வதாகத் தெரிவித்தாள்.

அவனே அவளை தன் வீட்டுக்கு அல்ல, பங்களாவுக்கு அழைத்துச் சென்றான். மாம்பலத்தில் பங்களா!

அங்கு உதயணனின் தாய் மட்டும் இருந்தாள். தந்தை தியாகராய நகரில் வட்டிக்கடையில் இருப் பதாகச் சொன்னான்.

தமிழ்ச் சுடருக்கு ராஜோபசாரம் நடந்தது.

அவள் விடைபெற்றுத் திரும்பும் கட்டத்தில், பலமானதொரு சத்தம் திடுதிடுப்பென்று பீறிட்டது. அவள் அதிர்ச்சியுடன் திரும்பினாள். கோடியில் இருந்த ஓர் அறையில்—பூட்டப்பட்டிருந்த அறையிலிருந்து ஜன்னல் கம்பிகளினூடே ஓர் உருவம்—ஓர் இளம் உருவம் தெரிந்தது. மீண்டும் கதறல் காதுகளைச் செவிடுபட அடித்தது.

அதற்குள் நாசூக்காக தமிழ்ச் சுடருக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டான் உதயணன்.

நடந்த அந்த சம்பவத்தை மறந்து உதயணனைப் பற்றிய நட்புச் சம்பவத்தில் அவள் இதயம் கட்டுண்டது.

காலையில் எதிர் பாராதவிதமாக அவ்வழியே சென்ற உதயணன் அவளுக்கு வாழ்த்துச் சொன்னான். "உங்களுக்கு என் நல்வாழ்த்துக்கள். உங்களுடைய இந்த இலக்கிய ஆர்வம் மேலும் மேலும் தழைத்துப் பெருக வேண்டுமென்பதே என் வேண்டுகோள். பிரார்த்தனை. நானும் ராஜாஜி மண்டப விழாவுக்குக் கட்டாயம் வருவேன்!" என்று கூறிவிட்டுப் பறந்து விட்டான் அவன்!

அவனது இளஞ்சிரிப்பில்தான் எத்துணை ஆண்மைக் கவர்ச்சி! ... ...

பழைய சம்பவம் மறைந்தது.

மரகதம்மை வந்து மகளைத் தூண்டி வழியனுப்பி வைத்தாள்.

தாயைக் கையெடுத்துக் கும்பிட்டு விடை கொண்டாள் தமிழ்ச் சுடர்.

இளங்காலையின் ஒயில் அவளுடன் துணை சென்றது.

மண்ணடி ராமசாமித் தெருவுக்கு இனிமேல் அவள் திரும்பினால்தான், களையும் திருப்பும்!

* * *

ராஜாஜி மண்டபத்தில் கூட்டம் நிரம்பியிருந்தது.

வரவேற்புரைக்குப் பின் பரிசளிப்புப் பொறுப்பைத் தலைவருக்கு நினைவு படுத்தினார் செயலாளர்.

"இப்பொழுது எங்களது 'தமிழ்ப் பூங்கா' நடத்திய கல்லூரி மாணவிகள் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற குமாரி தமிழ்ச் சுடருக்குப் பரிசுத் தொகை ரூபாய் ஆயிரத்தை வழங்கும்படி தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்!," என்று சொன்னார் செயலாளர்.

'தமிழ்ப் பூங்கா' ஆசிரியர் பூமாலையும் கையுமாக நின்றார்.

தலைவர் ஆனந்தரங்கம் பரிசுத் தொகையுடன் எழுந்தார்; வாசனைத் திரவியத்தின் நெடி பரவியது.

அப்போது மேடை மீதேறி வந்தாள் குமாரி தமிழ்ச்சுடர்.

ஆசிரியர் ஏந்திய மாலையைப் பணிவுடன்— அன்புடன் கையில் வாங்கிக் கொண்டாள்.

கையொலி விண்ணைப் பிளந்தது.

ஆனால் பரிசுத் தொகையை மட்டும் அவள் வாங்கிக் கொள்ளவில்லை. ''மன்னியுங்கள் ஐயா! நாணயம், நேர்மை, சத்தியம் முதலிய நற்பண்புகளைக் காப்பாற்றத் தவறிய ஒரு பெரிய மனிதரிடமிருந்து நான் பரிசைப்பெற விரும்பவில்லை! நீங்களே உங்கள் அன்புக் கரங்களாலேயே எனக்குப் பரிசளியுங்கள். மனத் திருப்தியுடன் ஏற்றுக்கொள்கிறேன்!,' என்று ஆசிரியரை நோக்கிச் சொன்னாள் குமாரி தமிழ்ச்சுடர்.

அவ்வாறே ஆசிரியர் மேகவண்ணன் பரிசுத் தொகையை அவளிடம் சமர்ப்பித்தார். அவள் கைகூப்பிப் பெற்றுக்கொண்டாள். பரிசுடன் அவள் தன் இருப்பிடத்தை அடைந்தபோது, பரவிக் கிடந்தது ஆழிய அமைதி. அவ்வமைதியை 'சிலிப்பர்' சத்தம் துண்டாடியது. அவள் இருப்பிடத்தில் வந்து அமர்ந்து திரும்பிய நேரத்திலே, உதயணனின் முகம் அவள் பார்வைக்கு இலக்கானது அந்த முகம் ஏன் அப்படிக் கலவரத்தை விளைத்துக்காட்டியது? ... ...

# 2. திருவாளர் ஆனந்தரங்கம்

குமாரி தமிழ்ச்சுடர் ஓர் அரைக்கணம், செய்வகை விளங்காமல் தவித்தாள். இனம் விளங்காத பதட்டமும் பதைப்பும் அவளுள் உள் வட்டமாக லயித்துச் சுழித்து அலைமோதின. நெஞ்சக்கடலில் ஏதேதோ நினைவலைகள் எப்படி எப்படியெல்லாமோ ஆர்ப்பரித்தன. அவளது மார்பகம் எம்பித் தணிந்தது!

அவள் தன்னுடைய குளிர்ந்த பார்வையை ஒழுங்கு படுத்திக்கொண்டு மேலாடையைப் பார்த்தாள். மறுகித் திரும்பியவிழி வட்டங்களிலே மஹாத்மா, நேருஜி, காமராஜ், சாஸ்திரி போன்ற பெருந்தலைவர்கள் சுழன்றார்கள். ஆனால் அவளது உள்மனத்தின் வட்டச் சுழிப்பில், சற்று முன்னம் அவள் கண்ட அந்தக் காட்சி தான் அவளுக்கு இன்னமும் தவிப்பையும் தளர்ச்சி யையும் மூட்டம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தன. 'மிஸ்டர் உதயணனின் முகம் ஏன் அப்படி கலவரம் காட்டியது?' என்ற இந்த ஒரு வினாதான் அவள் முன்னே விடுபடமுடியாததொரு புதிராக வளையமிட்டது கேட்டுக்கொண்ட கேள்விக்கு அவளால் பதில் சொல்லிக் கொள்ள முடியவில்லை. மீண்டும் பழைய பதட்டமும் பரதவிப்பும் அவளை மடக்கிக் கிடத்திக் கொண்டன. சிக்கலின் நிலைப்புடன் அவள் எதிர்ப்புறம் உற்றுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

சில்க் ஜிப்பா பளபளக்கவீற்றிருந்த தலைவர் ஆனந்தரங்கத்தின் முக விலாசத்தில், சாந்தியும் சமாதானமும் வீற்றிருக்கவில்லை என்பதை அவள் அனுமானம் செய்ய அதிக நாழிகை பிடிக்கவில்லை. உடலின் கண்களை மூடிக் கொண்டபோது, மனத்தின் கண்கள் திறந்து கொண்டன.

* * *

ஒருநாள்! தமிழ்ச்சுடர் தன் அன்னையுடன் கடைத்தெருவுக்குப் போயிருந்தாள். சைஞ பஜாரின் முரண்டுபிடித்த பான்மைக்கும் பாவனைக்கும் ஈடு கொடுத்து அவர்கள் இரண்டுபேரும்—தாயும் மகளும்—ஜவுளிக்கடை ஒன்றுக்குள் நுழைந்தார்கள்.

தமிழ்ச்சுடருக்கு அப்போது பரீட்சைச் சமயம். பி. ஏ. இறுதி ஆண்டு. டிசம்பர் பரீட்சை. மகள் புதுப் புடவை கட்டிக்கொண்டு பரீட்சை எழுதவேண்டுமென்று தாய் விரும்பினாள். மகளுக்கு அக் கொள்கை சிரிப்பை உண்டுபண்ணியது. ஆனாலும், அன்னையின் அன்புப் பாசம் அவளுள் சிலிர்ப்பை உண்டாக்கிவிட்டது. அதற்கு மேல் அவள் வாய்திறக்கவில்லை; 'ம்' கொட்டினாள். அதுவும் போதாதென்று, ''உன் இஷ்டம்போலச் செய் யம்மா!'' என்று உரிமை வேறு கொடுத்துவிட்டாள்.

இவ்வளவு போதாதா?

மரகதம்மைக்கு வாயெல்லாம் பல்லானது. வெண்ணிறம் ஒளிர்ந்தது. இடுப்புச் சேலைமாதிரி- 'காலிகோத்' வகையில் அழகிய—கவர்ச்சி கலந்த வாயில் புடவை ஒன்றையும் அதேகலரில் சோளித்துண்டு ஒன்றையும் எடுத்துக் காட்டினாள். மகள் 'ஓகே' சொன்னாள்.

தமிழ்ச்சுடர் உள்ளங்கையில் மூடி வைத்திருந்த நூறு ரூபாய்த் தாள் அம்பலத்துக்கு வந்துவிட்டது. ஆனால், அம்பலத்துக்கு வந்த அந்த நூறு ரூபாய்த் தாள் சில்லறை கிடைக்கவேண்டி கல்லாவுக்குச் சென்றது. சென்றவிடத்தில், எக்காளச் சிரிப்பு எள்ளி நகையாடியது. ''அம்மா! வேறே அம்மாளாக இருந்தால் நல்லாக் கேட்டிருப்பேன். என்னன்னு கேட்டிருப்பேன்னு ஒங்களுக்குப் புரியவேணுமா?'' எம்மாம் நாளாகம்மா ஒங்களுக்கு இந்தப் பிஸினஸ் அப்படின்னு ஒரு மொத்து

மொத்தியிருப்பேன்! அப்படி ஒங்களை கேக்கறதுக்கு எம் மனசு ஒப்பாது! நீங்க இப்ப தந்த நோட்டு கள்ளநோட்டு அம்மா! வேறே ரூபாய் இருந்தால் கொடுங்க. நல்ல ரூபாய்க் குடுங்க. அசல் ரூபாயாய் கொடுங்க!...'' சுக்கரித்த ருசிபேதங்களின் நாத அலைகளாக அவன் குரல் ஒலிபரப்பிவிட்டு ஓய்ந்தது. அகங்காரமான ஆணவத்துடன் 'காஷில்' இருந்தவன் தலையை உயர்த்தினான். அந்தி சந்திப்பொழுதானதால், கடையில் அமளி துமளி இன்னமும் ஆரம்பமாகவில்லை. ஆகவேதான், அந்த இளவட்டமான குமாரதேவனுக்கு வாயை ஓட்ட வழியும், வழியை ஓட்ட விழியும் கிடைத்தன. எடுப்பார் கைப்பிள்ளை பேச்சு ஓடியது.

ஆனால் மரகதத்தம்மையின் மனத் துடிப்பை அவன் எப்படி அறிவான்? அவள் கண்களில் கொவ்வைப் பழங்கள் கலந்தன. அவள் தான் பெற்ற பெண்ணை ஏறிட்டுப் பார்த்தாள். பார்த்த கண்களின் படபடப்புக்கூட அடங்கவில்லை.

அப்போது...

''ஐயா காஷியரே! வாயை ரொம்பவும் நீட்டாதீங்க! ... கள்ள நோட்டு அடிக்கிறது உங்க பழக்கமாக இருக்கலாம். அதுதான் சடக்கென்று உங்களுக்கு வாயில் வந்து விட்டது. துணிகளுக்குப் பில் போட்டாகி விட்டதேயென்று பார்க்கிறோம். இல்லாவிட்டால், இந்நேரம் உங்க முகத்திலே விசிறியடிச்சிட்டுப் போயிடுவேன். நெல்லைக் கொட்டிட்டால் அள்ளிடலாம். சொல்லைக் கொட்டினால் அள்ளிட முடியுமா? பாவம்.. உங்களுக்கென்ன? வாய் புளித்ததோ மாங்காய்ப் புளித்ததோ வென்று பேசலாம். நீங்களும் உங்க பேச்சும் அதுக்கு ஒத்துவரும். ஆனா, எங்களோட நிலை, போக்கு எல்லாத்தையும் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்?......

இதோ என்னுடைய முத்து வளையல் ஒண்ணைக் கழற்றித் தாறேன். வச்சுகிட்டு அதுக்கு ரசீது கொடுங்க! ... ... ஊஹூம், நீங்க உங்க முதலாளியை 'போன்' செய்து அழையுங்க. அவர்கிட்டேதான் என் வளையலை நம்பிக் கொடுப்பேன். வீட்டுக்குப்போய் பணம் கொண்டுவந்து உங்க கையிலே கொடுத்திட்டு, என் வளையலை மீட்டுக்கி றேன். கொடுங்க அந்த நூறு ருபாய் நோட்டை! எங்க தகப்பனார்கிட்டே பட்ட கடனுக்காக சிலபேர் கொஞ்சம் கொஞ்சமாக இப்போ அம்மாகிட்டே பணம் செலுத்திக்கிணு வராங்க அந்த இனத்திலே யாரோ ஒரு புண்ணியவான் இப்படி மோசடி செய்திருக்கான். தப்பு செஞ்சுவன் எப்பவாயினும் அகப்பட்டுத்தான் தீருவான். அப்போ நானும் சட்டமும் விழிச்சுக்கிட்டு இருப்போம்! ஊம் ... உங்க கையிலே அந்தப் பேச்செல்லாம் எதுக்கு?.. "என்று பேசி முடித்தாள் தமிழ்ச்சுடர். காஷியர் வழிந்த அசட்டை துடைத்துக்கொள்ள ஞாபகம் இல்லாதவனாக. நூறு ருபாய்த்தாளை எடுத்து அவளிடம் சமர்ப்பித்தான், ஆசனத்தை விட்டு எழுந்து நின்றபடி. கிராப்புத்தலை முடியின் முனைப்பகுதியில் வேர்வைத் துளிகள் சரம் கோத்திருந்தன.

தமிழ்ச்சுடர் அந்த ருபாய் நோட்டை வெகு ஆணவமாக வாங்கிக்கொண்டாள், வானைத் தழுவும் முகில் துண்டங்களாகச் சரிகுழற்கற்றைகள் அவளது தோள் பட்டையைத் தழுவிச் சரிந்தன. சரிந்து விழுந்த மேலாக்கைச் சரிசெய்து கொண்டாள். அவள் இப்போது தன் தாயைப் பார்த்தாள், அமைதியின் கம்பீரத் தோடு.

மரகதத்தம்மையின் வெளிறிய உதட்டுக் கோடியில் ஒரு சிரிப்பு கோடி காட்டிற்று. அச்சிரிப்பில் 'உன் தந்தையின் அருமைச் செல்வி அல்லவா நீ? உன் அப்பா

வின் நெஞ்சுரம், நேர்மைத்திறம் எல்லாம் உனக்கும் இல்லாமல் இருக்குமோ? பேஷ்!'' என்று அவள் பேச வேண்டிய பேச்சின் குறியீடு மிதந்தது.

மேலே விசிறி சுழல் இறகுகளுடன் ஆலவட்டம் சுற்றிக்கொண்டிருந்தது.

தமிழ்ச்சுடர் சிறுபொழுது காற்றை அனுபவித்தாள்!

பிறகு, ''மிஸ்டர்...!'' என்று காஷியரை நோக்கி விளித்தாள்.

காஷியர் பேந்தப் பேந்த விழித்தான். குமாரதேவன் என்ற அழகிய பெயருக்குரியவன் அவ்விளைஞன் என்ற உண்மையின் ரகசியத்தை தமிழ்ச்சுடரிடம் யார் போய்ச் சொல்லுவார்கள்.

பெயரைச் சொல்லவில்லையென்றாலும், அந்தக் கன்னி விளிப்பது தன்னைத்தான் என்கிற நிலை புரியாமல் இல்லை. ஆகவே, ''என்னுங்க...?'' என்று கேட்டான். பழைய 'ஜோர்' பேச்சில் இல்லை. அது எங்கே போய் விட்டது?

''உங்க நேம் என்ன?''

''என் பெயருங்களா...?குமாரதேவன்!'' சொல்லி விட்டு, 'ஏன்?' என்ற தாத்பரியத்துடன் அவளை ஏறிட்டு நோக்கினான். திருமணமாகாத மனங்களுக்கென்று இப்படி ஒரு சலனமா? இப்படியொரு சபலமா?

''ஓ. கே! குமாரதேவ்! உங்க முதலாளிக்குப் போன் செய்தாச்சா? சீக்கிரம் செய்யுங்க!···நாங்க போகணும்!'' என்று அதிகாரக் குரலெடுத்துச் செப்பினாள் தமிழ்ச்சுடர். பிறகு அன்னையிடம் நெருங்கினாள். ''வாம்மா, அப்படி காற்றாட நிற்கலாம்!'' என்று அழைத்தாள். மரகதத்தம்மையும் இணங்கினாள்.

அப்போது, "மரகதம்!" என்ற மென்குரல் ஒன்று மிகவும் 'பாந்தவ்யத்'துடன் மிதந்து வந்தது.

மரகதத்தம்மை ஏறிட்டு நிமிர்ந்தாள். இடது பக்கம் கண்ணை மறைத்து நின்ற ஒரு முடி இழையை நீவி விட்டாள். "ஓ...நீங்களா?" என்று ஆச்சரியத்துடன் சொன்னாள்.

'என்ன விஷயம்? பணம் கொடுக்க வேணுமா? நான் கொடுத்திடுறேனே? அப்புறம் நீ...நீங்க கொடுத்திட லாமே!" என்று கூறினார் அவர். வாசனைத்திரவியத்தின் நெடி பரவிவந்தது.

"எனக்காகச் சிரமப்பட வேண்டாங்க...நீங்க உங்க அலுவலைப் பார்க்கலாம், மிஸ்டர் ஆனந்தரங்கம்!...எனக் குப் பணத்துக்குப் பஞ்சமில்லை!...நீங்க எவ்வளவு தங்க மான மனிதர்! பாவம், எனக்காக நீங்க சிரமப்படலாமா? சே...சே! கூடாது! கூடாது!" என்றாள் மரகதத்தம்மை. கன்னங்களின் இருபுறங்களையும் வலதுகை நுனிவிரலால் துடைத்துக் கொண்டாள். மாரகச் சேலையை இழுத்துப் போர்த்துக் கொண்டாள். அந்த இழுப்புக்குள் ரவிக்கை யின் கைப்பகுதிகள் கூட முடங்கிவிட்டன போலும்!

திருவாளர் ஆனந்தரங்கத்தின் முகம் விகாரமடைந் தது உள்ளத்தின் சலனத்தை அவரது முகவிலாசம் எவ்வளவுதான் கட்டுப்படுத்த முயன்றாலும், முடிய வில்லை. அவருடைய கண்களில் செம்மை படர்ந்தது. அவர் மறு பேச்சாடாமல், ஒதுங்கினார். ஜாக்கெட் துணிகள் சிலவற்றை நோட்டமிட்டார்.

காஷியர் குமாரதேவன், இளம் மீசையை இப்போது நாசூக்காக வருடிவிட்டுக்கொண்டான். தமிழ்ச்சுடர் கொடுத்த 'டோஸ்' இப்போதுதான் வேலை செய்ததோ? இல்லாவிட்டால், முன்னமேயே அவன் தன் ஆசை

மீசையை நினைத்திருக்கமாட்டானா? அலுவல் முடிந்ததும் தமிழ்ச்சுடரைப் பார்த்தான். பார்த்த சூட்டுடன் 'டெலி போன் டயலி'ல் எண்களைச் சுழற்றினான்.

அதற்குள் வாசற்புறத்தில் பிளஷர் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து ஓர் இளைஞன் வந்திறங்கினான். அவன் கடையினுள் நுழைந்ததுதான் தாமதம், தாமத மின்றி அங்கு அழகான அமைதி பரவத்தொடங்கியது. காஷியர் எழுந்து வெளிப்புறம் வந்து நின்றான்.

இறங்கின இளைஞன் 'காஷ்' மேஜையை ஒட்டி உள்ளே நுழைந்து சுழல் நாற்காலியில் ஒயிலாக அமர்ந் தான். அவன்தான் சின்ன முதலாளி — அதாவது, பெரிய முதலாளியான அவன் தகப்பனார் அவனிடம் கடையை ஒப்படைத்ததற்கப்புறம், அப்போதிருந்த சின்ன முதலாளி என்ற அதே பட்டத்துடனே இப் போதும் அவன் 'ராஜ்யபாரம்' செலுத்தி வந்தான். அவன் பெயர்: ராஜசேகரன். ராஜகளைதான். பெயர்ப் பொருத்தம் சில தருணங்களில் 'வாகாய்' அமைந்து கை கூடுவது இல்லையா?— அப்படிப்பட்ட பாங்கு.

விஷயத்தை மேலிடத்தில் சமர்ப்பித்தான் குமார தேவன்.

ராஜசேகரன் தன் ஆசனத்தை விட்டு எழுந்தான். வலது கை மோதிரவிரலில் ஒளிவீசிய வைரங்கள் கவர்ச்சியைக் காட்டின. வெளிப்புறம் வந்து நின்றான். மஸ்லின் வேஷ்டி தரையைக் கூட்டியது. தரையைக் கூட்ட எடுபிடிகள் இருந்தனரென்பதும் உண்மைதான். மரகதத்தம்மையை நாடினான். அருகில் நின்ற தமிழ்ச் சுடரின் சாயலைக் கணித்தவனாக அவன் அண்டிப் போனான்,, 'என்னோட ஆணைக்குக் கட்டுப்பட்ட சம்பளக் காரன் குமாரதேவன். அவன் சொல்லைத் தப்பாக

நினைத்துக் கொள்ளாதீங்க. முன்னே பின்னே சொல்லியிருந்தாலும், அதைப் பொருட்படுத்தக் கூடாது. நான் இந்த 'காமாட்சி ஸில்க் பாலஸி'ன் ராஜா. நீங்க உங்களுக்காக—மன்னிச்சிடுங்க—உங்க மகளுக்காக—எடுத்துக் கொண்ட துணிகளை எடுத்துக் கிட்டுப்போங்க. பில்லையும் நீங்க வச்சுக்கங்க. உங்க செளகரியப் பிரகாரம் பணத்தை அனுப்பி வையுங்க!'' என்று நயமான வார்த்தைகளால் பேசினான் ராஜசேகரன். ''சமுதாயத் துரோகிகள் மலிந்துவரும் நேரம் இது; ரூபாய் நோட்டுக்களை கவனமாகப் பார்த்து வாங்குங்க அம்மா!'' என்றும் எச்சரித்தான்.

அவ்விளைஞனை அவனது நற்பண்பைப் போற்றும் அளவில் பெருந்தன்மை கொண்ட அதிசயத்துடன் பார்த்துவிட்டு அன்னையைப் பார்த்தாள் தமிழ்ச்சுடர். மிஸ்டர் ராஜசேகருக்கு நன்றி சொல்லிட்டு 'வா அம்மா, போகலாம். உனக்குப் படிப்பு ரொம்ப இருக்குது!', என்றாள்; தாய் சொன்ன நன்றியின் சொல் அலையைக் காதுகளில் வாங்கியவளாக அங்கிருந்து நகர்ந்தாள் தமிழ்ச்சுடர்.

மகள் முன்னே செல்ல, தாய் பின்னே தொடரலானாள்.

மரகதத் தம்மையின் பார்வையில் மீண்டும் ஆனந்தரங்கம் தட்டுப் பட்டார். அவர் கக்கிய புகை நெஞ்சில் எரிந்து கொண்டிருந்த நெருப்பினின்றும் வெளிக்கிளம்பியிருக்குமோ, என்னவோ?

வழியில் மரகதத்தம்மை சொன்ன கதையின் ஆரம்பம், வீட்டின் மொட்டை மாடியில்தான் நிறைவு கண்டது. தமிழ்ச்சுடர் பெருமூச்சுடன் தன்னை ஈன்றவளைப் பார்த்தபோது, அவளது இமைவட்டப் பெரு

வெளியில் துளிர்த்திருந்த ஈரத்தைத் தரிசித்தாள். எதிர்த்தரப்பில் அன்று அரிதாகி விட்ட அந்த ஈரத்திற்குப் 'புணை'யா இந்த ஈரம்?—ஊஹூம்! ... ...

* * *

அருகிருந்த அம்மணியின் கைக் குழந்தை ஒன்று தமிழ்ச்சுடரின் கன்னத்தை வருடியது. தமிழ்ச்சுடர் வாரிச் சுருட்டிக் கொண்டு விழித்தாள். சுப நினைவு பெற்றாள்.

மேடையில் தலைவர் ஆனந்தரங்கம் எழுந்து நின்று பேசத் தொடங்கியிருந்தார்.

குமாரி தமிழ்ச்சுடரின் புலன்கள் கூர்மை பெற்றன.

" ... குமாரி தமிழ்ச்சுடருக்கு என்பேரில் நிரம்பவும் கோபமாகயிருக்கும். அதற்கும் காரணம் இருக்கத்தான் செய்கிறது. அது எங்கள் குடும்ப வியவகாரம். ஆனாலும், தமிழ்ச்சுடர் மீது எனக்குத் துளியும் கோபமில்லை. என் கையால் 'அது' பரிசை வாங்க மறுத்தால் பரவாயில்லை. என் மனமார நான் வாழ்த்தும் வாழ்த்தை 'அது' நிச்சயம் ஏற்க மறுக்க முடியாதல்லவா? 'அதை' மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன். 'அது' சகல சௌபாக்கியங்களுடன் சிறப்புற்று விளங்கவேண்டுமென்பதே என் ஆசியாகும்! ...இம்மாதிரி இலக்கியப்பரிசுகளை இன்னும் நிறைய 'அது' வாங்க அனுக்கிரகம் செய்யும்படி நான் கும்பிடக்கூடிய அனுமாரை வேண்டுகிறேன்!"

ஆனந்தரங்கம் இருக்கையில் உட்கார்ந்தார்.

தமிழ்ச்சுடரின் மேனி புல்லரித்தது. ஆனந்தரங்கத்தின் வாழ்த்துப் பேச்சு அவள் மனத்தைத் தொட்டது. அப்பேச்சின்லாழத்தில் ஒருவகைப்பட்ட—இனம்புரியாத

மாசம் மண்டிய அன்பும் பரிவும் அவன் விழிகளிலே ஈரத்தை உண்டு பண்ணின.

நன்றியுரை முடிந்தது.

அவள் எழுந்தாள். எழுந்து நடந்தாள். அவள் ஆவலுடன் கண்டு பேசவிரும்பிய அந்த முகம்—அந்த முகத்துக்கு உடைய உதயணன் அவளைப் பார்த்தும் பாராதது போல் முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு நழுவி விட்டதை அவள் பூரணமாகக் கண்டாள்.

## 3. கொல்லிக் குடவரைப் பாவை!

சென்னை மாநகரத்தில் இந்நாளிலே பஸ்பிடிப்பது என்பது அந்த நாளையிலேயே கோட்டை கொத்தளங் களைப் பிடிப்பதுபோலத்தான்!

கூட்டம் கணித்து, தோது பார்த்துப் பஸ் பிடித்து, பஸ் ஏறி வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் குமாரி தமிழ்ச் சுடர். வீட்டை விட்டுப் புறப்பட்ட போதிருந்த மகிழ் வின் பெருக்கம் இப்போது சற்றே அடங்கிவிட்ட மாதிரி இருந்தது. திருநாளைப் பார்க்கத் துடிக்கும் குழந்தை திருவிழாவுக்குப் போய்த் திரும்பினதும் வாயடைத்து விடுமே, அப்படிப்பட்ட நிலைதான்!

இலக்கியப் பரிசுக்கான தொகை, 'செக்' ரூபத்தில் இருந்தது. அதை உறையுடனேயே தன் தாயிடம் கொடுத்தாள்; கொடுக்கப்பட்ட மலர் மாலையையும் கொடுத்தாள்.

ஈன்றவள் பெரிதும் உவந்தாள். மகளுக்கு வாய்த் திட்ட சீரும் சிறப்பும் அவளை அமைதியடையச் செய்தன!

தமிழ்ச்சுடரின் அப்பா உயிருடன் இருந்திருந்தால்...இந் நேரம் குதித்துக் கும்மாளம் போட்டிருப்பாரே!

'என் மகள் முதல்பரிசு வாங்கியிருக்காளே, தெரியுமா?' என்று தன் நண்பர்களிடமெல்லாம் 'போன்' பண்ணித் தெரிவித்து மகிழ்வு காட்டியிருப்பாரே? இந் நினைவை மனத்திற்குக்கொண்டுவந்து பார்த்தாள் மரகதத்தம்மை. நெஞ்சம் கலங்கியது. அக் கலக்கத்தை தன் புதல்வி அறிந்துவிடக்கூடாதே என்கிற அவசரத்தில் அவள் முகத்தை லாகவமாக துடைத்துக் கொண்டாள். பிறகு மகளைப் பார்த்தாள். பார்த்துவிட்டு தன் கையில் இருந்த மலர் மாலையையும் பார்த்தாள், மரகதத்தம்மை! 'தமிழ்ச்சுடர் பரிட்சை எழுதி பட்டம் வாங்கியவுடன், அவளுக்குக் கல்யாணம் செய்துவிடவேணும்! அப்போது தான் என் கவலையும் கடமையும் முடிஞ்சதாக அர்த்தம்!' எதையோ எண்ணிப் பெருமூச் செறிந்தாள் அவள். மனத்தளர்ச்சில் திடம் பதிந்தது.

மறுபடியும் அவள் திரும்பிப் பார்த்தாள். தன் கணவரின் படத்திற்கு முன் நின்று கொண்டு கை தொழுது கொண்டிருந்தாள். தமிழ்ச்சுடர், தன் தந்தையின் படத்திற்கு முன் பயபக்தியுடன் நின்று வணங்கிக் கொண்டிருந்தாள்.

மரகதத்தம்மையின் கண்ணீர் வழிந்தது. அவளது தளர்ந்தொடுங்கிய மனம் ரொம்பவும் சங்கடப்பட்டது.

தனக்கு ஒரு மாறுதல் உண்டாக்கிக் கொள்ள வேண்டும். போலிருந்தது அவளுக்கு. ஆகவே அவள் தன் புத்திரியை நெருங்கி அவளது தோள்மீது ஆதரவாகக் கைவிரல்களைப் பதித்தாள். "உன் எண்ணங்கள் எல்லாத்தையும் உன் அப்பா நிறைவேத்திக் கொடுப்பாரம்மா!" என்றாள். அவள் நா தழுதழுத்தது.

தமிழ்ச்சுடர் திரும்பினுள்.

''வாம்மா, சாப்பிடலாம். வெள்ளனவே சமைச்சது!'' என்ருள் தாய்.

மகள் பின்தொடர்ந்தாள்.

பீரோவில் 'செக்'கைப் பத்திரமாக வைத்துவிட்டுத் திரும்பினுள் மரகதத்தம்மை. மகளுக்கு 'ஒரு பிடி சோறு' கூடுதலாகவே போட்டாள். அவளும் அட்டி சொல்லாமல் சாப்பிட்டாள்

'சூரிய காந்தி' நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தது - ரேடியோவில்.

அண்டிக் கொண்டிருந்த பட்டப் பரீட்சைகளின் நினைவை நெஞ்சில் சுமந்தவளாக, தன் படிப்பறையில் வந்து அமர்ந்தாள் தமிழ்ச்சுடர். படிப்பு ஒன்றில் மட்டிலுமே மனம் ஒன்றிய மனத்துடன் அவள் மேஜை மீதிருந்த புத்தகங்களைப் புரட்டியெடுத்தாள். வரலாற்றுடன் இரண்டறக் கலந்துவிட்ட தாஷ்காண்ட் சமாதானத் தலைவரின் படங்கள் பல வெளியாகியிருந்த அவ்விதழை மறுபடியும் புரட்டினுள். விழிவரம்புகளைத் துடைத்துக்கொண்டாள். அவளது நளினமான விரல்கள் கல்லூரிப் பாடப் புத்தகங்களைப் புரட்டின. தமிழ்ப் பாடப் புத்தகம் முன்னே வந்தது.

கபிலரின் குறுந்தொகைப் பாடல் ஒன்று முன்தினம் பேராசிரியை விளக்கம் சொல்லிக் கொடுத்திருந்த சிந்தனைகள் அவள் நினைவினை வருடி நின்றன.

காரிக் கோமான் கொல்லி மலையை ஆண்டுவந்தான்.

அங்கே குறமகள் ஒருத்தி. அவளை ஓர் இளைஞன் காதல் செய்கிருன்.

அவளும் அவனை விரும்புகிறுள், ஆகவே அவள் மனத்தால் விரும்பிய அதே இளைஞனுக்கே அவளை மணம் முடித்துவைக்க ஏற்பாடுகள் நடக்கின்றன.

இந் நிலையிலே, தலைவனைக் கண்டு பேசி உறவாட அவனது அன்புத் தோழன் வருகிறுன். அவனுக்கு அந்தக் கொல்லிமலைப் பூவையைப் பற்றி விளக்கம் செய்கிறுன் நண்பன்.

தங்களுடைய இல்லங்களை நாடி வருபவர்களுக்கும் யானைத் தந்தங்களை விற்று உணவளிக்கும் இனிய குண நலம் பூண்டவர்கள் கொல்லிமலை மக்கள். அவர்களின் குடியில் பிறந்த நற்குலப் பாவை அவள்... நீ காதலிக்கும்—உன்னைக் காதலிக்கும் அப்பெண், 'வல்வில்லோரி கொல்லிக் குடவரைப் பாவை யாவாள்!''

இக்கட்டத்தை அம்மையார் நயம்பட உரைத்த பான்மையை அவள் திரும்பவும் ரசித்தாள். பிறகு உரிய பாடலை மனனம் செய்யும் திடத்துடன் இரண்டு முறை புத்தகத்தைப் பார்த்துப் படித்தாள். உரக்கப் படித்த பின்னர் புத்தகத்தை மூடி வைத்து விட்டு மன திற்குள் பாடல்வரிகளைச் சொல்லிப் பார்த்தாள். தீடு மாற்றம் கண்டது. அடுத்த திருப்பத்தில் சரியாகவே அமைந்து விட்டது உள்ளூரச் சந்தோஷம். ஒரு மிடறு குளிர் நீர் அருந்தி விட்டு எழுந்தாள்.

கடற்கரைநாடிப் புறப்பட்டு கொண்டிருந்த இளம் ஜோடிகளை— இளைய இணைகளை அவள் ஆவல் மீதூரப் பார்த்தாள். ஞாயிற்றுக்கிழமை யென்றுல்' ஒப்பனையில் கூட ஒரு மாற்றம் பிறந்து விடும் போலிருக்கிறது!...

சினிமா விளம்பரத் தள்ளு வண்டி ஒன்று குறுக்கே சென்றது. மக்கள் திலகமும் நடிகர் திலகமும் சேர்ந்து நடித்த படத்தின் விளம்பர வண்டி அது!

அதையடுத்து ஓரிரு இளைஞர்கள் தன்னந்தனியாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

அவர்களைக் கண்டதும், அவளுக்கு உதயணனின் நினைவு நெஞ்சில் ஊறியது. அந்நினைவின் திடத்தில் அவள் அவனைச் சந்தித்த நிகழ்ச்சியை எண்ணினாள்; அவன் அவள் பால் ஆதரவு காட்டிய போக்கை எண்ணினாள்; தனக்குத் தானே புன்னகை செய்து கொண்டாள். அதே சமயம், உதயணன் காலையில் மாறுமுகம் காட்டி மறைந்த நினைவின் நிழலில் அவளது வதனமும் சஞ்சலம் அடைந்து மாற்றம் அடைந்தது. அப்போது:

"சுடர்!" என்ற குரல் ஒலி கேட்டது. காரொன்று வந்து நின்றது.

அங்கு அவளது தோழி மல்லிகா பதட்டம் பூண்டு காரிலிருந்து இறங்கினாள்.

"மிஸ்டர் உதயணன் இருக்கிறாரல்லவா? அவரது தகப்பனார் திடுப்பென்று நோய்வாய்ப் பட்டுக் கிடக்கிறார், ஜெனரல் ஆஸ்பத்திரியில். உதயணனின் அப்பா ஆனந்தரங்கம் அவர்கள் உன் அம்மாவைப் பார்க்க விரும்புகிறாராம். நீயும் உன் அம்மாவும் உடனடியாக இப்போதே புறப்படவேண்டும், சுடர்!" என்றாள் மல்லிகா.

'உதயணனின் தகப்பனாரா அந்த ஆனந்தரங்கம்?' என்ற ஒரே கேள்வி தமிழ்ச் சுடரைச் சுற்றி வளைத்தது. விஷயத்தை அன்னையிடம் சொன்னாள். மரகதத்தம்மை அவளுடன் தொடர மறுத்துவிட்டாள்.

கடைசில் தமிழ்ச்சுடர் மட்டுமே தன் தோழியுடன் புறப்பட வேண்டியவள் ஆனாள்!

# 4. மரகதத்தம்மையும் செங்கமலவல்லியும்

விதியும் வினையும் விளையாடிய இடம் அல்லவா அது!

தெய்வத்தைப் புதிராக்கி, அந்தப்புதிரின் விதியாகவும், வினையாகவும் இயங்கி, அல்லது, இயக்கப்பட்டு விளையாடிக்கொண்டு, விளையாட்டுக் காட்டிகொண்டும் இருந்த இடம் அது.

ஆம்; அது தான் ஜெனரல் ஆஸ்பத்திரி.

தமிழ்ச்சுடரை வழிகாட்டி அழைத்துச் சென்றாள் தோழி மல்லிகா.

நெஞ்சத்தின் பதட்டமும் நினைவின் தயக்கமும் தமிழ்ச்சுடரின் குதிக்கால்களில் தட்டுமறித்துக் கிடந்தவாறு, அவளது நடையைத் தடைப்படுத்தின. புடவையைச் செம்மை செய்து கொண்டு அவள் நடந்தாள். அந்திச் செவ்வானத்தின் கதிர்களின் நளினத்தை ரசிக்க அவளுக்கு மனம் ஏது? அதை அனுபவிக்கும் நிலையிலா அவள் இருந்தாள்?

அது 'பார்வையாளர்கள் நேரம்.' ஜனங்கள் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தார்கள்.

கண்ணீரும் சிரிப்பும் வந்துபோய்க் கொண்டிருந்தன.

மனத்தின் சொல்லொண்ணாத இடர்பாடுகளையெல்லாம் மூடி மறைத்த வண்ணம், தன்போக்கில் இயங்கிக் கொண்டிருந்தது அந்த ஹால்; அது ஸ்பெஷல் வார்ட்.

மல்லிகா பதினெட்டாம் எண் அறையில் அடி யெடுத்து வைத்தாள்.

தமிழ்ச்சுடர் காலேவிழாவில் நினைவு பதித்தவளாகச் சுற்றுமுற்றும் பார்வையை அலேயவிட்டவாறு, சற்றே தாமதித்தாள். உடை சரியாக இருக்கிறதா என்று கவனிக்கத் தன்னைத் தானே குனிந்து பார்த்துக் கொண்டாள், நினைவின் நிழல் தொண்டையைச் சூழ, அவள் தலையை உயர்த்தியபோது, "உள்ளே வா", என்று தன் தோழி அழைக்கக் கண்டாள்; உணர்ந்தாள். பதட்டத்தின் பாதையை வேதனைத் தடுமாற்றத்தின் பாதங்களால் அளந்து கடந்த வண்ணம் உள்ளே நடந்தாள். செருப்புக் காலுடன் செல்வதை உணர்ந்ததும், பின்வசமாக திரும்பி, வெளிப்புறத்தில் காலணிகளைப் போட்டு விட்டு உள்ளே நுழைந்தாள். நெடுமூச்சின் நீள் துணை கொண்டு அவள் சில 'பெட்'களைக் கடந்தாள்.

அங்கே!

திருவாளர் ஆனந்தரங்கம் அவர்கள் சுயப்பிரக்ஞை யற்ற நிலேயில் கிடந்தார். அவரது கம்பீரமான முகம் இப்போது களேயிழந்து காணப்பட்டது. அம் முகத்தில் மரணக்களே படிந்திருப்பதாக அவளுக்குப்பட்டது. தனக்குரிய பரிசை ஆனந்தரங்கம் தன்னிடம் கொடுக்க முன்வந்தபோது, அவள் அதை ஏற்க மறுத்த நிகழ்ச்சியை அவள் வேதனையுடன் நினைவு கூர்ந்தாள்; புன்னகையும் புது நிலவுமாகக் காணப்படும் உதயணனின் திடீர் மாற்றத்துக்ககான விஷயத்தைப் பின்னர் அவள் உய்த்துணர்ந்த நேரத்தில் அவள் மனம் அடைந்த துன்பத்தையும் அவளால் மறந்து விடமுடியாது.

அன்புக்குச் சோதனை தான் துன்பமா? துன்பத்தின் நிழலில்தான் அன்பு பரிபக்குவம் எய்துமோ?

குமாரி தமிழ்ச்சுடர் தலையை நன்றாக உயர்த்திய தருணத்தில், அவள் உதயணனைக் கண்டாள். அழகும் அமைதியும் அரவணைத்துக் கிடக்கும் அந்த முகத்தில் அப்போது அவள் ஆறாத்துயரத்தைக் கண்டாள். அவள் நெஞ்சம் விம்மித் துடித்தது.

''அப்பாவுக்கு இப்போது எப்படி இருக்குதுங்க?'' என்று கேட்டாள் தமிழ்ச்சுடர்.

''அப்பா எங்களைச் சோதிச்சிடு வாங்க என்னுதான் தோணுது!''

''உடம்புக்கு என்ன?!''

''நெஞ்சுவலி!''

அவளுக்குத் 'திக்' கென்றது. 'அம்மாவும் வந்திருந்தால் நல்லதாய் இருந்திருக்குமே!' என்று அவள் எண்ணமிடலானாள். தன் அன்னையின் இதயத்தை — அந்த இதயத்தின் பல நாளையத் துன்ப வடுவை அவள் அறியாதவள் அல்லவே!—ஆனாலும் நிலை கடந்த இந் நிலையிலே—வன்மம் கடந்த இந்த நேரத்திலே தன் அன்னை வந்து போவதே சிறந்தது என்று அவள் தீர்க்கமாக அறிந்தாள்.

மல்லிகாவும் தமிழ்ச்சுடரும் ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டார்கள் இருவர் விழிகளிலும் நீர்க்கலக்கம் இருந்தது.

''அப்பா! ... ... அப்பா!'' என்று தாழ்குரல் எடுத்து விளித்தான் உதயணன். தன் நெற்றியில் தொங்கிய சுருள் அலை முடிகளை ஒதுக்கிவிட நினைவின்றி—தன் கதுப்புக் கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரின் கோடுகளை வழித்துவிடச் சிந்தையற்று—'டெர்லின் ஸ்லாக்'கின் கழுத்துப்பட்டையின் மேல்பகுதி கழுத்தினுள் திணிக்கப்

பட்டிருந்த கோலத்தைத் திருத்த மனமிழந்து அவன் தந்தையை அழைத்தான்.

ஆனந்தரங்கம் ஆடவில்லை; அசையவில்லை. கண்கள் மூடியவை மூடியபடியே இருந்தன. மார்பில் மட்டும் லேசாகத் துடிப்பு இயங்கிக் கொண்டிருந்தது. போர்த்தி யிருந்த போர்வை மட்டும் எம்பி எம்பி இறங்கிக் கொண் டிருந்தது.

உதயணன் செருமினான்.

தமிழ்ச்சுடர் அவனை அண்டினாள். உணர்ச்சிச் சுழிப் பின் கம்பீரமான துடிப்புடன் அவன் கரங்களைப் பற்றினாள். "அழாதீர்கள், தெய்வம் நம்மைச் சோதிச் சிடாதுங்க," என்று உரிமையின் பாந்தவ்யத்தோடு அவள் ஆறுதல் சொன்னாள்.

அவளது அச் சொற்கள் அவன் மனத்தை நெகிழச் செய்திருக்க வேண்டும்!—அவன் சிறு குழந்தைபோல விம்மிவிம்மி அழுதான்.

தமிழ்ச்சுடருக்கு நெஞ்சு வெடித்துவிடும் போலி ருந்தது.

அவன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். பிறகு முகத்தை டவலினால் துடைத்துக் கொண்டான்; மருந்து வைத்திருக்கும் அலமாரியிலிருந்து மருந்துச் சீசாவை எடுத்து அவுன்ஸ் கிளாசில் அளவு பார்த்து மருந்து ஊற்றினான். பிறகு படுக்கையை நெருங்கினான். ''அப்பா!'' என்று சற்று பலமான குரலில் கூப்பிட்டான். அதைத் தொடர்ந்து அவரது மேனியைத் தொட்டு உசுப் பினான்.

அப்போது, 'டெலிபோன் கால்' வந்திருப்பதாக மல்லிகா தெரிவித்து, ரிஸிவரை அவனிடம் நீட்டினாள்.

''ஆமம்மா! இன்னும் அப்பா கண் திறக்கவில்லை. நீங்க வாங்க; பத்தியம் வச்சு எடுத்துக் கிட்டே வந்திடுங்க…! ஆமா…ம்…சரி!…இளைய ராஜாவை அழைச்சுக் கிட்டு வாறீங்களா?…ம்…சரி!…தூங்குருனு தம்பி? சரி! வச்சிடட்டுமாம்மா?…ம்…!''

ரிஸீவரை வாங்கி வைத்தாள் மல்லிகா.

உதயணனுக்குப் பயம் கவ்வவே, வலதுபுறம் திரும்பினான். அந்த வார்டின் டாக்டரை நெருங்கினான்; விவரத்தைச் சொன்னான். திரும்பியபோது, டாக்டர் மோகன சுந்தரம் வந்தார், கழுத்தில் பாம்பாகச் சுற்றிக் கிடந்த நாடிக் குழலுடன்.

டாக்டர் வருவதை அறிந்த தமிழ்ச்சுடர் சிறிது பின்னால் நகர்ந்துகொண்டாள். ''யார், சுடரா?'' என்ற ஆதரவான அன்புக் குரல் கேட்டு அவள் தலையை உயர்த்தினாள். அவள் கண்களில் பிரகாசம் தழைத்தது.

''சௌக்கியமா, சுடர்?''

''ஆமாம்.''

வந்த டாக்டரையும் வந்தணைந்த அறிமுகத்தையும் ஒருகணம் கண்டான் உதயணன். ''டாக்டர் ஸார்… அப்பா?…'' என்று பதட்டத்துடன் நினைவூட்ட வேண்டியவன் ஆனான்.

''ஓ…ஐ ஆம் ஸாரி……!…'' என்று சொல்லிக் கொண்டே டாக்டர் சோதனையில் இறங்கினார். பிறகு, ''மறுபடியும் அந்த இன்ஜெக்ஷனைச் செலுத்துவோம். இன்றிரவு நல்ல பொழுதாகக் கழிந்துவிட்டால், அப்புறம் கவலையில்லை!'' என்று சொல்லி, ஊசி மருந்தைச் செலுத்தினார். 'ஸ்ரிஞ்சு' டன் திரும்பிச் சென்றாள் மருத்துவப் பணிப்பெண்.

"கொஞ்சம் ஹார்லிக்ஸ்···ஒருடோஸ் கொடுங்கள்."

"ஆகட்டும், டாக்டர் ஸார்."

டாக்டர் மோகனசுந்தரம் அப்போது தமிழ்ச்சுடரிடமும் உதயணனிடமும் சொல்லிக்கொண்டு நகரலானார்.

இதழ்களைத் திறந்து வாய் இடுக்கில் ஹார்லிக்ஸ் கலவை நீரை ஊற்றினான் உதயணன்.

தமிழ்ச்சுடர் டவலை எடுத்து, அவரது இதழ்களில் வழிந்த ஹார்லிக்ஸ் கலவையைத் துடைத்தாள்.

விநாடிகளின் தேய்வுக்குப் பின்னே, ஆனந்தரங்கம் மெல்லக் கண்களைத் திறந்தார். அவர் விழிகளை உருட்டி உருட்டி விழித்தார். பிறகு அவர் பார்வை தமிழ்ச்சுடர்பால் நிலைத்தது. "அம்மா! நீயா?" என்றார்.

"ஆமாங்க, ஐயா!"

அவரால் எழுந்திருக்க முடியவில்லை.

"உன் அம்மா வரவில்லையாம்மா?"

தமிழ்ச்சுடர் தலையை உலுக்கினாள், 'இல்லை' என்ற பாவனையில்.

"இன்னுமா உன் அம்மாவுக்கு என் பேரிலே இருக்கிற வன்மம் குறையலே?"

அவரால் அதற்குமேல் பேச முடியவில்லை. அவரது கண்களினின்றும் கண்ணீர் காட்டாற்று வெள்ளமாகப் புரண்டது.

இன்னும் என்னவோ சொல்ல வாயெடுத்தார். அவரால் முடியவில்லை. அதற்கு அவர் தம் நெஞ்சை இறுக்கிப் பிடித்தவாறு, மீண்டும் கண்களை மூடிக்கொண்

டார். மூச்சு மட்டும்தான் லேசாக வந்துகொண்டிருந்தது.

"அப்பா! அப்பா!" என்று அலறினன், உதயணன்.

பிறகு, தமிழ்ச்சுடரின் சார்பில் பார்வையினைத் திருப்பினன். அலமாரியிலிருந்த தந்தப் பெட்டி ஒன்றை எடுத்து அவளிடம் சமர்ப்பித்தான்.

"அப்பா உன் அம்மாவினிடம் கொடுக்கச் சொன்னுங்க. உங்க அம்மாகிட்டே இதைக் கொடுத்திடு!" என்று விம்மினன், உதயணன்.

தமிழ்ச்சுடர் அவனைப் பார்க்கத் தெம்பிழந்து, மௌனக் கோலத்துடன் அதை வாங்கிக் கையில் வைத்துக்கொண்டாள். அவளது பூங்கரங்கள் புயலிடைப் பூவாக அல்லாடின.

அப்போது:

உதயணனின் தாய் செங்கமலவல்லியுடன் தமிழ்ச்சுடரின் அன்னை மரகதத்தம்மையும் வந்து நின்றூர்கள்.

## 5. பொட்டுத் தழும்பு

அந்தத் தந்தப் பெட்டியை மார்புடன் சாய்த்துக் கொண்டு நின்ற தமிழ்ச்சுடர், அப்பெட்டியின் உறவு மேனியையும் அப்பெட்டியின் நினைவு இதயத்தையும் உறுத்திக் கொண்டேயிருந்த நிலையுடன், விதியை ஆராயும் மாணவிபோல அவள் அந்த அழகிய பெட்டியின் உள்ளே அடங்கியிருந்த பொருளைப் பற்றிய சிந்தனையில் ஈடுபட்டு லயித்து, தடுமாறித் தத்தளித்தபோதுதான், அங்கு அன்பின் ஒரு காட்சிபோல அவள் செங்கமலவல்லியையும் மரகதத்தம்மையையும் கண்டாள்.

தமிழ்ச்சுடர் விழி விரித்துப் பார்வையிட்ட அதே நேரத்தில் உதயணனும் அவ்விருவர்களையும் நோக்கினான்.

செங்கமலவல்லியும் மரகதத்தம்மையும் 'விதி'யின் இரு வேறு வகைப்பட்ட சோதனைக் கருவிகளாகத் தோன்றினார்களோ?

செங்கமலவல்லியின் கொண்டையில் தளரத் தளரப் பூக்கள் சிரித்துக்கொண்டிருந்தன.

ஆனால் அவளோ விழிமறுகிச் செருமிக்கொண்டேயிருந்தாள்; ஆரணிப் பட்டின் ஓரங்களின் ஆறுத்துயரின் வடிகால் மடை கட்டியது.

மரகதத்தம்மையின் கொண்டையில் வெறுமை பொலிந்தது கட்டுப்படுத்த முயற்சி செய்யாத ஒருவகையான பொருமலும் விம்மலும் அவளிலிருந்து ஏமாற்றத்துடனும் ஆக்ரோஷத்துடனும் வெளியேறத் துடித்தன.

கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக்கொண்ட உதயணன் தன் அன்னையை உள்ளத் தேம்பலுடன் பார்த்தான். "அப்பாவின் நிலைமையை எவ்விதத்திலும் கணிக்க முடியவில்லையே! என்ன செய்வது அம்மா? அப்பாவுக்கும் நமக்கும் தெய்வமும் டாக்டரும்தான் துணை," என்று தாழ்குரல் எடுத்து ஓதினான் அவன்.

செங்கமலவல்லி சேலை நுனியை வாயில் திணித்த வண்ணம் விம்மினாள். அவளது தோளை ஆதரவுடன் தடவிக்கொடுத்தாள் மரகதத்தம்மை.

அக்காட்சியைக் கண்ணுற்றதும் உதயணனின் நெஞ்சம் விம்மியது. 'யார் இந்த அம்மணி?' என்ற பாவனையில் அவன் மரகதத்தம்மையை நோக்கினான்.

அவன் பார்வையைப் புரிந்து கொண்ட பாங்கில் அவனை அண்டினாள், தமிழ்ச்சுடர்.

"இதுதான் என் அம்மா" என்று தெரிவித்தாள் தமிழ்ச்சுடர்.

"ஓஹோ, அப்படியா?" என்று அதிசயத்துடன் சொல்லியபடி இதழ்க்கங்களில் துயரத்தையும் மீறித் தூவப்பட்ட இளமுகையுடன் மரகதத்தம்மையை நோக்கிக் கைகளைக் குவித்தான், உதயணன்.

"இவர் பெயர் உதயணன் அவங்களோட பிள்ளை," என்று சன்னக் குரலில் சொன்னாள் தமிழ்ச்சுடர். அவள் கைகளை நீட்டி, ஆனந்தரங்கம் செங்கமலவல்லி ஜோடியைச் சாடை காட்டினாள்.

மரகதத்தம்மைக்குப் புரிந்துவிட்டது. இனம் அறியாத புதிய மன நெகிழ்ச்சியுடன் அவனை நெருங்கினாள் அவள். "அப்பாவுக்கு என்ன இப்படி திடுதிப்பென்று?... எனக்கு விஷயம் இவ்வளவு சீரியஸ்னு தெரியாது. அப்புறம் என் பெண் சொன்னது. புறப்படலாம்னு நினைச்சுக்கிட்டு இருக்கிறப்ப உங்க அம்மா வந்து என்னைக் கையோடு அழைச்சுக்கிட்டு வந்திட்டாங்க," என்று அவளே பேச்சைத் தொடங்கி அவளே பேச்சை நிறுத்தினாள். அவள் பார்வை ஆனந்தரங்கத்தின் படுக்கையைச் சுற்றியே அலைந்திருந்தது. கண்களின் கீழ் வட்டப் பகுதிகளில் நீர்ப் பளப்பளப்பு மின்னியது.

உதயணன் குனிந்த தலையுடன் குலைந்த நெஞ்சத்துடன் 'ஊம்' கொட்டிக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் பக்கவாட்டில் தன் தந்தையின் கட்டிலை நோக்கினான் அங்கிருந்த 'ஆயா' ஒருத்தி தன்னை அடையாளம் காட்டி அழைத்ததை அவன் கண்டு கொள்ள வெகுநேரம் ஆகவில்லை.

விரைந்தான் உதயணன். பார்வையாளர் நேரம் அதன் முடிவுக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்தது.

அப்போது உதயணனின் தகப்பனுரான ஆனந்தரங்கம் எதிர்பாராத விதமாக லேசாகக் கண்களைத் திறந்து அரைப்பார்வை பார்ப்பதைக் கண்டான். அவன் உடனே அப்பார்வையில் ஒரு திசைமாற்றம் ஏற்பட்டதையும் அவன் கவனிக்காமல் இல்லை. அம்மாறுதலில் ஏதோ ஒரு பரிவின் பாசமும், ஆற்ருமையின் ஆதர்சமும் ஆதங்கத்தின் நெட்டுயிர்ப்பும் கோடிட்டுப் பேசக் கண்டான். சாலையில் நிகழ்ந்த விழாவைப் பற்றியும் அவ்விழாவில் தன் தந்தையின் தனிப்பட்ட சொந்த வாழ்க்கையின் கௌரவத்துக்குப் பங்கம் விளைந்து விட்டதாக மனம் நொந்த வினையையும் அவன் கருத்தில் சீர்தூக்கிப் பார்க்கவே செய்தான்.

வாழ்க்கை சிலருக்கு எண்ணிய பிரகாரமே அமைந்து விடுகிறது. அவர்கள் கொடுத்துவைத்தவர்கள். அதனுல் தான் வாழ்க்கை எனும் இன்பச் சுரங்கத்திலிருந்து அவர்கள் களுக்களையும் களிப்புக்களையும் எடுத்துக்கொள்கிருர்கள். இவ்வகைப் பிரிவினின்றும் விலகியோ விலக்கப்பட்டோ வேறு சிலர் இருக்கிருர்கள். இவர்களுக்கு வாழ்க்கை அமைவது கிடையாது. ஆனுல் இவர்களாகவே வாழ்க்கையை அமைத்துக்கொள்கிருர்கள். அவ்வாறு அமைத்துக்கொண்ட வாழ்க்கையில் அவர்கள் என்னதான் மகிழ்வு நிலைகளைச் சுவீகரித்துக்கொள்ள பிரயத்தனப் பட்டாலும்—பகீரதப் பிரயத்தனப்பட்டாலுங்கூட அவர்களால் அவர்கள் எண்ணியபடி ஆனந்தங்களை—அபிலாஷைகளை — ஆர்வங்களை தன்மயமாக்கிக் கொள்ள முடிவதில்லை. ஆகவேதான், அவர்கட்கு வாழ்க்கையில் ஒரு குறை இன்னதென்று பகுத்துக் கூறமுடியாத உணர்வுடன், அக்குறை எங்கிருந்து

புறப்பட்டு வருத்துகிறது என்று உறுதியிட்டுக் கண்டு கொள்ள முடியாத மாயத் தாகத்துடன் ஊடுருவி வருகிறது. அவ்வேதனையே அவர்களுக்கு வேள்வித் தீயாக உருமாறி அவர்களை வாட்டி வதைக்கிறது. கண்ட கனவு கடைசி வரையிலும் பலிக்கவில்லையே எனும் உள்ளக் குறைபாடு அவர்களுக்கு விதியாகிறது; வினையாகிறது; விளையாட்டாகவும் ஆகிவிடுகிறது! ஆக, இப்படிப்பட்ட இருவேறு துருவத் துடிப்பின் நிறைவு—நிறைவின்மை ஆகிய நிர்ணயங்களுடன்தான் அவரவர்களுக்கு வாழ்க்கை அமைந்து விடுகிறது. வாழ்க்கை அவர்கள் வரை தவிர்க்க முடியாத ஒரு விபத்து ஆகி விடுகிறது. வாழ்கிறார்கள்! அப்படியே வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள்!...

எதையோ நினைத்துக்கொண்ட உதயணன் வேறு எதையோ நினைத்துக்கொண்டான். அவன் மீண்டும் திருஷ்டியை மீட்டிய தருணத்தில் ஆனந்தரங்கம் எழுந்து திண்டில் சாய்ந்து கொண்டிருந்ததைக் கண்டான். அப்பாவின் நோக்கு மரகதத் தம்மையையே விழிபிதுங்க, விழிபிதுங்கப் பார்வை செலுத்தியவாறு இருந்த நுட்பம் அவனுக்குப் பிடிபடவே செய்தது.

"குமாரி தமிழ்ச்சுடருக்கு என் பேரில் நிரம்பவும் கோபமாகயிருக்கும்! அதற்கும் காரணம் இருக்கத்தான் செய்கிறது. அது எங்கள் குடும்ப விவகாரம். ஆனாலும், தமிழ்ச்சுடர் மீது எனக்குத் துளியும் கோபமில்லை. என் கையால் 'அது' பரிசை வாங்க மறுத்தால் பரவாயில்லை. என் மனமார நான் வாழ்த்தும் வாழ்த்தை 'அது' நிச்சயம் ஏற்க மறுக்கமுடியாதல்லவா? ஆகவே, 'அதை' மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன். அது சகல செளபாக்கியங்களுடன் சிறப்புற்று விளங்கவேண்டு மென்பதே என் ஆசியாகும்!—இம்மாதிரி இலக்கியப் பரிசுகளை 'அது'

இன்னும் நிறைய வாங்க அனுக்கிரகம் செய்யும்படி நான் கும்பிடக்கூடிய அனுமாரை வேண்டுகிறேன்''

தன் தந்தை மனநெகிழ்வுடன் எதையும் மறைக்காமல், எதையும் காட்டாமல் பேசிய அந்த நல்ல பண்பு உதயணனுக்கு இதம் தந்தது. 'அப்பாவின் ஏதோ ஒரு செயல் தமிழ்ச்சுடரின் தாயை வருத்தி வந்தது. அந்தச் செய்கை காரணமாகவே, அப்பா கையினால் அளிக்கவிருந்த பரிசிலைக்கூட தமிழ்ச்சுடர் ஏற்க மறுத்து விட்டாள்.'

இம் முடிவுக்குரிய ஆரம்பம்தான் என்னவென்று அவன் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான்.

ஆனால் அந்த ஆசையை அவன் தன் தந்தையிடம் பிரஸ்தாபிக்க முடியுமா என்ன?

மரகதத்தம்மை தன்னுடைய பாழ் நெற்றியைப் பதட்டத்துடன் தடவி வேர்வைமணிகளை விலக்க எத்தனம் செய்தபோது, நெற்றிப் பொட்டின் அந்தத் தழும்பு அவளது வலதுகை நுனிவிரலில் முனைப்பாகப் பட்டது. இருதயத்தின் மங்கலப் பகுதியின் தேய்ந்த இருட்குகையை விட்டு புறப்பட்ட நடுக்கம் அவளது வலது கை நுனிவிரலைச் சாடியது.

நடுக்கத்தின் பரிணாம வளர்ச்சி அழுகையாக உருவெடுத்தது. நடந்து வந்த பாதையின் பலதரப்பட்ட மேடுபள்ளங்களை அவள் அக்கணம் நினைத்துக் கொண்டாள். காலையில் பரிசளிப்பு விழாவில் தன் மகள் தன்னுடைய வெஞ்சினத்தை தன் சார்பாகப் பிரதிபலித்த அந்தப் பயங்கர விந்தையை அவள் எண்ணிய தருணத்திலே, அவளால் ஆனந்தரங்கத்தையோ, அல்லது உதயணனையோ தலையுயர்த்திப் பார்க்கக் கூடவில்லை. அதே சமயம் அருகில் சோகமே வடிவம் சமைத்து நின்று

கொண்டிருந்த செங்கமலவல்லியின் பரந்த மனத்தை அவள் எவ்வளவோ உள்ளூரப் பாராட்டவே செய்தாள்.

அப்போது...

"தம்பி, அப்பா ஏதோ சொல்லாத் துடிக்கிறுங்க. போய்ப் பார் தம்பி!" என்றுள் உதயணின் அன்னை.

உதயணன் விரைந்து சென்றுன்.

திண்டில் சாய்ந்திருந்த ஆனந்தரங்கம் தன் மகனிடம் சமிக்ஞை காட்டினுர். பிறகு அடித் தொண்டையில்பேசினுர். வார்த்தைகள் தீனமாகவும் குழறுபடியாகவும் வெளி வந்தன. அவர் பேச்சின் உட்கிடை அவனுக்குப் புரியவே செய்தது. மரகதத்தம்மையை அருகில் அழைக்கும்படி அவர் ஆணையிட்டார். இந்த மட்டில் அவனுக்குச் செய்தி தெளிவாகப் புரிந்து விட்டது.

அவ்விஷயத்தை அவன் மரகதத்தம்மையிடம் கூறினுன்.

மரகதத்தம்மை காற்றில் அலைந்தகற்றை இழைகளை லாகவமாக ஒதுக்கிவிட்டவளாக, மெல்ல நடந்தாள். அவளுடன் கூட, தமிழ்ச்சுடரும் சென்றுள். தந்தப் பெட்டி நெஞ்சோடு அணைந்திருந்தது.

அப்பொழுது, நின்ற இடத்திலேயேநின்று விட்டாள் செங்கமலவல்லி.

தாயை நோக்கி வந்து விட்டான் உதயணன்.

இந்த இடப்பரிவர்த்தனை—இடமாறுதல் தமிழ்சுடரின் உள்ளத்தை என்னவோ செய்தது.

ஆனந்தரங்கம் இன்னும் தாராளமாக உள்ளே தள்ளி, தலையணைகளை பின்னுக்கு இழுத்துக் கொண்டு வசமாக உட்கார்ந்தார். மரகதத்தம்மையையும் தமிழ்ச்

சுடரையும் அவர் ஏக்கப் பெருமூச்சுடன் பார்த்து தலையை அசைத்து 'வாங்க' என்று வரவேற்றார்.

மகளும் தாயும் ஒருத்தியை ஒருத்தி கலவரத்துடன் பார்த்துக் கொண்டார்கள்.

"இப்ப எப்படி உடம்புக்கு இருக்கு?" என்று கட்டுப் படுத்த முடியாத வேதனையைக் கட்டுப்படுத்தியவளாக விஞச்சரம் தொடுத்தாள் மரகதத்தம்மை.

"என்னோட செங்கமலவல்லியின் நெற்றிப் பொட் டைப் பறிச்சுக்கிட்டுப் போயிடுவேனோன்னு பயப் படுறேன் நான்" என்றார் சீமான் ஆனந்தரங்கம்.

"அப்படி யெல்லாம் சொல்லாதீங்க. செங்கமல வல்லி அக்காளோட நல்ல மனத்துக்கு பகவான் ஒன்றும் சோதனை செஞ்சிட மாட்டாருங்க. நீங்க அப்படி யெண்ணும் அதைரியப்படாதிங்க."

"ஆமாங்க ஐயா! நேர்மையான ஆசைகளும் நியாய மான கனவுகளும் நிறைவேற்றப் படுறதுக்கென்றுதான் என்மனசிலே தோன்றிக்கிட்டிருக்குதுங்க!" என்று மிக மென்மையான குரலில் பாங்குற வெளியிட்டான் தமிழ்ச் சுடர்.

வாழ்வியல் உண்மை ஒன்றைச் சந்தர்ப்பத்துக்குத் தோதாக எடுத்தியம்பி விட்டதில் அவளது கலையுள்ளம் மகிழ்வு காட்டிற்று.

புதிய குரலைக் கேட்டமாதிரியாக, மனச்சிலிர்ப்புப் பெற்றார் ஆனந்தரங்கம். ஆறுத நிலையுடன் ஏறிட்டுத் திரும்பினார். தமிழ்ச்சுடரை ஆதரவுடனும் அக மகிழ் வுடனும் பார்த்தார். ஏதோ சொல்ல வாயெடுத்த வருக்கு இருமல் வந்தது. எச்சில் கூடியது. எச்சில் உமிழ பாத்திரத்தை எட்டி எடுக்கப் பிரயத்தனம் செய் தார். அதற்குள் மரகதத்தம்மையே அந்த எச்சில் பாத்

திரத்தை எடுத்து நகர்த்திஞள். கபமும் எச்சிலும் நிரம்பியிருந்தன. வலது கையால்தான் அதை நகர்த்திஞள் அவள்.

இதைக் கண்டதும் ஆனந்தரங்கம் துடிதுடித்தார். "சோற்றுக்கையாலேயா நகர்த்திஞய் மரகதம்? கையைக் கழுவிவிட்டு வா!' என்ருர்.

அவர் பேச்சுக்கு அவள் கட்டுப்பட்டாள். கை ஈரம் காய வில்லை, 'இம்மாதிரியான நிரந்தர பாக்கியத்துக்காக ஒருகாலத்திலே தவம் கிடந்தவள் தானுங்களே நான்?' என்று ஈனஸ்வரத்தில் சொன்ஞள் மரகதத்தம்மை.

மறுகணம், அவள் அங்கிருந்து நடந்து, "அக்கா!" என்று மெதுவாக அழைப்பு விடுத்தாள். அக்குரலுக்கும் செங்கமலவல்லி வராமல் போகவே, அவளை நாடிச் சென்ருள் மரகதத்தம்மை.

"நீங்க அவங்களோடு பேசுங்க, அப்புறம் நாங்க வருகிறேம்" என்ருள் செங்கமலவல்லி. சொல்லிவிட்டு கடகட வென்று சிரித்தாள். ஏன்?

"நான் அந்நியமானவள். கொண்டவளுக்குத் தெரியாமல் ரகசியம் பேசறதுக்கு நான் தேவடியாள் அல்ல! அக்கா!" என்று சூடுபறக்கப் பேசிஞள் மரகதத்தம்மை.

இப் பேச்சைக் கேட்டதும் தமிழ்ச்சுடருக்கு சப்த நாடிகளும் ஒடுங்கிப் போய்விட்டன

'ஐயையோ! என்ன அக்கா இது? நான் சாதாரணமாகச் சொன்னதுக்காகவா நீங்க இவ்வளவு தொலைவுக்கு ஆத்திரப்பட்டு உங்களை நீங்களே சபிச்சுகிடவேணுமா? நான் தப்பாய்ச் சொல்லியிருந்ததாக உங்களுக்குத் தோணிஞ, தயவு செஞ்சு என்னை மன்னிச்சுடுங்க.

விதியோட போராடிக்கிட்டு இருக்கிற என்னை நீங்களும் சோதிச்சிடாதீங்க, அக்கா!'' என்றாள் செங்கமலவல்லி; கெஞ்சினாள்.

இப் பேச்சு மரகதத்தம்மையின் நெஞ்சைத் தொட்டது. ''அக்கா! நீங்க தீர்க்க சுமங்கலியாக இருப்பீங்க. என் பேச்சை நம்புங்க. விதிக்கு நான் ஒருத்தி பலியானது போதாதா?'' என்று செருமினாள். மரகதத்தம்மை.

'பார்வையாளர் நேரம்' முடிந்ததற்கு அடையாளமாக மணி ஒலித்தது.

அப்போது, பெரிய டாக்டர் அங்கு வந்தார்

அவர்கள் எல்லோரும் வெளியே வர வேண்டியவர்கள் ஆனார்கள்.

டாக்டருடன் உதயணன் மட்டும் இருந்தான்,

வெளியே வந்த தமிழ்ச்சுடர் தன் அன்னையிடம் ஆனந்தரங்கம் தந்த தந்தப் பெட்டியை நீட்டினாள்.

மரகதத்தம்மை அதை வாங்கித் திறந்தபோது, ''ஆ!'' என்று வீரிட்ட அதே நேரத்தில், உட்புறமிருந்தும் ''ஆ!'' என்றொரு பயங்கரச் சத்தம் கேட்டது!..

## 6. காதல் இரகசியம்!

வினாடிகள் சில விதியின் ஆதார சுருதியுடன் நழுவித் தேய்ந்தன!

''ஆ...'' என்ற ஒலியின் இரு துருவச் சலனத்தினால் தன்னுடைய உள்ளத்தில் ஏற்பட்டிருந்த மாறுதலைத் தீர்க்கமாக உணர்ந்து கொண்ட குமாரி தமிழ்ச்சுடர், தன்னைப்பெற்ற அன்னையின் முகத்தைக் கூர்ந்து பார்த்து

விட்டு, பின்னர் தலையைப் பின்வசமாகத் திருப்பி உட்புற மாகப் பார்த்தாள். நூல்கட்டிப் பிடித்தமாதிரி வரிசை வரிசையாகக் கிடந்த இரும்புக் கட்டில்களின் வடக்கும் பகுதியில் இருந்த ஆனந்தரங்கத்தின் 'பெட்' அவள் பார்வைக்கு இலக்கானது ஊசி மருந்தைச் செலுத்திக் கொண்டிருந்தார் பெரிய டாக்டர் ஒருவர். அவரருகிலே உதயணன் நின்றுகொண்டிருந்தான். 'ஆ!' என்ற அந்தக் குரலை வெளியிட்டவர் உதயணனின் தந்தையே என்பதை தமிழ்ச்சுடர் அனுமானம் செய்துகொண்டாள். அந்த அனுமானம் அவளுக்கு இனம்புரியாத ஒருவகைப்பட்ட அமைதியை உண்டாக்கிக் காட்டியது. பெரிய டாக்டர் வந்து, 'இஞ்செக்ஷன்' போட்ட காரணத்தினால் ஊசியின் உபாதை ஆனந்தரங்கத்தை அலற வைத்திருக்கவேண் டும் என்பதும் அவளுக்குப் புரிந்தது. நிலைமையை அனு சரித்து மருத்துவத் துறையின் உயர் அதிகாரி ஆனந்த ரங்கத்தைச் சோதிக்க வந்திருக்கிறார் என்றும், அதன் நற்பலனாக ஆனந்தரங்கத்திற்கு நல்ல பலன் கிட்டிவிடு மென்றும் அவளது உள்மனம் இயம்பியது. அன்றைய இராப்பொழுது நல்ல பொழுதாக விடிந்துவிட வேண்டுமே என்று அவள் காளிகாம்பிகைத் தெய்வத்தை நெஞ்சால் நினைந்து, நினைவால் கைதொழுதாள். இப் போது, அவள் அமைதி கனிய நெடுமூச் செறியலானாள்.

அமைதியின் பெருமூச்சுடன் தமிழ்ச்சுடர் தன் னுடைய தாய் மரகதத் தம்மையை ஏறிட்டு நோக்கி னாள்.

மரகதத்தம்மை அந்தத் தந்தப் பெட்டியிலே பார்வையைப் பதித்தவளாக சிந்தனை வசப்பட்டு மெய் மறந்த கோலத்துடன் நின்ற காட்சியை மேல் விட்டத் தில் சன்னமாக எரிந்துகொண்டேயிருந்த இளநீலப் பாதரசக் குழல் விளக்கொளி சுட்டியது.

தமிழ்ச்சுடர் இதயத் துடிப்பை சமனப்படுத்த முயன்ற நிலையுடன், சற்றே கிழ்வசமாக நடந்து, தாழ்வாரக் கைப்பிடிச் சுவரை அடைந்தாள். எதிர்வாடையில் வாடைக் காற்று ஜனநெரிசலைக் கடந்து மிதந்து வந்தது. ஓடும் மேகங்கள் வான்பிறையுடன் கண்பொத்தி விளையாடிக் கொண்டிருந்தன. அந்த இயற்கையின் எழிலை அனுபவிக்க ஜனங்களின் இயந்திர மனங்களுக்கு 'மனம்' ஏது? அவரவர்கள் சென்ட்ரல் ஸ்டேஷனிலும் பஸ் ஸ்டாப்களிலும் அயர்வுடன் ஒற்றைக்கால் தவம் செய்துகொண்டிருந்தனர். ரெயில் நிலையத்தில் தாயின் மணிக்கொடி பட்டொளி பரப்பிப் பறந்து கொண்டிருந்தது.

தமிழ்ச்சுடரின் பார்வை இப்போது டாக்டர் ரங்காச்சாரியின் சிலைமீது படர்ந்தது. மனிதப் பிறவிகளுக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்கிய அந்த டாக்டரைப் பற்றிய இனிய நினைப்புடன், சற்றுமுன் உதயணின் தந்தைக்கு ஊசி மருந்தைச் செலுத்திய அந்தப் பெரிய டாக்டரின் ஞாபகமும் தொடர்ந்தெழுந்தது.

*    *    *

மருந்துக் கலவையின் பொதுவான நெடி பரவலாகக் கமழ்ந்துகொண்டே யிருந்தது.

தீனமான விம்மலின் குரலொன்று எங்கிருந்தோ புறப்பட்டது.

தமிழ்ச்சுடருக்கு மனம் துடித்தது. 'ஒருவேளை இக் குரல் ஸ்ரீமான் ஆனந்தரங்கத்தினுடையதாக இருக்குமோ?' என்று ஒரு பயம் கவ்விக் கொண்டது.

வார்டு டாக்டர்களும் மேட்ரன்களும் நர்ஸ்களுமாக இடைகழிப் பாதையில் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருந்தார்கள்.

"சுடர்!..." என்ற விளிப்பு அவளைத் தன்வசப்படச் செய்தது. அவள் திரும்பினுள். அவள் எதிர்பார்த்த மாதிரியாக, டாக்டர் மோகனசுந்தரம் அங்கு தென்படக் காணேம். குரல்மட்டும் அவருடையதுபோன்ற சாயலாக இருந்தது. ஆனால், வந்தது டாக்டர் மோகனசுந்தர மல்ல!—உதயணன் வந்து நின்ருன்.

"சுடர், என் அப்பா பிழைச்சிட்டாங்க; மறுபிறப்புத் தான்! டாக்டர் மோகனசுந்தரம் ஸி. எம். ஓவிடம் சொல்லி, என் தந்தையை ஸ்பெஷலாகக் கவனிக்கச் சொல்லி ஏற்பாடு செஞ்சார். உங்க மதர் வாய்க்குச் சர்க்கரை போடவேணும்! அவுங்க கொடுத்த நல்வாக்கு பலிச்சிட்டுது!..." என்று ஆனந்தம் பெருக்கெடுக்க உரைத்தான் உதயணன். களையிழந்திருந்த முகம் அப் பொழுது புதுக்களையுடன் பொலிந்தது. சோர்வு தட்டி யிருந்த கண்களில் அப்போது புத்தொளியின் ரேகை படர்ந்திருந்தது.

"அப்படியா? நல்லதுங்க. என் பிரார்த்தனையும் பலித மடைஞ்சிட்டுது!... உங்க குடும்பத்துக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய இந்த நல்ல திருப்பத்திலே எங்க குடும்பமும் சந் தோஷப்படும். உங்களுக்கு உண்டாகிற நல்லது கெட்ட திலே எங்களுக்கும் பங்கு உண்டுதானே, மிஸ்டர் உதய ணன்?"

பரிவும் பாசமும் கொண்டு உரிமையுடன் பேசினுள் குமாரி தமிழ்ச்சுடர்.

இப்பேச்சு உதயனின் நெஞ்சை உருக்கியிருக்கவேண் டும்; உணர்ச்சிச் சுழிப்பின் கம்பீரமான துடிப்புடன் தமிழ்ச்சுடர் தன்னை நெருங்கி தனது கரங்களைப்பற்றி "அழாதீங்க. தெய்வம் நம்மைச் சோதிச்சிடாதுங்க," என்று ஆறுதல் புகன்ற மொழிகளையும் அவன் மறந்து

விடவே மாட்டான். அவன் மேனி ஒரு முறை குலுங்கி அடங்கிற்று தன் கல்லூரித் தோழியை அன்பின் விகசிப்புடன் ஏறிட்டு நோக்கினன் அவன். "நீங்க··· நீ சொல்வது வாஸ்தவம்தான், சுடர்' உன் அன்பும் உன் அம்மாவின் பாசமும் எங்களுடைய குடும்பத்துக்கு அதிலும் குறிப்பாக எனக்கு எப்போதுமே வேண்டும். நான் சொல்லுகிற குறிப்பின் அர்த்தம் உனக்கும் புரியுமென்றே நம்புகிறேன் என்று," தெரிவித்தான் அவன் அவளுடைய நயனங்களினூடே நோக்கியபோது, அவள் நாணம் குலுங்க, நளினம் பொருந்திய நகை குலுங்கக் காணப்பட்டாள். அவன் சொல்வது அப்படியே நூற்றுக்கு நூறு உண்மையே என்று ஆமோதிக்கும் பாவனையில் அவள் தலையை உலுக்கினள். கொண்டைப்பூக்களில் இரண்டு உதிர்ந்தன.

"சுடர்!"

"சொல்லுங்கள்!"

"சுடர், நாம் இரண்டு பேரும், நடக்கப்போகும் இந்த யுனிவர்சிட்டி பரீட்சை எழுதி முடித்தவுடன் முதல் வேலையாக நம்முடைய மாரேஜ் பற்றித் தீவிரமாக ஈடுபடவேண்டுமாக்கும். இந்தத் திட்டத்துக்கு என் சார்பிலே என்னுடைய தகப்பனரின் அனுமதியை முன்கூட்டியே வாங்கிவைத்து விட்டேன். என் அம்மா என் பேச்சுக்கு எப்போதுமே அட்டி சொல்லிப் பழகாதவங்க. நீ உன் அம்மாவின் அபிப்பிராயத்தையும் சந்தர்ப்பத்தையும் அறிந்து பெற்றுவிடவேணுமாக்கும்! என்ன, சரிதானே? ··· காதல் ஆரம்பித்து வைத்த நம்முடைய இருவர் கனவுகளையும் கல்யாணம் முடித்துவிடும்! ···" என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசிய கல்லூரித் தோழன் உதயணன், உணர்வின் உந்துதலுடன் குமாரி தமிழ்ச்சுடரின் பூங்கரங்களை பூவை

ஸ்பரிசிப்பதொட்டுப் பற்றினன். சந்தடியிழந்த சூழல் சந்தடி பெற்ற போதுதான், அவன் அவளது கரம் பற்றியதையும், அவள் தன் கரங்களை விடுவித்துக் கொள்ள முயலாமல் மெய்மறந்து நிற்பதையும் உணர்ந்து கொள்ள முடிந்தது அவனுல். உடனேயே, ''எக்ஸ்யூஸ் மி, ப்ளீஸ்!'' என்று தடுமாற்றத்தோடு மென் குரலெடுத்துச் சொன்ஞன் அவன்.

அதற்கு அவள் இணக்கத்துடன் மறுபடியும் மௌனமாகப் புன்னகைப் பூவைத் தூவி நின்ருள்.

இத்தகைய மோன நிலையின் ரகசிய நடவடிக்கை ஆரம்பமாகி, நடந்து, முடிந்தபோது, அவ்விடத்தில் மரகதத்தம்மை பிரசன்னமாஞள். அன்னையைக் கண்ட சடுதியில், குற்றமனப்பான்மை மாருத மன அதிர்வுடனேயே, ''அம்மா!'' என்ருள் தமிழ்ச்சுடர்.

''அம்மா சுடர்! இனிமே இவங்க அப்பாவுக்கு யாதொரு பயமும் இல்லே. கடவுள் காப்பாற்றி விட்டாரம்மா!'' என்று தெளிந்த குரலில் அறிவித்தாள் மரகதத்தம்மை.

செவ்வரி படர்ந்த நெற்றித் திட்டைத் தடவிய வண்ணம் குனிந்த தலையுடன் ஒதுங்கி நின்ற உதயணன் தலையை நிமிர்த்தி, ''எல்லாம் உங்களைப் போலொத்த நல்ல உள்ளங்களோட அனுக்கிரகம்தானம்மா! உங்க அன்பு பெரிசு!... ரொம்ப நன்றிங்க!'' என்ருன், உணர்ச்சி வசப்பட்டுப் பேசினன்.

''தெய்வத்தின் முன்னே மனிதர்களாகிய நாம் ரொம்பவும் சாமான்யமானவர்களே!... தம்பி... நீங்க ரொம்பத் துடிச்சிட்டீங்களாம் இந்த இரண்டு மூணு நாளாக! அக்கா சொன்ஞங்க!...'' என்ருள் மரகதத்தம்மை.

அவன் பதிலாடாமல் மௌனமாக நின்றான்.

"புறப்படலாமா, சுடர்?"

"ஓ"'

"சரி, வா!" என்று சொல்லி, மகளை அழைத்துக் கொண்டு நகர்ந்த மரகதத்தம்மை, அதே நிலையில் உதயணன் பக்கம் திரும்பி அவனைப் பார்க்க தயங்கியவளாக, "நாங்க போயிட்டு வருகிறோம்," என்று பயணம் சொல்லிக் கொண்டாள்.

"நல்லதுங்க!" என்று கூறி அவன் கையெடுத்துக் கும்பிட்டான். "ஒரு நாளைக்கு நீங்களும் சுடரும் எங்க வீட்டுக்கு வந்து போங்க," என்று வேண்டிக் கொண்டான்.

"ஆகட்டும். உங்க மதர்கூட அழைச்சிருக்காங்க. என்ற மட்டில் தமிழ்ச்சுடரின் தாய் பேச்சை முடித்துக் கொண்டு, மீண்டும் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

தமிழ்ச்சுடருக்கு 'டாடா' சொன்னான் உதயணன். இது சிதம்பர ரகசியம்!

அல்ல, இது உதயணன் — தமிழ்ச்சுடர் காதல் ரகசியம்!

மாடிப்படிகளைக் கடந்து கொண்டிருக்கையில் தமிச்சுடர் கேட்டாள்:

"பெரியவரிடம் சொல்லிக் கொண்டாச்சா, அம்மா?"

மரகதத்தம்மாள் வரட்சியாகச் சிரித்தவளாக, இல்லையம்மா இப்போது யாரும் அவரைப் பார்க்க முடியாதாம்; பார்த்தாலும், பேசக்கூடாதாம். நர்ஸ் சொல்லி விட்டாள். செங்கமலவல்லி அம்மாளிடம் சொல்லியாச்சு. அது போதும்" என்றாள். மாரிபோடு

அணைத்திருந்த தந்தப் பெட்டி, நியான் விளக்கில் பள பளத்தது.

'உம்' கொட்டியவாறு பின் தொடர்ந்தாள் தமிழ்ச் சுடர். அப்போது அவளது கன்னி மனத்தில் அந்தத் தந்தப்பெட்டி ஒரு மாயப் புதிராகத் தோன்றி விளையாடிக் கொண்டிருந்தது. 'அம்மாவாகச் சொல்லாமல் இருக்கையில், நான் அவர்களிடம் அதைப்பற்றிக் கேட்பது அவ்வளவு உசிதமாகாதல்லவா?' என்று அவள் நெஞ்சம் பரதவித்துக் கொண்டிருந்தது.

மூடிக்கிடந்த வாசல்புறக் கதவுகள் திறந்து மூடிக் கொண்டன.

ஜனநெரிசலைக் கடந்து வால்டாக்ஸ் திருப்பத்தில் தாயும் மகளும் போய் நின்றபோது, அவர்களை ஏற்றிச் செல்ல வாடகைக் காரொன்று சம்மதம் தெரிவித்தது.

இராக் காலங்களில் சென்னை நகரத்தின் ராஜ கம்பீரத்துக்கென்று ஒரு ரகசியப் பயம் வந்து விடுமோ?

## 7. பரிசு—வைர நெக்லஸ்!

பிரபல ஹாலிவுட் நட்சத்திரம் ஸோஃபியா லாரென் தன்னுடைய மேனி அழகின் ரகசியத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது எடுத்துக் காட்டியிருந்த சில விவரங்கள் தமிழ்ச்சுடருக்கு அத்துணை ஆர்வம் ஊட்டவில்லை யென்றாலும், புகழ்பெற்ற—உலகப் புகழ் பெற்ற நட்சத்திரம் என்னதான் தன் மேனி எழில் அந்தரங்கத்தைப் பற்றிக் கூறுகிறாள் என்பதை அறிந்து கொள்ளும் ஒரு துடிப்பு அவளுக்கு இயல்பாகவே உந்தவே, படித்துக் கொண்டிருந்த பரீட்சைப் பாடங்களினின்றும் சிந்தத்தைத் திருப்பி விடலானாள்.

ஸோஃபியா லாரென் சொல்லியிருந்தார்:

அவர் ஆகார கட்டுத்திட்டம் எதனையுமே பின்பற்றுவதில்லையாம். வீட்டிலே அங்குமிங்கும் நடமாடுவதைத் தவிர, வேறு பிரத்யேகமான தேகப் பயிற்சி எதுவும் செய்வதில்லையாம். முகவசீகரத்துக்காக பழத்துண்டங்களைச் சில வேளைகளில் பூசிக்கொண்டாராம்; ஆனால் அவற்றைக் கடைசியில் அவர் தின்றே தீர்த்து விட்டாராம்.

தொடர்ந்து, ''தாயாகும் கட்டத்தில்தான் ஒரு பெண் மிகவும் அழகாக இருக்கிறாள். முழுமை உணர்வுதான் பெண்களுக்கு அழகைக் கூட்டுகிறது என்றும் எடுத்துக் காட்டியிருந்தாள் அந்நடிகை.

குறிப்பாக இச்செய்தி தமிழ்ச்சுடருக்கு இதமளித்தது; தெரிந்த விவரமே ஆனாலும், மீண்டும், மீண்டும் அவ்விஷயத்தைப் பிறர் சொல்லக் கேட்பதிலே மிகுந்ததோர் ஆர்வம் கிளைவிடுவது வழக்கம்தான் —இப்படிப் பட்ட முறையில்தான் தமிழ்ச்சுடர் ஆர்வம் காட்டினாள். அந்த ஆர்வத்தின் பிடிப்பு அவளை வனப்பு வாய்ந்த தனது வருங்காலத்தின் தோரணவாயிலில் கொண்டு போய் நிறுத்தியது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் உதயணன் தன்பால் கூறிய ஆதரவு வார்த்தைகளை மீளவும் சிந்தித்துப் பார்த்து, அச்சிந்தனையில் மதமதப்புடன் ஹாலிவுட் நடிகையின் கடைசிக் குறிப்பையும் எடைபோட்டுப் பார்க்கையில், அவளுக்கு தானும் உதயணனும் மணக் கோலம் தாங்கி நிற்கும் ஒரு கனவுக் காட்சி நிழலாட, அந்நிழலிலே, 'தாயாகும் நிலையில்தான் ஒரு பெண் மிகவும் அழகுடன் திகழ்கிறாள்' என்ற குறிப்பு அவளுள் அந்தரங்க பூர்வமான ஆர்வத்தை உண்டுபண்ணி வேடிக்கை பார்த்தது; வேடிக்கை காட்டியது. சில விநாடிகள்வரைக்கும் அவள் ஏதோ ஓர் இன்ப வேதனையில் ஊசலாடிக்

கொண்டு இருந்திருக்கவேண்டும்! இளமையின் எழில் மண்டிய முகார விந்தத்தில் வேர்வைத் துளிகள் மிதந்து வழிந்தன.

சுவர்க்கடிகாரம் எட்டுமுறை அடித்து ஓய்ந்தது.

ஜாதர் அண்ட் பெரியின் பொருளாதார நூலின் 'பாங்கிங்' அத்தியாயத்தை முடித்து நிமிர்ந்தாள் தமிழ்ச்சுடர். பல்கலைக் கழகத் தேர்வுக்கு அவசியமான பகுதி யென்று பேராசிரியரால் கணித்துக் கூறப்பட்ட நுணுக்கங்களை வெகு நுட்பமாக மனத்தில் வாங்கிக் கொண்டு படித்து முடித்திருந்தாள். அவளுக்குப் பசி வயிற்றைக் கிள்ளிவிட்டது. காலையில் நடைபெற்ற இலக்கியப் பரிசளிப்பு விழாவைத் தொடர்ந்து மாலையில் கிட்டிய ஆனந்தரங்கத்தின் சுகவீனச் செய்திவரைக்கும் அவள் திரும்பவும் எண்ணிப்பார்க்க முனைந்தாள். உதயணனின் காதல் மனத்தைப் புரிந்துகொண்ட வாய்ப்பினையும் அவள் சிந்தையில் தேக்கிக் கொள்ள மறக்கவில்லை.

அப்போது, மரகதத்தம்மை அங்கு வந்தாள். அவள் கையில் ஆனந்தரங்கத்தின் பரிசுத் தந்தப் பெட்டி இருந்தது. அதைக் கவனித்தாள் மகள். ஆனந்தரங்கம் தனக்கு அடிநாளில் கொடுத்த காதல் வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்ட சம்பவம்பற்றித் தன் அன்னை தன்னிடம் சொன்னதையும் தமிழ்ச்சுடர் ஞாபகப்படுத்திக் கொண்டாள். அதேசமயத்தில், உதயணன்—ஆனந்தரங்கத்தின் மைந்தன் உதயணன் அன்று முன் இரவின் தொடக்கத்தில் ஆஸ்பத்திரி மாடியில் தன்னிடம் கொடுத்த காதற் கனவின் வாக்கையும் அவள் நினைவு கொண்டாள். தன் தாய்க்குக் கிடைத்த உறுதிமொழியும் தனக்குக் கிடைத்திருக்கிற உறுதிமொழியும் அவளுள் சோதனைக் காய்களாக மனச் சதுரங்கத்தில் பதிந்திருந்த விசித்திரம் அவளுள் இனம் புரியாததொரு தவிப்

பையும் கலக்கத்தையும் குழப்பத்தையும் உண்டுபண்ணி யிருந்த உண்மை நடப்பும் அவளுக்குப் புரிந்தது.

"என்னம்மா, தீவிரமாகச் சிந்திச்சுக்கிணு இருக்கே?" என்றாள் தாய்.

மகளுக்கு அன்னையின்வினு சுயப்பிரக்ஞையை அளித்தது, பெற்றவளை ஏறிட்டுப் பார்த்தாள். "ஒன்றும்இல்லை அம்மா," என்று பதிலளித்தாள்." புதல்வி.

"ரொம்பநாழி வரை படித்துவிட்டாய் போலிருக்குது, வாம்மா, வந்து சாப்பிட்டுவிட்டு, கொஞ்சநேரம் படி. இன்னும் ரெண்டுமாசம் நீ பொறுப்போடு படிச்சு முடிச்சு, பி. ஏ. பட்டம் வாங்கிட்டியானுல், அப்புறம் உன் அப்பாவின் ஆவி எவ்வளவோ தூரம் நிம்மதிப்படும். சுடர். நீ பரிசளிப்பு கவுனோடு நிற்கிற கண் கொள்ளாக் காட்சியைக் காண வேணும்னு எவ்வளவோ ஆசைப்பட்டார் உன் அப்பா! அந்த பாக்கியத்தை எனக்கேனும் நல்லபடியாய்க் குடுத்திடணு மம்மா நீ!... பி. ஏயிலே உன்னை சேர்த்து விடுறதுக்கு உன் அப்பா இருந்தாங்க! அம்மம்மா!... வாழ்க்கை எத்தனை பெரிய பயங்கரப் பிரச்சினையாக அமைஞ்சிடுது!..." என்றாள் அம்மை. நடந்துவந்த வாழ்க்கைப்பாதையின் மேடுபள்ளங்களின் தடுமாற்றம் அவளது குரலில் சுருதி கூட்டிற்று.

தமிழ்சுடர் மௌனம் சாதித்தாள். அம்மாவைப் பயத்துடன் பார்த்தாள். அவள் எதிர்பார்த்ததற்குத் தோதாகவே அம்மையின் கண்களில் கண்ணீர் இருந்தது. தன் கணவரின் பேச்சை எடுத்தால் போதும். அக்கணமே மரகதத்தம்மைக்குக் கண்ணீர் சுரந்து விடும்!

தமிழ்ச்சுடரின் கண்களும் கலங்கின. அவள் அந் நிலையை மாற்ற தலையை உயர்த்திவிட்டாள். சுடரின் மேல் மட்டத்தில் தன் தந்தை குணசீலன் காட்சி

தந்தார்—படத்திலே! அவர் விதிவழி ஏகுவதற்குமுன் பங்கு மார்க்கெட்டில் அடைந்த மகத்தான வெற்றியைப் பாராட்ட நடைபெற்ற விருந்து வைபவத்தில் இவர் எத்துணை மகிழ்வின் திளைப்புடன் வீற்றிருந்தார்! ஆனால், அதே பங்கு மார்க்கெட் அவரை அதளபாதாளத்தில் வீழ்த்திய நிகழ்ச்சி கனவல்லவே!—ஆம்; கனவல்லதான்!

தாயும் புதல்வியும் மௌனத்தை விழுங்க, காலம் விநாடிகளை விழுங்கிக் கொண்டிருந்தது.

* * *

"வாம்மா, சாப்பிடலாம்!"

மகள் கூப்பிட்டாள்.

"ஆகட்டுமம்மா!" என்ற தாய், எதையோ கேட்க வாயைத் திறந்தாள். மறுகணம் எதையோ எண்ணமிட்டவளாக, திறந்த இதழ்களை மூடிக்கொண்டாள். "அம்மா தமிழ்ச்சுடர்!... இந்தப் பரிசைப் பார்," என்று சொல்லி, தந்தப் பெட்டியை தனது அருமைப் புதல்வியிடம் கைநடுக்கம் தெரியாமல் நீட்டினாள் அம்மை.

சுடர் அப்பரிசை கைநடுக்கம் தெரிய ஏந்திக்கொண்டாள். திறந்தாள்.

அழகும் கவர்ச்சியும் ஒளியும் கண்களை மயக்கும் நிலையில் ஒரு வைர நெக்லஸ் அந்தத் தந்தப் பெட்டியில் இருந்தது!

"நெக்லஸ் ரொம்பவும் அழகாக இருக்கம்மா!" என்று புகழ்ந்தாள் தமிழ்ச்சுடர்.

இதைக் கேட்டுவிட்டு, அவள் தாய் விரக்தியோடு சிரித்தாள்.

''ஆமம்மா. நெக்லஸ் ரொம்ப ரொம்ப அழகாக இருக்குதம்மா!... நான் அடைந்த தோல்வி மட்டும் இவ்வளவு அழகாக இருக்கலையே, சுடர்?'' என்று நிறுத்தினாள் மரகதத் தம்மை.

இப்பேச்சு தமிழ்ச்சுடரின் இதயத்தில் 'சுருக்'கென்று தைத்தது. இதற்குப் பதில் ஏதும் சொல்லாமல் சும்மா இருந்தாள். அன்னை அடைந்த காதல் தோல்விக்கு மகள் என்ன பதில் சொல்லுவாள், பாவம்!

''சுடர், இதைப்போலவே உன் கல்யாணத்துக்கு ஒரு வைர அட்டிகை வாங்கி போட்டு விடுறேன் அம்மா!'' என்றும் தகவல் தெரிவித்தாள் அம்மை.

இப்போது மேலும் சுடரின் நெஞ்சம் குழம்பியது. 'அப்படியென்றால், ஆனந்தரங்கத்தின் பரிசை அம்மா ஏற்கமாட்டார்களென்று அர்த்தமா?' என்றொரு புதிய ஐயப்பாடும் கிளர்ந்தெழுந்தது. ரத்தம் பூராவும் மண்டை உச்சிக்கு ஏறிவிட்டமாதிரி தலையில் நோவு எடுத்தது.

''என்னம்மா சரிதானே!''

''அட்டிகைக் கென்னம்மா இப்போதே அவசரம்? உங்கள் இஷ்டப்படி பிற்பாடு செய்து அல்லது வாங்கிப் போடுங்களேன்!'' வைரங்களுக்கு மத்தியில் படுத்து எழுந்திருக்கும் சீமான் மகன் உதயணனின் இனிய நல் நினைவு அவளை ஆட்கொண்டது. அதேவேளையில் இனம் புரியாத பயமும் தவிப்பும் கலக்கமும் கூடவே எழலாயின.

''சுடர் உதயணன் உன் பேரிலே மிகவும் பிரியம் கொண்டுதான் இருக்காரம்மா! நீ சொன்னது முற்றிலும் மெய்தானாக்கும்!''

சுடர் ஆனந்தமாகப் புன்னகை செய்தாள்.

"ஆனால், இந்த உதயணன் இப்படி ஆனந்தரங்கத்தின் பிள்ளையாக இருப்பார்னு நான் துளிகூட நினைக்கலே அம்மா!"

தமிழ்ச்சுடருக்குப் பொட்டில் அறை விழுந்தமாதிரி இருந்தது.

மரகதத்தம்மை இடது கைப்பிடிப்பில் மடித்து வைத்திருந்த கடிதமொன்றைப் பிரித்து வைத்தபடி சிந்தனையில் லயித்தாள். அவளது முதுமை படிந்த முகத்தில் வேர்வை வழிந்ததை மாடிக்கூடத்து விளக்கு துல்லியமாக எடுத்துக் காட்டிற்று. அவள் பிரித்து வைத்த அக்கடிதத்தை மீண்டும் மடித்து வைத்துக் கொண்டபடி "சுடர், நான் இந்த நெக்லஸை திரும்ப ஆனந்தரங்கம் அவர்களிடமே திருப்பிக் கொடுத்திடப்போறேன் அம்மா!" என்றாள். சொல்லிவிட்டு மகளை அர்த்தப் பொதிவுடன் பார்த்தாள்.

"உங்கள் மன இஷ்டப்பிரகாரம் செஞ்சிட உங்களுக்கு உரிமை இருக்கம்மா!" என்றாள் தமிழ்ச்சுடர்.

மரகதத்தம்மை தன் மனத்துயர் அனைத்தையும் கணப்பொழுதில் மறந்துவிட்டவள் போன்று அமைதியோடு சிரித்தாள். "ரொம்பவும் வினயமாகப் பதில் சொல்லிட்டே, சுடர்! ஊம்!... என்னமோ எல்லாம் ஆண்டவர் சித்தப்படி நடக்கட்டும்! சரியம்மா, வா சாப்பிட! அடடே, மணி எட்டு இருபது ஆயிடிச்சே!" என்று பதறினாள் சுடரின் தாய்.

"ஆகட்டும் அம்மா!"

# 8. மன ஆழி

புயல் கடலில் மட்டும்தான் வீசுமா என்ன?

மன ஆழியிலே எண்ணப் புயலும் வீசுவது உண்டல்லவா?

மணி எட்டு நிமிஷம் முப்பது.

தான் ஆவலுடன் கடந்த சில ஆண்டுகளாகக் கட்டி வந்த இன்பக் காதல் கோட்டை தனக்குத் தெரியும் வகையிலேயே ஆட்டம் கண்டுகொண்டிருக்கிறது என்னும் துன்பத் தீர்ப்பை முன்கூட்டியே ஊகம் செய்தவளாக, அந்நினைவின் பயங்கரப் புயலில் சிக்கியவாறு சாப்பிட்டேன் என்று பெயர் பண்ணிக்கொண்டு உண்டு எழுந்து கையலப்பினாள் தமிழ்ச்சுடர். கண்கள் கலங்கி வந்தன. அக்கலக்கத்தை உள்ளம் வாங்கிக் கொண்டது. எந்தவிதச் சலனமும் வெளிக்குத் தெரியாத வண்ணம் நாசூக்காகத் தப்பித்துக் கொண்டாள் தமிழ்ச்சுடர்.

"என்னம்மா, சரியாச் சாப்பிடலையே அம்மா? உன்னோட மனசு சரியில்லையா சுடர்? பெற்றதாயிடம் எதையும் நீ எப்பவுமே மறைக்கப்படாதம்மா! எனக்கு நீ தானம்மா சகலமும்!" என்றாள் மரகதத்தம்மை. அவள் நா தழுதழுத்தது.

"ரொம்பச் சாப்பிட்டால், அப்பறம் தூக்கம் வந்து, படிப்பு கெட்டுவிடும். பரீட்சை நெருங்குதில்லையா? அதான் அளவோடு சாப்பிட்டேன்! மற்றபடி உனக்குத் தெரியாமல் எனக்கென்னமா கவலையும் கஷ்டமும்?" என்றாள் தமிழ்ச்சுடர்.

"சரி அம்மா! போய்ப்படி! அப்புறம் மாடிக்குப் பால் கொண்டு வர்றேன்!"

"ஆகட்டும் அம்மா!"

நடையில் மயங்கி நடந்த் வண்ணம் தமிழ்ச்சுடர் மாடிப்படிகளைக் கடந்தாள். அவள் மாடியில் தன் அறையில் உட்கார்ந்திருப்பாள். அப்போது காரின் குழல் ஒலி வாசலில் கேட்டதை அறிந்தாள். 'வராந்தா'வில் வந்து நின்று எட்டிப் பார்த்தாள் கீழே. தெரு விளக்குக் கம்பத்தில் நிலவின் வீச்சு வீழ்ந்து கிடந்தது. தெருவிளக்கின் ஒளி வாசலில் நெடுகிலும் படர்ந்து கிடந்தது.

புதிதாகக் கார் ஒன்று வந்து நின்றது. காரைக் கண்டதும் உடனே அவளுக்கு உதயணன் ஞாபகம்தான் வந்தது. அவனுடைய இளநீல வர்ணக் காரா என்பதை நிர்ணயம் செய்து கொள்ள முடியவில்லை அவளால். யாரோ இருவர் இறங்கி வந்ததை மட்டும் அவளால் காண முடிந்தது. தன் வீட்டுக்குள் நுழைந்ததையும் அவள் பார்த்தாள். புதிய பரபரப்புடன் அவள் மாடிப்படியில் உச்சித் தலையில் வந்து நின்றாள். வலிய அவளாகக் கீழே இறங்கிச் செல்வது அவளுக்கு அத்துணை விவேகம் நிறைந்த செய்கையாகப் படவில்லை. எடுத்துக்கட்டி ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிவிடலாம் அம்மாவிடம் என்ற நொண்டிக் காரணமும் அவளுக்குப் பளிச்சிடாமல் இல்லை. ஆனாலும், தன் அன்னை இம்மாதிரி நடப்புக்களிலே தன்னை மிகுந்த அக்கறையுடன் கண்காணிப்பாள் என்பதை நினைவிற்கொண்டு பேசாமல் பாடப் புத்தகங்களைச் சரண் அடைந்தாள் தமிழ்ச்சுடர். புத்தகங்களைப் பரப்பிவைத்தாள். இந்திய சரித்திரம், ஒதெல்லா, உரை நடைக் கோவை, பாலிடிக்ஸ் என்று வரிசை எண் நீண்டது. அதேதருணத்தில் உதயணனை முதன் முறையாகச் சந்தித்த நடப்பை மீண்டும் சிந்தனைக்குக் கொணர்ந்தாள். அந்நடப்பை ஒளிக்காமல் தன் அன்னையிடம்கூறிய நாணயமான போக்கையும் தனக்குத்தானே சிலாகித்துக் கொண்டாள். "நீ கல்லூரிப் பெண், ஆண்பிள்ளைகளோடு சர்வஜாக்கிரதையாகப் பழகவேணும் அம்மா!

குடும்ப கௌரவத்தை நீ மறந்துவிடக்கூடாது. நாம் வாழ்ந்து கெட்டவர்கள்; என்றாலும், நம் குடும்ப கௌரவம் எப்போதுமே நிலைத்து நிற்கவேணும். நீ நாலும் தெரிந்த பெண். அது எனக்குத் தெரியும்! படிப்பு முடிந்ததும்: உன் மனத்தைத் திறந்து என்கிட்டே நீ சொல். உன் நெஞ்சிலுள்ள இளைஞனை உனக்குக் கல்யாணம் பண்ணி வைப்பேன். ஆனால் அந்த இளைஞன் என் மனசிலே நல்ல எண்ணத்தை உண்டாக்கியாக வேணுமம்மா! பெண்ணாகப் பிறந்தவங்களுக்கு நம் தமிழ்ச் சமுதாயத்திலே எத்தனையோ கட்டுத்திட்டங்கள் இருக்குதே அம்மா!'' என்று ஒரு 'சிற்றுரை'யே நிகழ்த்தி விட்டாளே மரகதத் தம்மை!...

மேல்வசமாக இருந்த நூலைப்புரட்டினாள் தமிழ்ச் சுடர்.

மாமன்னர் அசோகர் தோன்றினார். அசோகரின் கல்வெட்டுக்கள் பற்றிப் பரீசையில் கேட்பார்களென்று எதிர்பார்த்தாள். அதற்கான முன்னுரையை சரித்திரப் பேராசிரியர் 'டிக்டேட்' செய்திருந்தார். சில இடங்களில் இடைவெளி விட்டிருந்தாள். நேற்று முன்தினம் அவற்றை உதயணனிடமிருந்து குறித்துக் கொண்டிருந்தாள். இதே முன்னுரையோடு சத்திய நாதய்யரின் சில புதிய ஆராய்ச்சிக் குறிப்புக்களையும் கொடுத்திருந்தாள் அவள் தோழி ஸ்டெல்லா மேரி. இரண்டையும் வாய் விட்டுப் படித்தாள்; மனனம் செய்து கொள்ளும் அளவுக்கு அழுத்தம் கூட்டிப்படித்தாள்!

* * *

மாடிப்படியினைக் கடந்து வந்தாள் மரகதத்தம்மாள். கையில் பால் குவளை இருந்தது. ''அம்மாசுடர், ஒருநிமிஷம்மா!''... என்று அனுமதி கோரிய பாங்கில் சொன்னாள்.

"என்னம்மா?"

"பால் இருக்குதம்மா!"

"சரியம்மா!" என்றாள் சுடர். வீட்டுக்கு வந்தவர்கள் யாராம்?—அவளுள் வினா விசுவரூபம் எடுத்தது.

பாலை ஆற்றி தம்ளரில் ஊற்றிக் கொடுத்தாள் தாய்.

மகள் குடித்தாள்.

"சற்றுநேரம் கீழே வந்துவிட்டுப் போகிறாயா சுடர்?"

"ஆகட்டுமே!"

தாயைத் தொடர்ந்தாள் புதல்வி. அழகு கொழிக்கும் மார்பகத்தின் சேலைப் பகுதி காற்றில் நழுவி விழுந்தது. அதை எடுத்துக் கொய்து போட்டுக் கொண்ட போது, அழகின் கம்பீரம் மிகுந்த மார்பகத்தின் தசைத் திரட்சியின் இனிய ஸ்பரிசசுகம் அவளை ஒரு கணம் கிறங்கச் செய்தது. ஏதேதோ இன்பலயிப்புடன் கிறக்கம் அடைந்த அவள், மறுவினாடியில் மனத் தெளிவு பெற்று, மாடிப்படிகளைக் கடந்தாள். பாதச் சரங்கள் பவ்யமாகக் குழைந்தன.

கூடத்தில் குழல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. எப்போதாவதுதான் குழல் விளக்குகளுக்கு வேலை வரும். இப்போதும் அதற்கு ஏதோ ஒரு முக்கிய காரணம் இருக்க வேண்டும்.

கூடத்தில் வந்து நின்றகுமாரி தமிழ்ச்சுடர் கூடத்தின் மையத்திலிருந்த பஞ்சணைச் சோபாக்களில் இரு உருவங்கள் தென்பட்டதைக் கண்டாள். உடனே முகத்தைச் சேலை நுனி கொண்டு துடைத்துக் கொண்டாள்.

நைலக்ஸ் புடவையில் தளிர்விட்டிருந்த பச்சை இலைகள் தூய வெண்ணிற ஒளியில் துலாம்பரம் கூட்டின.

இரு உருவங்களை மீண்டும் அவள் நோக்கினுள்.

ஒருவன் இளைஞன். அவன் ராஜ சேகரன்!

முன்பொரு சமயம் புடவை வாங்கச் சென்ற போது, தனக்கும் தன் அன்னைக்கும் சோதனையாக அமைந்து விட்ட 'காமாட்சிஸில்க்பாலஸின்' சின்ன முதலாளி அவ்விளைஞன் என்பதை அறிந்து கொள்ள அவளுக்கு— தமிழ்ச்சுடருக்கு வெகு நாழிகை பிடிக்கவில்லை. தலை முடியைக் கோதிக் கொண்டாள். முத்துவளைகள் குலுங்கின.

"அம்மா, இந்தப் பிள்ளையைத்தான் நீ முன்பே பார்த்திருக்கே! ஒருசமயம் நம்மை நம்பி உனக்கு வாங்கிய துணி மணிகளைக் கொடுத்த ஜவுளிக்கடை முதலாளி இது. இதோட அப்பா இந்த ஐயா!...நீ இலக்கியப்பரிசு வாங்கியதற்காக உன்னைப் பாராட்ட வேணும்னு நினைச்சு, அப்பாவையும் உடன் கூட்டிக்கினு வந்திருக்குது!" என்றுள் மரகதம்.

"அப்படியா? ரொம்ப நன்றிங்க!" பூங்கரங்களைக் கூப்பினுள் சுடர்.

சுடரின் எழுத்துக்களை அவ்வப்போது படித்து ரசித்த பான்மையை வெகு தன்மையுடன் வெளியிட்டான் ராஜ சேகரன், பேச்சில் அன்பு வழிந்தது; உதடுகளில் புன் னகை வழிந்தது. அவனுக்கென்று இப்படி ஒரு புன் னகை வசீகரமா? டெர்லின் ஸ்லாக்கின் கழுத்துப் பகு தியைத் தூக்கிவிட்டுக் கொண்டான்.

"நீ உன் பரிட்சை முடிந்ததும் நிரம்ப எழுதம்மா!" என்றார் பெரியவர் சோமநாதன். அவரது சன்னக்குரலில்

அடங்காத பாசம் இருந்தது. புகைச்சலில் இருமல் பீறிட்டது.

"ஆகட்டங்க, ஐயா!"

ஊன்றுகோலுடன் பெரியவர் எழுந்தார். எழுந்த அவசரத்தில் அவரது வெண்ணிற முடிகள் வெண்ணிற ஒலியில் மேலும் அதிகமாய் பளிச்சிட்டன. ஜரிகைத் துப்பட்டாவை இடது தோளில் போட்டுக்கொண்டார். ஒன்றை நாடி உடல்! சேகை பிடித்த மேனி அல்லாடியது!

"அப்போ, நாங்க போயிட்டு வாரோம்!" என்று விடை கோரினர் சோமநாதன்.

"நல்லதுங்க. அண்ணியை ரொம்ப தூரம் விசாரிச்சதாய்ச் சொல்லுங்க நீங்க சொன்ன தாக்கல் விஷயமாய் நான் இரண்டொரு நாளில் முடிவு சொல்ல நேரிலே வருறேனுங்க. அதுக்குள்ளே. எங்க சுடரையும் கலந்து யோசிக்க அவகாசம் கிடைச்சிடும்னு நினைக்கிறேனுங்க, அண்ணு!" என்ருள் மரகதத்தம்மை. அவள் நெற்றியில் திருநீறு பளிச்சிட்டது.

"நல்லது மரகதம். போயிட்டு வருறேம். போயிட்டு வருகிறேம், தமிழ்ச்சுடர்!"

பெரியவருக்கு அஞ்சலி செலுத்தினள் தமிழ்ச்சுடர்.

"போய்வருகிறேன், சுடர்!" என்று சொல்லிக் கொண்டான் ராஜசேகரன்.

"போய் வாங்க! இப்போ தமிழை மறந்ததுசரி. இனிமே, தமிழை மறந்திடாதீங்க, மிஸ்டர் ராஜசேகர்!" என்ருள் தமிழ்ச்சுடர்.

அது பேரை தமிழ்ச்சுடர்னு சொன்னுத்தான் அதுக்கு ஆறுதல் ஏற்படும். அதுக்காகச் சொல்லுங்க!'' என்று 'வியாக்கியானம்' படித்தாள் தாயார்க்காரி.

''ஓஹோ! உண்மைதான்; போய் வருகிறேன் தமிழ்ச்சுடர்''.

''போய் வாங்க!''

'வாங்க' என்ற சொல்லில் ஓர் அழுத்தம் பதித்து விடை கொடுத்தாள் குமாரி.

சரி, நீ போய் படியம்மா; எனக்குத் தூக்கம் கண்ணைச் சுத்துது!''

மரகதத்தம்மை அப்பொழுது அவ்விடத்தே 'சஸ்பென்ஸ்' ஒன்றை விளையாட விட்டபடி, பின்புறம் திரும்பி இரண்டாங்கட்டில் நுழைந்தாள்!

## 9. படிக்கட்டில் கண்ணீர்த் துளிகள்

பூத் தொட்டிகள் பால் நிலவில் குளித்துக் கொண்டிருந்தன!

தமிழ்ச்சுடர் அவற்றின் அருகாக நடந்து வந்து கைப்பிடிச் சுவரின் ஓரமாக சாய்ந்து நின்றுள். ஆரோக்கியமான காற்று இதம் சேர்த்து வீசிக் கொண்டிருந்தது. கீழே நடைபாதை வாசிகளின் 'பட்டணப் பேச்சு' காரசாரமாக நடந்து கொண்டிருந்தது. அவள் அப்பேச்சில் மனம் செலுத்தினுள். அன்றாடக் கஷ்ட நஷ்டங்களின் அலங்கோலம் காரணமாக விளைந்த மனத்துயரங்களால் அலைபாய்ந்த பேச்சு அது ''இந்தப் பொறப்பே படா பேஜாராப் பூடிச்சு!... சே! சவாரியும் வரலே. காசும்

வரலே! கடவுளும் வரலே!'' என்றான் கிழவன் ஒருவன் அவன் ரிக்ஷாவாலாவாக இருக்கலாம்!

தமிழ்ச் சுடரின் சிந்தனையை அப்பேச்சு தூண்டி விட்டது. வாழ்க்கையும் மனிதப்பிறப்பும் பரவலாகச் சோதிக்கப்படுகையில், ஒரு பெரும் பிரச்னையாகவும் போராட்டமாகவுமே தோன்றுவதாக உணரப்படுகிற ஒரு அந்தரங்கப் பலவீனம் அப்போது அவனுக்கு ஒரு மகத்தான உண்மை போலவே தென்படலாயிற்று. ஒரு முறை தன் அன்னை மனம் கசந்து இந்த வாழ்க்கையை பற்றிப் பேசவில்லையா? கீழ் மட்டத்தில் இருப்பவர் களுக்குமட்டும் வாழ்வு அப்படித் தோன்றவில்லை. மேல் மட்டக்காரர்களுக்கும் கூட வாழ்க்கை அப்படித்தான் நிம்மதியற்றுத் தோற்றம் கொடுக்கிறது! —அப்படி என்றால், இத்தகைய ரசாயான பேத நிலைதான் வாழ்க் கையின் புதிரா? இந் நிலமைதான் வாழ்வின் நிரந்தர விதியோ?

மேற்கண்ட புதிரின் விதிக்கு ஒரு சாட்சியமாக ஆனந்த ரங்கத்தின் அமைதியிழந்த மன உளைச்சல் அமைந்து விட்டிருந்த, ஓர் அதிசயப் போக்கைதான் நிதர்சனமாகக் கண்ட காட்சியை தமிழ்ச்சுடர் எங்ஙனம் மறப்பாள்?

பூத்தொட்டிகளில் மல்லிகைச் செடிகள் இருந்தன. மலரத் துடித்த பக்குவத்தோடு அமைதியாகக் காணப் பட்ட மொக்குகளை அவள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டேயிருந்தாள். மல்லிகை மொட்டுக் களின் அந்தரங்க மணமாக தன்னுடைய உள்ளத்தின் உள்ளே இயங்கிக் கொண்டிருந்த ஆசைக்கனவுகளின் இனிய நினைப்புக்களோடு தன்னை மறந்த லயத்தில் கைகளை நெஞ்சகத்தின் குறுக்காகக் கட்டியவாறு நின்ற தமிழ்ச்சுடர் ஏதேதோ எண்ணப்புயலின் உளைச்சலால்

மனம் நலிந்து ஆற்ருமையோடு நீண்ட பெருமூச்சை நெட்டித் தள்ளிஞள். ஏதே ஒரு நினைப்பில் கையைப் பார்த்தான். கைப்பகுதியில் கைக் கடிகாரம் இல்லை. அம்மா வாங்கித் தருவதாக வாங்குக் கொடுத்திருந்தாள் அந்த ஞாபகத்தின் மயக்கத்தில் பார்த்தாள். அம்மா வாங்கிக் கொடுத்து விடுவாள்! அவள் தான் "அப்பால் ஆகட்டும்!" என்று செல்லிவிட்டாள்! குடும்ப வண்டியை நிதானமாகவும் கௌரவமாகவும் செலுத்குவதற்குத்தான் போதும் போதுமென்று ஆகிவிடுகிறதே? இல்லையா, பின்னே?

மேஜை விளக்கு சன்னமாக எரிந்தது. இருக்கையில் வந்து குந்திஞள் கன்னி. கீழ்தளத்தில் மணி பத்துத்டவை ஒலித்து ஓய்ந்ததை அவள் எண்ணிக் கணக்கிட்டாள்! கொட்டாவி பறந்தது. தமிழ்ச் செய்யுள் பாடத்தை அலமாரியிலிருந்து எடுத்துக் கொண்டு வந்து கூடை நாற்காலியில் உட்காரலாஞள். 'மாயா சீதைப் படலம்' ஏடு விரிந்தது. ஆனல் அவளது மனக் கண்ணிலே மாயமாக வந்து விரிந்த்து சற்று முன்வந்து பாராட்டிச் சென்ற அழகன் ராஜசேகரின் உருவம், அம்மா கொடுத்த நூறு ரூபாய்த்தாள் செல்லாததால் துணிகளைக் கொடுத்தனுப்பி, சௌகரியப்படும்போது பணத்தைக் கொண்டுவந்து கொடுக்கும்படி கூறிய ராஜசேகரின் பெருந்தன்மையை அவள் மனம் வெகுவாகப் பாராட்டியது. அன்றே இரவில் பணத்தை அவன் வசம் ஒப்படைத்த விவரத்தையும் இப்போது மறந்து விடவில்லை. 'அம்மாவுக்கு ராஜசேகரைத் தெரிந்திருந்ததாகவே அன்று காட்டிக் கொள்ளவில்லையே? ஒருகால், அவருடைய அப்பாவைதான் அம்மாவுக்குத் தெரியும் போலும்! ஆமாம், அப்படித்தான் இருக்க வேணும்"

அன்னை குறித்த சொற்கள் அவளது பெண் மனத்தில் ஆர்ப்பரிக்கலாயின; "... நீங்க சொன்ன தாக்கல்

விஷயமாய் நான் இரண்டொருநாளிலே முடிவு சொல்ல நேரிலே வருறேனுங்க. அதுக் குள்ளே எங்க சுடரையும் கலந்து யோசிக்க அவகாசம் கிடைக்கும்னு நினைக்கிறேனுங்க, அண்ணே!''.

'சஸ்பென்ஸ்' வைத்து விளையாடிய அப் புதிருக்கு விடை என்ன? அந்த விடை மரகதத்தம்மைக்கு மட்டுந்தான் அத்துபடியா? இல்லை, அவள் மகளுக்கும் அவ் விடையில் பங்கு உண்டா?

அன்னையின் நியாயமான கண்டிப்பு குணம் பற்றி அவள் அறியாதவளா?

* * *

புதியதொரு திருப்பத்தில் தான் கொணர்ந்து நிறுத்தப்பட்ட உண்மை. இப்போது தமிழ்ச் சுடருக்கு தெள்ளத் தெளிவாகப் புரியத் தொடங்கிவிட்டது! அம்மாவின் பேச்சு சில மணிநேரத்துக்கு முன் உதிர்ந்த வித்திலிருந்து. ஆனந்தரங்கம் அளித்த பரிசைத் திருப்பிவிட்டு விடுவாள் என்பதை ஓரளவு ஊகித்திருந்தாள். அப்பரிசை ஏற்க மறுப்பதற்குத் தயாராக இருப்பதானது, அவள் ஆனந்தரங்கத்தால் அடைந்த ஏமாற்றத்தையும் கசப்பையும் தோல்வியையும் இன்னமும் அவள் மறந்துவிடவில்லை என்பதை காட்டுகிறதென்பதையும் அவளால் கணிக்க முடிந்தது. ஆகவே தான், தன்னுடைய காதற்கோட்டை—உதயணனை நம்பிக் கட்டிய காதற்கோட்டை—உதயணனும் தானும் சேர்ந்து உருவாக்கிய காதற் கனவுக் கோட்டை தன்னை உணர்ந்த நிலைப்புடன் சரிந்து விழ வேளை பார்த்துக் கொண்டிருந்ததையும் அவள் உணர்ந்தாள்.

கண்கள் கலங்கி வந்தன. நீர்விளிம்பின் இருமுனைப்பில் ஒன்றில் உதயணனும் இன்னொன்றில்

ராஜசேகரனும் ஊசலாடினர். உச்சத்தில் நின்ற அவ்விருவரையும் அண்ணுந்து பார்த்தாள் அவள்—மானசீகமாக! மூக்கை மெல்ல உறிஞ்சிக் கொண்டு எழுந்தாள்; கிளாஸில் கொஞ்சம் இருந்த தண்ணீரை எடுத்து முகத்தில் தெளித்துக் கொண்டாள். புதிய உற்சாகம் பெற்ருள். தாகம் எடுத்தது. செம்பை எடுத்துப் பார்த்தாள். கலங்கலாக ஒட்டியிருந்தது நீர். மாடியை விட்டுக் கீழே வந்து தண்ணீர் குடித்தாள். அம்மா நல்ல உறக்கத்தில் இருந்ததையும் அவள் பார்த்தாள். அங்கிருந்து நகர்ந்த அவசரத்தில் மேஜை மிதிருந்த தந்தப் பெட்டி—ஆனந்தரங்கத்தின் பரிசில் பெட்டி தென்பட்டது. ஏனே அதன் மூடியை விலக்கினுள், இமைவிலக்கினுள்.

உள்ளே கடிதமொன்று இருந்தது.

முன்பின் யோசனையின்றி அதைப் பார்த்தாள். பிரித்தபடி பொழுதோடு அம்மா இக்கடிதத்துடன் வந்து தன்னிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அக்கடிதம் பற்றி எதுவுமே பிரஸ்தாபிக்காமல் போய் விட்டதையும் அவள் நினைத்துக் கொள்ளமுடிந்தது.

ஆனந்தரங்கத்தின் கடிதம்:

"அன்புள்ள மரகதம்!

காலம் எப்படி எப்படியோ விளையாடி விட்டது நம் இருவரைப் பொறுத்த மட்டிலே!

இன்றைக்கு நான் மரணத்தின் வாசலில் நிற்கிறேன். ஆகவே, உன்னிடம் ஒரு கடைசிக் கோரிக்கையாக இதை விடுக்கவே இப்படிக் கடிதம் எழுதுகிறேன். நான் இனி பிழைக்க மாட்டேன். என் மனம் அமைதியடைவேண்டுமென்றால், நான் உனக்களித்த வைரநெக்லஸை

நீ முன் ஏற்கமறுத்த அதே வைரநெக்லஸை இப்போது ஏற்றுக்கொள். இப்போது நீ மறுத்தால், என் ஆவி வேகாது. ஏனென்றால், என்னுள்ளே உன் நினைவு நித்தியமல்லியாக அன்றிலிருந்து இன்றுவரை மணம் பரப்பி வருகிறது. இவ்வுண்மையை நீ நம்புவாயோ, என்னமோ?

விதி, விதியாவது மண்ணாவது, நான் உன் வாழ்க்கையிலே விளையாடிவிட்டேன்.

என்னை மன்னித்துவிட முடியாதா உன்னால்?

அது உண்மையானால், இன்னொரு பேராசையும் எனக்கு உண்டு. அது, என் மகன் உதயணனையும் உன் மகள் தமிழ்ச் சுடரையும் நீ தம்பதியாக்கிவிட வேண்டுமென்பதுதான். இந்தக் கனவும் நிறைவேறினால், என்னைப்பால யோக்கியவான் வேறு யார் உலகத்தில் இருக்க முடியும்?

ஏ. எம். ஆனந்தரங்கம்

உந்திக் கமலம் வெளிக் கொட்டிய பெருமூச்சுடன் அக்கடிதத்தை விரல் நடுங்க மடித்தபோது, அடிப் பகுதியில் ஏதோ மாறுபட்ட குறிப்பு தென்பட்டது. உன்னிப்பாகப் பார்வையிட்டாள்.

அம்மாவின் கையெழுத்தல்லவா?

கவனித்தாள்.

"ஐயா!

என்னை மன்னித்துவிடுங்கள்.

இப்படிக்கு,

மரகதம் குணசீலன்"

கடிதத்தை மடித்து அந்த தந்தப்பெட்டியில் அமரிக்கையாக வைத்தாள். அடியில் இருந்த வைரப் பொருள் அவள் நோக்கில் தட்டுப்படவில்லை. ஆனால், தந்தப்பெட்டியின் ஒய்யார அழகு மட்டும் அவளது பார்வையில் தட்டுப்பட்டது.

மீண்டும் நீள் மூச்சுவழிந்தது. இளம் நெஞ்சகம் எம்பி எம்பித் தணிந்தது. மையத்தில் பதிந்திருந்த தங்கச் சங்கிலியின் டாலர் அமைதியுடன் இருந்தது!

ஒவ்வொரு கண்ணீர்த்துளியையும் ஒவ்வொரு படிக் கட்டில் சமர்ப்பித்தவளாக, முன்னேறிக்கொண்டிருந் தாள் கன்னி தமிழ்ச்சுடர்!

## 10. 'இது என் சொந்த முடிவு!'

'இந்தியப் பாதுகாப்பு விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு மற்றும் பன்னிரண்டு இடதுசாரி காவல் கைதிகள் இன்று பிற்பகல் முதல் திருவனந்தபுரம் மத்தியச் சிறையில் காலவரையின்றி உண்ணாவிரதம் துவக்கியுள்ளனர்!'

செய்தித்தாள் சூடான செய்தியைச் சொன்னது.

பத்திரிகையைப் புரட்டிய மரகதத்தம்மை ஓர் அரைவினாடி அச்செய்தியில் கட்டுண்டு இருந்துவிட்டு, தன் நினைவை மீட்டுக்கொண்டாள். 'இதே காட்சி வருகிற பொதுத் தேர்தலுக்குப் பின்னர் எப்படி யெப்படி மாறுமோ? யார் கண்டது?' என்ற அரசியல் விசாரத்தில் மூழ்கவும் அவளுக்கு மனம் இருந்தது. இதற்குரிய காரணத்தைக் கொண்டு செலுத்தியவர் அவளது கணவர் குணசீலனே ஆவார். அரசியல்வாதப்

பிரதிவாதங்களிலே குணசீலன் வல்லவர். அந்த வல்லமையை அவர் தமது மனைவியோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல், கம்யூனிஸ கொள்கையின் பாலும் அவர் அனுதாபம் கொண்டுவந்தார். ஆனால், சீனர்களின் வஞ்சகச் செயலை நிதர்சனமாகக்கண்டு கொண்ட பிறகு, அவரது கொள்கைப்பிடி சற்றே தளர்ந்தது. ஆனாலும், ஒருமுறை மெரினா கடற்கரையில் நடந்த இதே ஈ. எம். எஸ் பொதுக்கூட்டத்துக்குப் போய் விட்டு எவ்வளவு நேரம் கழித்து வீடு வந்து சேர்ந்தார்!

வண்ணவில்லுக்கு வர்ணங்கள் பல.

அம்மா திரிதான் மனத்திற்கும் பல எண்ணங்கள்.

காலத்தின் பனி மூட்டத்தைக் குடைந்த சென்றது மரகதத்தம்மையின் பெண் உள்ளம். அவள் ஹாலில் அமர்ந்தபடியே தலையை மேலுக்கு உயர்த்திப் பார்த் தாள். சுழுத்து இறுகி வளைந்து நிமிர்ந்தது. கழுத்தில் இழைந்த ஒற்றை வடம் சுருண்டு காதின் ஓரத்தை அழுத் தியது. ஏதோ கனவின் லயிப்புடன் சங்கிலியை இழுத் துப் போட்ட வண்ணம் தலையைத் திருப்பிக் கீழே குனிந்து சங்கிலியின் மையப் பகுதியைப் பார்த்தாள். பார்த்து முடித்த துடிப்பு தளர்ந்த நேரத்தில், "ஐயோ, அத்தான்!" என்று வாய்விட்டு விம்மினாள். தாலிகொடுத் தவர் வாய்மூடி மௌனியாகப் புன்னகை பூத்து போட்டோவில் காட்சியளித்துக் கொண்டிருந்தார்.

பாவம், மரகதம்!

விம்மினாள்.

விம்மலுக்கு நிரூபணமாக நீர் முத்துக்கள் அவளது சுருங்கி நிறம் மங்கிய கன்னங்களிலே உருண்டன.

ஜன்னலின் விளிம்புகளில் தொங்கவிடப்பட்டிருந்த கிளிப்பச்சைத் திரைகளை ஊடுருவிப் படர்ந்தது சூரிய வெளிச்சம்.

மணிபத்து.

தமிழ்ச்சுடர் கல்லூரிக்குப் புறப்பட்டுப்போய் அரை மணி ஆகிவிட்டது.

அன்றைக்குக் கார்த்திகை விரதம். காலைப் பலகாரம் முடிந்து, மத்தியானச் சாப்பாட்டை டிபன்பாக்ஸில் கட்டிக்கொண்டு சென்றுவிட்டாள். இனிமேல் அவள் திரும்பிவர, பொழுது பட்டுவிடும். பட்டணத்தில் டவுன் பஸ் கிடைப்பதுதான் குதிரைக் கொம்பாக இருக்கிறதே! அவள் தந்தை நல்லதிசையுடன் இருந்து, நல்ல ஆயுளும் பெற்றிருந்தால் அவளுக்கு இந்தக் கஷ்ட நஷ்டம் ஏன் ஏற்படப்போகிறது? தொடக்கத்தில் அவள் கான்வெண் டுக்கும் காலேஜுக்கும் போய்வந்த அம்பாஸிடர் வண்டியே இருந்திருக்குமே!

மரசதத்தம்மைக்கு துயரம் மூட்டிக்கொண்டு வந் தது. வெள்ளை ரவிக்கையின் முதுகுப்புறம் நனைந்தது. ஜன்னலை நெருங்கினாள். மென்மையான உஷ்ணம் கலந்த இளங்காற்று நெருங்கி வந்தது. இன்னும் கொஞ்சநாள் போய்விட்டால் அனல்காற்று வீச ஆரம்பித்துவிடும் பத் திரிகைகளுக்குக் கட்டம் கட்டி வெளியிட செய்தியும் கிடைத்துவிடும்.

அவள் தலையை மீண்டும் உயர்த்தினாள். சுவரை ஒட்டி ஓடியது பார்வை. மீண்டும் குணசீலன் படத்தில் நகை புரிந்துகொண்டிருந்தார். இரட்டை நாடி உருவம்: அழகும் கம்பீரமும் இணைந்த முகவிலாஸம்; ஆனந்தமய மான சிரிப்பு, அந்தக் சிரிப்புக் கென்று ஒரு தனி அழகு கூட்டும் படாமலும் இருந்த மெல்லிய மீசையின் அமைப்பே ஒரு தனி!

அருகில் தமிழரசி சின்னப் பாப்பவாகக் காட்சி தந்தாள், புகைப்படத்தில்!

அவளுக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது.

குணசீலன் அவளை அண்டிவந்து நளினமான குறும்பு செய்தபடி, 'மரகதம்! உனக்கு இனி அதிகப் பொறுப்பு வந்தாச்சு. எப்போதுமே என்னை நீ நம்பக்கூடாது! ஆகச்சே உன் மகளுக்கு அவள் இஷ்டப்படி படிப்பையும் கல்யாணத்தையும் நடத்திப்பிடு. அவள் திருமணத்தைப் பத்தி முடிவு செய்யவேண்டிய பொறுப்பு உனக்குத்தான் ரொம்பஇருக்கு. இதை நீயும் மறந்திடப்படாது; பெண்ணும் மறந்திடாமல் இருக்க ஏற்பாடு செய். நான் இருந்தால், அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்குவேன். இப்போ நான் இப்படிச் சொல்றதை நீ ஒன்றும் பெரிசு படுத்திக்கக் கூடாது. நாம் எதுக்கும் எப்பவும் தயாராக மனத்திடத்தோடே இருக்கவேணும். என் ஜாதகம் சகடயோக ஜாதகம்! சுகமும் கஷ்டமும் எனக்கும் பழகிப் போச்சு!... நீயும் அப்படி இருக்கிறதுக்குப் பழகிக்கிட வேணும்!'' என்று வேதாந்தம் பேசி, அந்தப் பேச்சை மறைப்பதற்கு அல்லது மறப்பதற்கு ஒரு பெரிய சிரிப்பை சிரித்து வைத்தார்.

தமிழரசி புஷ்பவதியான சடங்கு நடந்தேறிய காலையிலும் இதே பேச்சை அப்படியே ஒப்புவித்தார் குணசீலன்—தம் ஆருயிர் மனையாட்டியிடம்!

எவ்வளவு தீர்க்க தரிசனமான வாக்காக அமைந்து விட்டது அந்தப் பேச்சின் வேதாந்தம்!...

*　　*　　*

கண்களைத் துடைத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்த மரகதத்தம்மையோடு அவளது நினைவுகளும் நகர்ந்துவிட்டன. பூஜை அறைக்குள் வந்தவள்,

அகிலாண்டேஸ்வரியைக் கையெடுத்துக் கும்பிட்டாள். 'என் மகளுக்கு நல்ல வாழ்வைக் கொடு. தாயே!' என்று தாய் நெஞ்சம் தண்டனிட்டு வணங்கியது; பிரார்த்தித்தது.

சோமநாதன் வந்துபோன விவரத்தை நினைத்துக் கொண்டாள். தானே நேரில்வந்து முடிவு சொல்வதாகக் குறிப்பிட்ட செய்தியை இப்போது எண்ணமிட்டாள். ஆனால் அவள் அன்று அவரிடம் தெரிவித்தமாதிரி, அவள் தன் மகளிடம் எதையும் கேட்கவில்லை. காரணம், அதற்குகந்த சுழல் வசமாகவும் வாய்ப்பாகவும் அமையாதது தான்! 'இந்த ஒரு வாரமாக ஏன் சுடர் இப்படி மௌனம் காத்து நிற்குது?' என்ற ஐயம் அவளுள் படுத்தி வந்த பாட்டை அவளல்லவா அறிவாள்? "நான் எந்த முடிவையும் நாளுக யாரிடமும் சொல்லவில்லையே? ஆனந்தரங்கத்தின் பிள்ளை உதயணன் பேரில் சுடருக்கு நேசம் இருக்கிறது என்பது உண்மைதான். தாயிடம் எதையுமே மறைத்துப் பழகாத மகள். அந்த அளவுக்கு எனக்குப் பெருமைதான். இதற்கு என் கண்டிப்பு மனமும் ஒரு காரணம்தான். அப்படித்தான் இருக்கவேண்டும். அவள் நன்ருக இருக்க வேண்டும், நல்லவிதமாகப் படித்துப் பட்டம் பெறவேண்டும்; நல்லஇடத்தில் வாழ்க்கைப்பட வேண்டுமென்பதுதானே என் லட்சியம்! உதயணனை அவள் ஒருவேளை··· சோமநாத அண்ணுச்சியின் மகன் வரவால் ஏதேனும் சலனம் அடைந்திருப்பாளோ? இல்லை என் மனசுதான் சலனப்பட்டுட்டதா? என்று தனக்குத் தானே சுயப்பிரக்ஞைச் சோதனைச் செய்துப்பாரித்தாள். அவளுக்கு இப்போது எல்லாமே ஒரே புதிராகவே தோன்றத் தொடங்கிவிட்டது. மௌனத்தின் தலைநோவுடன் அமிர்தாஞ்சனச் சீசாவுடன் நகர்ந்து நடையில் வந்து உட்கார்ந்தாள்.

மணி பத்தரை!

காலப்புள்ளுக்குத்தான் எத்தனை அவசரம்!

ஸ்டூலில் இருந்த ஸ்டேட்பாங்கின் ஸேவிங்க்ஸ் அக்கவுண்டின் பாஸ் புத்தகத்தை எடுத்தாள். தன் பெயரில் இருந்த இருப்புத் தொகைப் புள்ளியில் அவள் பார்வை நிலைத்தது. இருப்பில் பதினையாயிரத்து சொச்சம் இருந்தது. 'அவர் காலமானபின் ஆறுயிரம் கரைந்து விட்டதே!... எதிர்காலச் செலவினங்களில் அவள் மனம் கவலை கொண்டது. வருமானம் என்று ஒன்று இல்லாவிட்டால் எவ்வளவு கட்டு செட்டாக இருந்தாலும், என்ன ஆகும்? வரவேண்டிய இனத்தில் இன்னும் ஓராயிரம் தேறினால் கடுசு!... கள்ளநோட்டாக நூறு ரூபாய்த்தாளை செலுத்திச் சென்ற அயோக்கியன் யாரென்று அவள் கண்டாள்? அவரவர்கள் சமூகத்துரோகிகளாக மாறும்போது அரசு என்ன செய்யமுடியும்? கள்ளன் பெரிதா, காப்போன் பெரிதா என்று ஜனநாயக யுகத்தில் சவால் விட வாய்க்குமா, என்ன?

எல். ஐ. ஸிக்கு தன் மகளின் க்ஷேமநலத்தை உத்தேசித்து கட்டிவந்த பிரிமியத்தை அன்று கட்டிவர வேண்டும் என்று ஏற்பாடு. ஜார்ஜ் டவுன் பாங்குக்குப் போய் அப்படியே மவுண்ட்ரோடு சென்று திரும்பியாக வேண்டும். ஒரே வேலையாக மாம்பலத்துக்கும் போய்வர திட்டமிட்டிருந்தாள். எவ்வளவு ஜோலிகள்!... அந்த நாளில் இருந்தமாதிரி கார் இருந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும்?

தன்னுடைய பரணி நட்சத்திரம் ஒரு காலத்தில் தரணி ஆண்ட கனவு-நடப்பு அப்போது அவளுக்குக் கதையாகத் தோன்றியது! மேடும் பள்ளமும் நிறைந்தது வாழ்க்கை!

ஆனந்தரங்கத்தின் பரிசுத்தந்தப்பெட்டி அவள் கண்களை உறுத்தியது. பெட்டியைத் திறந்தாள். வைர நெக்லசும் கடிதமும் தென்பட்டன. கடிதத்தைப் பிரித்தாள். ஆயிரத்தெட்டாவது தடவையாகப் படித்தாள். கடிதத்தை பார்த்த அதே இரவு எட்டு மணிக்கே அவள் எழுதிமுடித்த அந்த முடிவின் சொற்கள் லேசாக மங்கியிருந்தன. 'இந்த முடிவை என் சுடர் அறிந்தால்?'— இந்தப் புதுக்கேள்வி அவளுள் பூதாகாரமாக உருவெடுத்துச் சிரித்தது. 'இது என் சொந்தவிஷயம்! இது என் சொந்த்முடிவு!'... அவள் தனக்குத்தானே முன்னமேயே தீர்மானப்படுத்திக்கொண்டு விட்டவள்போன்று தலையை உலுக்கிக் கொண்டாள்.

எழுந்தாள்.

பையில் பர்சையும் 'செக்' புத்தகத்தையும் பரிசையும் போட்டுக்கொண்டு, விபூதி மடலினின்றும் பழனி விபூதியை துளி எடுத்து நெற்றியில் இட்டுக்கொண்டு புறப்படலானாள் மரகதத்தம்மை.

வெள்ளைப் புடவை சரசரத்தது!

## 11. தனகோடி

திருவாளர் ஆனந்தரங்கத்தின் கம்பீரம் பொலிந்த பங்களாவின் முகப்பு வாசலில் அடியெடுத்து வைத்ததும் தன்னை வரவேற்க கம்பீரமாகக் குரைத்த ராஜபாளையம் நாயைக் கண்டதும், மரகதத்தம்மைக்குப் பயம் சூழத் தொடங்கியது. ஏற்கனவே அலைபாய்ந்து குழம்பிக் கிடந்த அவள் பேதை மனம் இப்போது அச்சத்தால் கலவரமடைந்தது. தலைவாசலில் விசிறி வாழைகளின் சிதையாத அழகு அற்புதமாகத் தென்பட்டன. உச்சி வெயிலை அணைந்ததால் காற்று சூடு பரவித் தவழ்ந்தது.

நாயையும் 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற எச்சரிக்கையையும் மாறிமாறிப் பார்த்தாள் அவள். இந்த நாயும் இந்த அபாய அறிவிப்பும் இல்லையென்றால் பங்களாவின் அந்தஸ்த்து குறைந்துவிடுமோ?—இருக்கக்கூடும்!—யார் கண்டார்கள்?

கிழவன் ஒருவன் வந்தான்.

அவன் அவ்வீட்டின்—அல்ல அப் பங்களாவின் காவல் காரனாக இருக்கலாம்.

"என்னம்மா வேணும்?"

"எனக்கு ஒன்றும் வேணும்!"

"பின்னே?"

"ஐயாவைப் பார்க்கவேணும்!"

"எங்களுக்கு ஒன்னும் வேணும்னு சித்த முந்தி சொன்னீங்களே!"

"... ... "

"சரி. எந்த ஐயாவைப் பார்க்க வேணும்?"

"இந்த வீட்டுக்கார ஐயாவை!"

"இந்தப் பங்களா ஐயாவையா?".

"ஊம்!"

"சரி. இந்தப் பங்களாவிலே பெரிய ஐயா இருக்காங்க; அப்புறம், சின்ன ஐயாவும் இருக்காங்க!"

"ஒஹோ! பெரிய ஐயாவைத்தான் பார்க்க வேணும்!"

"அவங்கபேர்?"

"...ஆனந்தரங்கம்!"

"என்ன ஜோலி?"

மரகதத்தம்மையின் பொறுமை கழன்றது. 'சுள்' ளென்று கோபம் வந்தது. காவற்காரக் கிழவனை முறைத்துப் பார்த்தாள். அவனை எரித்து விடும் சாகஸம் அவளுக்குப் புரிந்திருந்தால்தானே?

''கோபிச்சுக்கப்படாது!''

''ஆமா, நீ இந்தப் பங்களாவிலே யார்?''

''நானுங்களா?··· நான் வந்து··· காவல்காரனுங்க!''

''அவ்வளவுதானே? போய் உன் பெரிய எஜமான் கையிலே மரகதத்தம்மைன்னு ஒரு அம்மாள் வந்திருக்கிறதாய்ச் சொல்லும்!''

காவல்காரன் ஒருவினாடி திகைத்தான்.

''அடடே, நீங்கதானா அவுக?··· கோபிச்சுக்காதீங்க. வாங்க உள்ளாற! நீங்க வந்தா உடனே அழைச்சுகிட்டு வரச் சொல்லி ஐயா உத்தரவு போட்டு ஒரு வாரமாச்சுங்களே?'' என்று சொல்லி, 'கேட்'டைத் திறந்துவிட்டான் கிழவன். ''ஐயாவுக்கு முடியாமல் இருக்கிறதாலே, ரொம்ப கண்டிசனா இருக்கவேணும்னு மேலிடத்திலே உத்திரவு போட்டிருக்காங்க!··· சரி, நீங்க வாங்க. பாவம், வெய்யலிலே நின்னிட்டீங்க!''

காவல்காரக் கிழத்தைக் கண்டதும் குரைத்த நாய் கூட வாலைச் சுருட்டிக்கொண்டு 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற பலகையையே உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தது. 'நாய்களே, ஜாக்கிரதை!' என்று அது பொருள் கொண்டிருக்கலாமோ?

''வாங்கம்மா!'' என்று சொல்லிய வண்ணம், வண்ணம் மண்டிய முகப்பு மண்டபத்தைக் கடந்து உள்ளே நடந்தான் கிழவன். அவளைத் தொடர்ந்த மரகதம் வாசலிருந்து பரவிமணத்த நித்திய மல்லிப்

பூக்களின் துல்லியமான — மாண்பு மிக்க—அதிசய நெடியை அனுபவித்தவளாக நடை தொடர்ந்து நடையை அடைந்தாள். அந்தப் பங்களாவுக்கு அடியெடுத்து வைப்பது அதுவே முதல் தடவை என்பதை அவள் மறக்கவில்லை. தன் கைக்குக் கிட்டவேண்டிய பாக்கியங்கள் அனைத்தும் விரல்வழி வழிந்திட்ட தேனுகக் கை நழுவிப் போன ஆறுத் துயரமும் அவளுள் ஏற்பட்டது. அந்த ஏமாற்றம் அவளுள் ஒரு தோல்வி மனப்பான்மையை உண்டு பண்ணிச் சலசலக்க வைக்கவும் தப்பவில்லை.

பத்தரைமணியிலிருந்து ஏற்பட்ட அலைச்சல் அவளுக்கு அயர்வைத் தந்திருந்தது.

"நான் இங்கேயே இருக்கேன். நீங்க போய் தகவல் சொல்லுங்க!" என்றாள் மரகதம்,

அங்கு இருந்த குஷன் சோபாவில் பதட்டமற்று உட்கார்ந்தாள் அவள்.

வட்ட மேஜையில் இருந்த பூக்கிண்ணங்களும் ரேடியோகிராமும் சுழல் விசிறிகளும் குழல் விளக்குகளும் அவள் சிந்தையைக் கவர்ந்தன! சுவர்களில் பூசப்பட்டிருந்த இளநீள டிஸ்டம்பர் அவள் பார்வைக்கு குளிர்ச்சியைத் தந்தது. வாலிபப் பருவத்தின் தலைவாசலில் கொண்டுநிறுத்தப்பட்ட ஒரு மனநிலையில் அவள் ஊசலாடினாள். மேல் புறத்தில் அவள் கண்கள் அலைந்தன. ஆனந்த்ரங்கமும் அவர் துணைவி செங்கமலவல்லியும் திருமணக்கோலத்தில் இருந்தார்கள். தன் வீட்டில் இருக்கும் தன் திருமணப் படத்தையும் அவள் நினைவு கூர்ந்தாள். திரும்பவும் ஆனந்தரங்கத்தின் கல்யாணப்படம் சிந்தையில் சுழன்றது.

கோலம் 'சடுகுடு' ஆடியது.

அப்போது மரகதம் வாலைக்குமரியாக இருந்தாள்! பிறந்த மண் தஞ்சை. மிஷன் ஆலமரத் தெருவில் ஆலமரம் இல்லையென்றாலும், புனிதரின் மாதா கோயில் இருந்தது. அங்குதான் அவள் வீடு. மானம்புச் சாவடியின் பண்டைப் பெருமையுடன் தெரு அடக்கம் பூண்டு விளங்கியது. மரகதத்தின் தகப்பனாருக்கு ஒரு வட்டிக்கடையில் கணக்குப்பிள்ளை வேலை.

ஆனந்தரங்கம் எதிர்வீட்டில் இருந்தான். அவன் தந்தை கோர்ட்டில் வேலைபார்த்தார். வாலிப வயது.

எதிரெதிர் வீடுகளாக இருந்தமையால், ஆனந்தரங்கமும் மரகதமும் அடிக்கடி சந்தித்துக்கொள்ள அவர்களது வாடகைமனையின் ஜன்னல்கள் பெரிதும் உபகாரம் புரிந்தன.

கண்ணும் கண்ணும் கலந்துபேசி விளையாடும் பொன்னான வாய்ப்பை அமைத்துக் கொடுக்கும் வல்லமை பெற்ற இளம் பிராயமல்லவா அது! ஆகவே, அவர்கள் இருவரும் எல்லாக் காதலர்களையும் போல கண்களால் பேசிப்பேசி மகிழ்ந்து, வாய்மூடி மௌனியராய்க் காலத்தைத் தள்ளிக் கொண்டிருந்தனர்.

இப்படிப்பட்ட காலத்தில் ஒருநாள், மரகதம் பள்ளி விட்டதும் சிவகெங்கைத் தோட்டத்துக்குப் போயிருந்தாள். மழைபிடித்துக் கொண்டது. இப்போதிருப்பது போல, அப்போது டவுன்பஸ் இல்லை. மாட்டு வண்டிதான் இருந்தது. வாலைக்குமரி மட்டும் பொழுது பட்ட தருணத்தில் ஒன்றியாக மாட்டு வண்டியில் போக முடியுமா? போனால்தான், அவள் தந்தை வண்டிச் சத்தத்தை சத்தம் காட்டாமல் எடுத்து நீட்டுவாரா? கையொடிய, கழுத்தொடிய, வரவு—பற்றுக் காலத்தை

எழுதித் தீர்த்து சம்பளம் என்று அறுபது ரூபாய்க் காசை சுக்கான் செட்டியிடம் எண்ணி வாங்குவதில் இருந்த சிரமம் அவருக்குத்தான் அத்துபடி. ஆகவே மழையில் நனைந்தபடி, நித்தியமல்லிச் செடிகளின் கூட்டத்துக்கு அடியில் ஒதுங்கினாள். அப்போது குடையும் கையுமாக, புன்னகையும் உதடுகளுமாக வந்து தோன்றினான் ஆனந்தரங்கம். கோர்ட்டில் பத்திரம் எழுதும் தந்தையின் பிள்ளையாகத் தோன்றவில்லை அவன். சீமான் பெற்ற செல்வமாகத் தோன்றினான். பட்டுச் சொக்காயும் மயில்கண் ஜரிகை வேட்டியுமாக ஆள் ஜம்மென்று இருந்தான். கழுத்தில் மைனர் செயின் இருந்தது. மைனர் தானே அவன்!

வந்தவன் ''மரகதம்! இந்தா குடை. மழையில் நீ நனைஞ்சால் உன் உடம்பு என்னத்துக்கு ஆகும்? நீ புறப்படு. நான் மழைவிட்டதும் மெள்ள வந்துக்கிறேன்'', என்று பரிவுடன் மொழிந்தான்.

இப் பேச்சைக் கேட்டதும், மரகதத்தின் இளஞ் சிவப்புக் கன்னங்களில் நாணக் குழைவு சிலிர்த்தது. ''நீங்கமட்டும் மழையில் நனையலாமா? கூடாது நீங்க. உங்க குடையிலே போங்க. நான் மழை நின்னவுடன் வருகிறேன்!'' என்றாள்.

இளம்பிள்ளை கேட்பானா?

கடைசியில் அவன் வாதமே வென்றது. 'இளம் பிள்ளை வாத'மல்லவா? அவன் இஷ்டப்படியே அவனுடைய குடையை அவள் வாங்கிச் சென்றாள். இருவரும் ஒரே குடையில் செல்லலாமே என்ற தவிப்பு இருவர் நெஞ்சங்களிலும் மெல்ல ஊடாடியதென்னவோ வாஸ்தவந்தான். ஆனால் அப்பிரச்சனையை இருவருமே தொட்டுப் பார்க்கத் துணியவில்லை. இந்த அணுயுகக் காதல் நாகரிகம் போலவா அப்போது இருந்தது? ஒரு

வயசுப் பெண்ணும் அதே வயசு வாலிபனும் கொட்டும் மழையில் ஒரு குடையில் கீழ் தெருக்களிலே நடந்து செல்ல அந்த நாளில் முடியுமா, என்ன?

குடைக் காதல் வளர்ந்தது கம்பீரமாக. பிரகதீஸ்வரர் கோயில் ராஜகோபுரம் போன்றே கம்பீர மாக வளர்ந்தது. காதலுக்கு ஒரு முடிவுகாண இரு மனங்களும் துடித்தன. "நாம் இருவரும் ஒரே அந்தஸ்து மட்டத்தில் இருப்பவர்கள் ஆகவே, சினிமாக்களில் வருவது மாதிரி, நமக்குள் எவ்விதச் சலனமும் உண்டாக வழியில்லை உனக்கு நான்; எனக்கு நீ. இது சத்தியம்! சத்தியமானவாக்கு இது!... இந்தத் தெய்வ முடிவுக்கு ஆரம்பம் செய்யத்தான் பகவான் அன்றைக்கு மழையைத் தருவித்திருக்கிறான் வருண பகவானை தூதுவாராக!... உன்னைப் பரிசம் போடும்போது பரிசப் பரிசாக என் அம்மாவின் நெக்லஸை உனக்கு நான் கொடுப்பேனுக்கும் அந்த அட்டிகை என் தாய்வீட்டுச் சீதனம்!... ஒரு நல்ல நாள் பார்த்து இவ்விஷயத்தை—அதாவது, நம் மன மொத்த காதல் திருமணத்தை நமது இருதரப்புப் பெற்றோர்களின் முன்னிலையிலே வைத்துவிடுவோம்!" என்று முன்மொழிந்தான் அவன். அவள் வழி மொழிந் தாள்.

ஆனால், அப்பொழுதுதான் விதியின் விளையாட்டு வேறு திசைக்குக் குறி வைத்திருந்தது.

திருஞானசம்மந்தருக்கு பார்வதிதேவி திருமுலைப் பால் வழங்கிய நிகழ்ச்சியை விழா எடுத்துத் கொண்டா டிய வைபவத்தை நேரில் கண்டு தரிசித்து வர சீர் காழிக்குச் சென்றிருந்தனர் மரகதத்தின் குடும்பத்தினர். மரகதமும் உடன் சென்று திரும்பினாள். திரும்பியதும் அவளுக்கு ஒரு பயங்கர சேதி காதில் விழுந்தது. பட் டணத்தில் படம் எடுக்கும் பெரும்பணக்காரர் ஒருவர்

வந்து ஆனந்தரங்கத்தை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள தீர்மாணித்துச் சென்று விட்டதை அறிந்தாள், மூன்றும் நபர் மூலமாக.

மரகதம் சுடர் விளக்கானாள்.

இந்த நட்பை அறிந்தார் அவளது தந்தை, "நீ கவலைப்படாதேம்மா, நீ பரணி நட்சத்திரம், தரணி ஆளுவேன்னு மானம்புச்சாவடி பட்டு நூல்கார பாகவதர் சொல்லியிருக்காரம்மா!... உலகத்திலே வாய்ச்சுத்தம் வாக்குச் சுத்தம் வரவர கம்மிப்பட்டுக்கிட்டு வருதம்மா. நீ கவலைப்படாதே, மரகதம்!" என்று தேற்றினார் பெரியவர்.

அவர் வாய்க்குச் சர்க்கரைதான் போடவேண்டும். அவர் சொன்ன மாதிரியே அடுத்த மூன்றும் நாள் மரகதத்தின் அழகைக் கேள்விப் பட்டு திருவாரூர்ப் பணக்காரர் ஒருவர் தம்பிள்ளைக்கு மரகதத்தைப் பெண்பார்க்க வந்து பெண்பார்த்து முடிவு செய்து விட்டுப் போனார். அந்த மாப்பிள்ளைதான் குணசீலன்!

ஆனந்த ரங்கத்தின் திருமண அழைப்பு அப்போது தபாலில் வந்தது. அழைப்புக்கு நன்றி தெரிவித்து, புது மணத் தம்பதிகளின் நல்வாழ்வுக்குப் பிரார்த்தித்து செய்தி கொடுத்தாள் மரகதம்.

மரகதத்தின் திருமண அழைப்பும் ஆனந்தரங்கத்துக்கு அனுப்பப்பட்டது. திருமணத்திற்கு சீதனக் காரில் வந்தான் ஆனந்தரங்கம், வந்தவர் திருமணப் பரிசாக மரகதத்துக்கு வைர நெக்லஸ் ஒன்றைப்பரிசளித்தான் ஆனால் மரகதம் அதை ஏற்றுக் கொள்ள வில்லை. அவன் திரும்பி விட்டான்.

விவரம் அறிந்த குணசீலனிடம் நடப்பைச் சொன்னாள் மரகதம். "நான் உன் குணத்தை அறிந்துதான்

சம்மதித்தேன். எனக்குப் பணம் முக்கியமாக என்றுமே தோன்றுது, மரகதம்!'' என்ற குறிப்பு குணசீலனிடனிடமிருந்து வெளிவந்தது!

*　　　*　　　*

ஒரு மணி அடித்தது. மணி ஒன்றரை!

மரகதம் மரகதத்தம்மாள் ஆனுள். கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

செங்கல வல்லி அக்காளை எங்கே காணுேம்?

இந்த கேள்வி அவளுக்குப் புதிரானது. திடுதிப்பென்று ஏதோ பயங்கரச் சத்தம் கேட்டது. எழுந்துப் பார்த்தாள்.

அடுத்திருந்த பூட்டப்பட்டிருந்த அறையொன்று தெரிந்தது. அதன் சிறிய ஜன்னலின் வழியே இளம் உருவம் ஒன்று தென்பட்டது. அவ்வுருவம் பயங்கரமாகச் சிரித்தது!...

சித்த பேதமா?

அப்படித்தான் தோன்றியது மரகதத்தம்மைக்கு! அவளது பெண் மனம் கசிந்துருகிற்று. 'ஆஸ்பத்திரியில் அறிமுகமான செங்கமலவல்லியும் தான் ஒருமுறை திடுதிப்பென்று சிரித்தாள். இதற்கு என்ன அர்த்தம்?...'

''அம்மா''

மரகதத்தம்மை திரும்பினுள், சடக்கென்று உட்கார்ந்தபடி.

''ஐயா இருக்காங்களா?''

''ஓ! இருக்காங்க. ஆனு, தூங்கிக்கினு இருக்காங்க அவங்க படா கோபக்காரங்க, அவங்களை உசுப்புறதுக்கு பயமாக இருக்குது!'' என்றுல் வேலைக்காரன்.

"அப்படியா?" ஒன்று சொல்லி, தன் கையில் பிடிப்பிலிருந்த பையை மடியில் வைத்து அந்தத் தந்தப் பெட்டியை எடுத்து காவற்காரக் கிழவனிடம் நீட்டி, இந்தாங்க. இதிலே விலையுயர்ந்த பொருள் இருக்கு; இதை முதல் வேலையாய் ஐயா எழுந்ததும் கொடுத்து விடுங்க," என்று குறிப்பிட்டு எழுந்தாள் மரகதத் தம்மை. தாகம் எடுத்தது, அடக்கிக் கொண்டாள்!

செங்கமல வல்லியைப் பற்றிக் கேட்க நினைத்தாள். தேவையற்றதென்று பிறகு நினைத்தாள்.

புறப்பட்டாள் மரகதம்!

அந்தக் காவற்காரனின் பெயர் என்ன, தெரியுமா?

—தனகோடி!......

## 12. வாழ்க்கை எனும் கடமை.

"அம்மா!" என்று பாசம் வழிய அழைத்துக் கொண்டே வீட்டின் படிகட்டில் கால் வைத்த தமிழ்ச் சுடர் அப்படியே தயங்கியவளாகச் சில கணங்கள் மலைத்து நின்றாள். அந்த மலைப்புக்குக் காரணம் இருந்தது. கூப்பிட்ட குரலுக்கு பதில் கொடுத்து, "வாம்மா!" என்று அன்பு கனிய, பாசம் பாசம் வழிய, பரிவு மிளிர அழைப்புக் கொடுக்கும் அன்னையின் மௌனம் தான் அவளுக்குப்புதிரான மலைப்புக் கொடுத்தது. கிரேப்சில்க்கின் முன்றானைப் பகுதியை இழுத்துவிட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டபடி, சேலைக்கு இணைந்த மிளகாய்பழ வர்ணச் சோளியைச் சீர் செய்து கொண்டே, கல்லூரிப் புத்தகங்களை வலது கை விரல் பிடியில் மாற்றிக்கொண்டு திரும்பவும் திக்பிரமை பிடித்து நின்றாள்.

"அம்மா!"

மீண்டும் அழைத்தாள் தமிழ்ச்சுடர். குரலில் தழு தழுப்பு இருந்தது. பதட்டம் மேனியில் இருந்தது. பரத விப்பு இதயத்தில் இருந்தது. உள்ளே எட்டிப்பார்த் தாள். விளக்குக்கூட போடவில்லை, தெரு இருட்டு உள்ளே இடம் மாறியிருந்தது. தெருவிளக்கின் வெளிச்சம் நிலவரை எப்படிப் பார்த்தது. நிலா புறப் பட இன்னும் நேரம் இருந்தது.

உள்ளே நுழைந்தாள், வெளிப்புறக் கதவு சாத்தப் பட்டிருந்தது. உட்பக்கம் நாதாங்கி இடப்பட்டிருக்க வில்லை. கதவைத்திறந்து உள்ளே நடந்து நடையில் இருந்த மின் விளக்கின் பொத்தானை அழுத்தினாள்.

விளக்கு துலாம்பரமாக எரிந்தது.

தமிழ்ச்சுடரின் பார்வையில் ஒரு காட்சி விளங் கியது.

அவள் அன்னை கட்டிலில் ஒருக்களித்துப் படுத்திருந் தாள்; மரகதத்தம்மையின் இடது பக்கக் கன்னத்தில் கண்ணீரின் உவர்க்கோடுகள் படிந்திருந்தன, தன்னை ஈன்றவளை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டி ருந்த மகளுக்குக் கண்கள் கலங்கி வந்தன. 'அம்மாவின் கண்ணீருக்குக் காரணம் என்ன ?' என்று அவள் தன்னை தானே—தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள். அப் பாவின் பிரிவின் ஞாபகம் வந்திருக்குமோ ?' என்ற பதிலே அவளுள் வினாவாக வடிவெடுத்தது. இந்தப் பதிலும் அவளது உள்ளக் குமுறலை உண்டுபண்ணியது. தாம்பத்தியத்தின் சிதவு என்றால், அந்தப்பிரிவின் ஏக்கம் கட்டையுடன் தீரும்!— அவளுக்கு நெஞ்சு வெடித்து விடும்போலத் தோன்றியது. வாழ்க்கையே மாபெரும் போராட்டம் என்று அன்னை சொல்லிவருவதை

அவள் எண்ணமிட்டாள். அம்மா அழுது—தனக்குத் தெரிய கண்ணீர் சொரிந்து பார்ப்பது வெகு அபூர்வம். தனிமையில் தன் மன ஆற்றாமையை இப்படிக் கண்ணீரால் கரைத்து வருகிறாள் தன் தாய் என்ற உண்மையும் அவளுக்குப் புலப்பட செய்தது.

கழிந்த சில தினங்களாகவே தான் தன் அன்னையோடு கலகலப்பாகப் பேசவில்லை என்ற நடப்புச் சேதி அவள் நெஞ்சிலும் நினைவிலும் அலைமோதத் தொடங்கியது. அதற்குரிய காரணம் தன் சுயநலம் என்பதையும் அவள் புரிந்து கொள்ளாமல் இல்லை.

இந்நிலைக்கு அடிப்படை என்ன ?

'ஆனந்தரங்கம் தன் மரணக் கோரிக்கையாக தன் மைந்தனுக்கு என்னைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்று தனது கடைசிக் கோரிக்கையை அம்மாவிடம் விடுக்க, அம்மா அதற்கு இணக்கம் காட்டாத வகையில் அடிக்குறிப்பாக பதில் எழுதி வைத்த முடிவின் காரணமாக, என் காதல் சிதைந்து விட்டதே என்ற மனக்குறையா ?... அல்லது. அன்று வந்த பெரியவரிடம் விடை கொடுத்தனுப்புகையில் என்னைக் கலந்து விரைவில் வந்து முடிவு சொல்வதாக அம்மா அப்பெரியவரிடம் சொல்லி அனுப்பியும், நாளது பரியந்தம் அதைப்பற்றி எதையும் பிரஸ்தாபிக்கவில்லையே அம்மா என்ற மனத்தாங்கலா ?... என்ற, இரு பிரச்னைகள் அவளுள் எழுந்தபோது, பெற்றவளிடமே மகள் 'சடனை' கொள்ளும் அளவுக்கு தன் சுயநலம் இடம் கொடுத்திருக்கிறதே என்று உணர்ந்து அத்தவறை எண்ணி மனம் நொந்தாள் குமாரி தமிழ்ச்சுடர். உடன் அவள் தனது தவற்றுக்குக் கழுவாய் தேடிக் கொள்ளவும் துணிந்தாள். ஆனால், அந்தக் கழுவாய்க்கு வழி எது

என்ற சிந்தனைதான் அவளுக்கு விளங்காத புதிராக இருந்தது. அந்தப் புதிர் தனது காதலைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற முடிவைச் செல்லிக் காட்டிய வேளையில், அவளுக்கு மண்டையே வலி தொடங்கி விட்டது. அப்போது, அவளுக்கும் வாழ்க்கை மாபெரும் போராட்டமாகவே தோன்றத் தொடங்கியது. ஆம், வாழ்க்கை எனும் பந்தத்தில் பிணைவதற்கு முன்பே வாழ்க்கை ஒரு போராட்டமாகவும் ஒரு பிரச்னையாகவும் அவனுள் விசுவரூபம் எடுக்கத் தலைப்பட்டது. இனம் புரியாத குழப்பமும் தவிப்பும் அவளைச் சுற்றிச் சுவந்திவலை பின்னின.

அப்போது, 'தமிழ்ப்பூங்கா' நடத்திய கட்டுரைப் போட்டியில் தான் அனுப்பிய கட்டுரையில்—'வாழ்க்கை ஒரு சாதனை!' என்ற அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்த மையக்கருத்து அவள் நினைவில் பளிச்சிட்டது. "வாழ்க்கை என்பது பிரச்னையோ அல்லது போராட்டமோ அன்று. அது ஒரு மாண்பு பொதிந்த கடமை. அந்தக் கடமையைச் செயலாற்ற எதிர்நீச்சல் பண்பும் தன்னலமற்ற பண்பாடுமே தேவை. விரிந்த மனமும் விரிசல் காணாத உரமும் தெய்வ நம்பிக்கையும் இருந்தால் கொண்ட கொள்கையும் கண்ட கனவும் ஈடேற நிச்சயம் வழி பிறக்கும்!... அன்பு, தர்மம், நேர்மை, பொறுமை, ஈரம், தியாகம் முதலான குணநலன்களே வாழ்வின் சாதனையைக்காக்கும்!..."

இன்னும் நிரம்ப எழுதியிருந்தாள். அவள் எழுதிய வரிகளின் உயிர்ச் சித்தாந்தம் இப்போது அவளுக்கே புதுப்போதனையாக அமைந்துவிட்ட விசித்திரத்தை அவள் உணரலானாள். அவ்வுணர்வின் தீர்ப்பாக மெய் தான், என் அன்னை சொல்லும் முடிவுதான் எனக்கு

வேதவாக்கு! அதுவே எனக்கு வேத விதி!···அதற்குப் பின்னர்தான் நான்! அப்பால்தான் என் காதல் விவகாரம்!···' என்ற சிந்தனையும் பிறந்தது. புதிய வைராக்கியத் தெளிவுடன் முகத்தைத் துடைத்துக்கொண்டாள் தமிழ்ச்சுடர்.

பக்கத்து வீட்டில் அழுதுகொண்டிருந்த மழலையை தாய் தாலாட்டிக்கொண்டிருந்த சத்தம் கேட்டது.

தமிழ்ச்சுடர் தன்னை ஈரைந்து மாதங்கள் சுமந்து பெற்ற அன்னையை நெருங்கினாள். புத்தகங்களை மேஜை விளிம்பில் வைத்தாள். பிறகு, "அம்மா!" என்று சொல்லி மரகதத்தம்மையை மெல்லத் தொட்டுத் தட்டி எழுப்பினாள்.

கனவு கண்டு விழிப்பவளாக மரகதத்தம்மை வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள்!

* * *

"அம்மா!"

"சுடர்!"

"ஏனம்மா அழுதுகிட்டிருந்தே?"

"அழுதேனா? நானா?" என்று அச்சப்பட்டுக் கேட்டுக் கொண்டே மகளை விழித்துப் பார்த்தாள் தாய். பிறகு முகத்தைத் துடைத்துக்கொண்டாள். கண்ணீர் கன்னங்களில் வழிந்திருந்த உண்மையை அவள் கண்டுகொண்டாள். ஓர் இமைப்பொழுது, பேசாமடந்தை ஆனாள்! "உன் அப்பாவின் நினைவு தினம்தினம் இப்படித்தான் என்னை ரகசியமா அழுது புலம்பவச்சிடும். இண்ணைக்கு நான் உங்கிட்டே அகப்பட்டுட்டேன். அவ்வளவுதான் சுடர்! சரி!" என்று சமாதானம் சொல்லி எழுந்தாள்.

அருகில் மண் கூஜாவில் இருந்த குளிர் நீரை ஒரு தம்ளரி வார்த்து முகத்தில் கொஞ்சம் தெளித்துக்கொண்டாள்; மிகுந்ததை வாயில் ஊற்றிக்கொண்டாள். எலுமிச்சம் பழத்தின் துண்டு படாத சன்னமான வாசனை இதமளித்தது. "அம்மா சுடர்! மணி என்ன ஆகுது?" என்று கேட்டாள்.

"ஏழுக்கு இன்னும் ஏழு நிமிஷம் இருக்கம்மா!"

"அடடே, அவ்வளவு பொழுது ஆயிட்டுதா? இரும்மா, காப்பி போட்டுப்பிடறேன்!"

"காப்பி வேண்டாம் அம்மா!"

"ஏன் சுடர், என் பேரிலே உனக்குக் கோபமா?"

"நல்ல அம்மா நீ! உன் பேரிலே நான் ஏன் கோபப்படுறேன்? தெய்வத்தின் மேலே கோபப்பட நான் யாரம்மா?"

இந்தப் பேச்சைக் கேட்டதும், மரகதத்தம்மாள் விநயமாக அரைச்சிரிப்பைக் காட்டினாள். "தெய்வமாக இருந்தால் மட்டிலும் யாரும் கோபப்படக்கூடாது என்று அர்த்தமா, என்ன? நீ சொல்வதைப் பார்த்தால், என்மேலே உன் மனத்தின் ஏதோ முடுக்கில் கொஞ்சம் கோபம் இருக்கும் போலல்லவா தோன்றுது?" என்று மடக்கினாள்.

"ஐயையோ! அப்படியெல்லாம் நீ சொல்லாதேம்மா. என்னாலே தாங்கமுடியாது. தெய்வம் என்றாலே, அந்தச் சொல்லுக்குள்ள பொருள், இடம், அந்தஸ்து, மதிப்பு எல்லாமே தனித்து நிற்கிறதில்லையா அம்மா! பின்னே, அந்தத் தெய்வத்தின் பேரிலே கோபப்படுறதுக்கு அந்தத் தெய்வத்துக் கீழ்ப்பட்டவங்களாலே என்ன சக்தி

யிருக்க முடியும்? தெய்வம் என்கிறதுக்கு உண்டான முழு அர்த்தத்தோடதான் நான் உன்னை நினைச்சுக்கிட்டு வருகிறேன். உன் அன்பும் கண்டிப்பும் அந்த அளவுக்கு என்னைப் பக்குவப்படுத்தி வருகிதே. எனக்கு உண்டாகிற நல்லது கெட்டது எல்லாத்துக்கும் நீதானே அம்மா ஆதாரம்! அப்படிப்பட்ட என் சுகதுக்கத்திலே உனக்கும் தானே அம்மா பங்கு?...'' என்று சற்றே துயரச் சுருதி காட்டிச் சொன்னாள் தமிழ்ச்சுடர்.

மரகதத்தம்மாள் அமைதி பூக்க புன்னகை செய்தாள். ''பின் ஏனம்மா சில நாளாக நீ கலகலப்பாகப் பேசாமல் இருந்தே?'' என்று மறுபடி ஒரு எதிர்வினாவைச் சாட்டையாகச் சொடுக்கினாள்.

உதயணன் நினைவில் ஆழ்ந்திருந்த அவளது பெண்மையின் காதல் மனம் இக்கேள்வியால் ஒரு குலுங்குக் குலுங்கி நிமிர்ந்தது.

தமிழ்ச்சுடர் பதில் சொல்லும் வகையைப் பற்றிச் சற்றே யோசித்துக்கொண்டிருக்கையில், மரகதத்தம்மை கேட்ட கேள்வியை நல்ல வேளையாக மறந்து தொலைத்தாள். ''இரம்மா, காப்பி போட்டுக்கிட்டு வந்திடுகிறேன். உன்கிட்டே கொஞ்ச நேரம் பேசணும்.'' என்று சொல்லிவிட்டு நகர்ந்துவிட்டாள்.

உதயணனுடன் 'ஐஸ் காப்பி' அருந்தி வந்த அந்தத் தவிர்க்க முடியாத சம்பவத்தைத் தன் அம்மாவிடம் உடனடியாகச் சொல்லாமல் விட்டு விட்டோமே யென்ற குற்றவுணர்வு அப்போது தமிழ்ச்சுடரைப் பாடாய்ப் படுத்தத் தொடங்கியிருந்தது!

# 13. வாழ்க்கை ஒரு பிரச்னையா?

தஞ்சாவூர் டிக்கிரி காப்பி என்றால் மிகவும் பிரசித்தமானது; இலக்கியப் பிரசித்தமானதும்கூட! பேராசிரியர் கல்கி அவர்கள் இந்த டிக்கிரி காப்பியைச் சுவைத்தறிந்தவர். ஆகவேதான் அவர் தம் கதைகளிலே இந்த வகைத் தனிக் காப்பியை சமயம் நேரும்போதெல்லாம் கொணர்ந்து வைத்துவிடுவார்.

தஞ்சாவூர் டிக்கிரி காப்பியை மரகதத்தம்மை சென்னைப்பட்டணத்தில் தன் இல்லத்திலேயே தயாரித்தாள். வாசம் கமழ்ந்தது. அதன் இனிய நெடுநல்வாடையைதான் அநுபவித்தவண்ணம் மகளுக்கு லோட்டாவில் கொண்டுவந்தாள். அவள் உள்மனம் அலைபாய்ந்தது. "இந்தாம்மா காப்பி!" என்று கூறி காப்பி லோட்டாவை ஸ்டூல் நகர்த்தி வைத்தாள் அவள்.

"நீ சாப்பிடம்மா!"

"நீ சாப்பிட்டதில் மிஞ்சினால் நான் சாப்பிட்டுக்கமாட்டேனா?…உங்க அப்பா காலத்தில் அவர் சாப்பிட்டதில் மிகுந்தது எனக்குத்தானே? நீ பிறந்தாய். அப்புறம் நீ குடித்ததில் மிச்சம் மீதிப்பட்டதை நானும் அவரும் குடித்தோம்!"

"அப்படிப்பட்ட பெருவயிற்றுக் காரியாகவா நான் இருந்தேன்? சே!" என்று ஒரு போடுபோட்டாள் சுடர்.

மரகதத்தம்மைக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. "நீ இன்னும் சாப்பிடவேணுமென்று நாங்கள் தவம் இருந்தோமம்மா!…எங்களுக்கு இப்படிப்பட்ட பாக்கியத்தைக் கொடுத்த தெய்வமாச்சேயம்மா நீ!

சரி, நீ இப்போது காப்பியைக் குடியம்மா!'' என்று நினைவூட்டினாள் அன்னை.

''நான் காப்பி சாப்பிட்டுவிட்டேனம்மா! அன்பர் உதயணன் காலேஜ் விட்டதும் என்னை வலுக்கட்டாயப் படுத்தி மெரினா காண்டீனுக்கு அழைச்சிட்டுப்போய் போய் ஐஸ் காப்பி வாங்கிக் கொடுத்தாரம்மா!'' என்று சிறுமியைப்போல வெள்ளை மனசுடன் விவரத்தை ஒப்படைத்துவிட்டு தாயின் முகத்தைப் பரிவுடன் பார்த்தாள் புத்திரி.

சைகந்நொடிப் பொழுதுக்கு மரகதத்தம்மை கண்களை மூடிக்கொண்டு நெற்றியில் வலது கைவிரல் பதித்து நின்றாள். மௌனக்கோலம்.

அந்நிலை குமாரி தமிழ்ச்சுடரைக் கசக்கிச் சாறு பிழிந்திருக்கவேண்டும்! கட்டிலில் குந்தியிருந்தவள் முள்ளூனை பட்ட பாவனையில் 'சடக்'கென்று எழும்பினாள். தாயை அச்சம் சூழ ஆண்டினாள். ''அம்மா, நான் ஒண்ணும் தப்புச் செஞ்சிடலையே அம்மா?... உதயண்னுடன் முதல் தடவையாக காப்பி சாப்பிட்டது தப்பா அம்மா?'' என்று கலக்கத்துடன் பரிதாபமாகக் கேட்டாள்.

மகளின் நிலையுணர்ந்த அன்னை மரகதத்தம்மாள் மகளின் சுருளலை படிந்த முன்புற முடி இழைகளைக் கோதி விட்டபடி, தப்பில்லேன்னு உனக்கு நீயே புரிஞ்சுக்கிட்டுத்தானே அம்மா நீ அந்த உதயணனுடன் சேர்ந்து காப்பி சாப்பிட்டாய்? அது ஒன்றும் தவறு இல்லே!... எப்பவும் சொல்றதையே இப்பவும் சொல்லுகிறேன். நீ எப்போதும் எந்த நிலைமையிலேயும் ரொம்பவும் உஷாரா யிருக்கணுமம்மா!... இந்த அவசர யுகத்திலே தாலி கழுத்துக்கு ஏறினாத்தான் எதுவும் நிச்சயம்!... நான்

ஒருத்தி காதலையும் கனவையும் அடி நாளையிலே வளர்த்துக்கிட்டு ஏமாந்தது போதாதாம்மா?... சரி, சரி! நான் என் ராமாயணத்தைப் படிக்கிறேன். நீ கொஞ்சமானும் சாப்பிடம்மா! நீ சாப்பிட்டால்தான் எனக்கும் சாப்பிட ஒப்பும். இன்னிக்கின்னு ஸ்பெஷலாப் போட்ட காப்பி! இந்தா" என்று கெஞ்சினாள். மகளது மென் கரங்களைப்பற்றி லோட்டாவைக் கொடுத்தாள். முத்துவளைகள் முத்துதிர குலுங்கி அடங்கின.

சுடர் காப்பி அருந்தினாள், உதயணனுடன் காப்பி அருந்தியபோது, 'எது எப்படியானாலும் சரி, எப்படியும் உதயணனையே மணக்கவேண்டும்!' என்ற பிரதிக்ஞை மின்வெட்டி, அந்த முடிவில் மனப்பலம் எய்திய விந்தை இப்போது அவளுக்கு வெறும் மாயை போலப்பட்டது. 'என் அம்மாவை உதயணனின் அப்பா ஏமாற்றியதைப் போல, இப்போது என்னை இந்த உதயணன் ஏமாற்ற மாட்டார் என்பது என்ன நிச்சயம்? பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் உலகத்தில் பாதிக்கப்பட்ட காதல் கனவுகள் கூடுதல் என்பதாக குறிப்பிடப்படவில்லையா?... ஆனால், உதயணனின் இது நாள் வரைப்பட்ட நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, அவர் எவ்வளவோ கண்ணியமானவராயும் நேர்மையானவராயும்தான் தோன்றுகிறார்!... ஆனால் அம்மாவுக்கு ஆனந்தரங்கத்தின் பரிசை ஏற்க மறுத்ததிலிருந்து, அவரது கோரிக்கையும்-அதாவது, என்னை உதயணனுக்கு மணம் முடித்து வைக்கக் கோரிக்கையையும்தான் அம்மா மறுக்கிறாள் என்பதுதான் கூடகமாகத் தெரிகிறது. ஒருவேளை, இந் நிலைக்கு ஆதாரமாக பொருளாதார ஏற்ற இறக்கத்தைத் தான் அம்மா முதல் கணிப்பாகக் கருதுகிறாளா? அல்லது, தன்னை வஞ்சித்த மனிதரின் வீட்டில் சம்பந்தம் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற வைராக்கியத்தின்

விளேவாக அவள் மறுக்கிருளா? எதை வைத்து 'ஆனந்த ரங்கத்தின் கடிதத்தின் அடியில் தன்னே மன்னிக்குமாறு எழுதியிருந்தாள்?... ஆனுல்... இன்று அந்திமாலேயில் மெரிஞ கடற்கரை மணல் வெளியில் சற்று நடந்து வந்த போது, "சுடர், அப்பாவுக்கு உங்க வீட்டிலே சம்பந்தம் வைத்துக்கொள்ள ஒரே துடிப்பாக இருக்கிறது. என் நல்லதிர்ஷ்டந்தான் அவர் மனம் என் திசைக்கே திரும்பி யிருக்குது. நீ அம்மா பெண். ஆகச்சே, உன் அம்மா விடம் எப்படியும் நல்லமுடிவை எனக்குச் சாதகமாக வாங்கிடு!... உன் அம்மாவாக்கை நீ தேவ வாக்காகக் கருதுகிற பெண் ஆகையாலேதான் நான் இப்படிச் சொல்லுகிறேன்!..." என்று உதயணன் மன்ருடிய போது, 'ஆகட்டும், பார்க்கிறேன்!' என்று நான் பொது வான—மையமான ஒரு பதிலேச் சொல்லிவிட்டு வர வில்லேயா?...'

நினேவுகள் மலர்தொடுத்தன. ஆனுல் அம்மலர்களில் இதயத்துக்கு இதம் அருளும் சுகந்தம் வரவில்லே.

"என்னம்மா, ஒரேயடியாய் யோசனேயிலே ஆழ்ந் திட்டே?" என்று சுடரைத் தூண்டினுள் தாய்க்காரி.

தமிழ்ச்சுடர் தடுமாறினுள்.

"இரம்மா, பூஜை அறைக்குப் போயிட்டுத் திரும்பிடுறேன்!" என்று தெரிவித்த கையோடு நகர்ந்த மரகதம்மை மீண்டபோது கையோடு ஒரு சிறிய பூப் பையைக் கொணர்ந்தாள். வலது கைவிரல் நுனியில் மறைத்தபடி விபூதித் துணுக்கைக் கொண்டுவந்து சுடரின் நெற்றியில் பூசினுள். "கார்த்திகை அல்லவா? வடபழனி ஆண்டவனேத் தரிசிச்சுவந்தேன்!" என்ருள். பின்னர், பையைப் பிரித்தாள். "இந்தாப் பாரம்மா, இந்த நகையை!" என்று சொல்லி ஓர் அழகிய வெல்

வெட்பெட்டியைத் திறந்து காண்பித்தாள், மரகதத்தம்மாள்.

*　　　*　　　*

சூழல் ஒளியின் காம்பீர்யத்தில் அந்நகை, நகை புரிந்தது. அழகுச்சுடர் தெறித்து விளையாடியது.

அது ஒரு நெக்லஸ்.

''பார்த்தாள் தமிழ்ச்சுடர். அப்படியானால், ஸ்ரீமான் ஆனந்தரங்கத்தின் நகையை நீ திருப்பிக் கொடுக்கவில்லையா?'' என்று கேட்டாள்.

இக் கேள்வி மரகதத்தம்மாளை யோசனையில் ஆழ்த்தியிருக்க வேண்டும். ''ஏனம்மா சுடர், அப்படிக் கேட்கிறே?... நான் அந்த நகையை ரிட்டன் செஞ்சிடுவேன்னு நீ உறுதியாய் நினைச்சிருந்தியா?'' என்று கேள்வியைத் தொடரலானாள்.

''உன்னுடைய பழைய பேச்சுக்களை ஒட்டி அப்படித்தான் நான் யூசிச்சிருந்தேன் அம்மா! சந்தர்ப்பம் வரும் போது, அந்த உண்மையைச் சொல்லிட்டேன்!'' என்றாள், தமிழ்ச்சுடர்.

மரகதத்தம்மை விகல்பம் ஏதுமின்றி உள்ளார்ந்த வகையில் சிரித்தாள். ''அப்படியா! சரி, அந்த வைர அட்டிகையை ஸ்ரீமான் ஆனந்தரங்கம் அவர்களிடமே திருப்பிக் குடுத்தாச்சு!... இது புது நெக்லஸ். ஆனா, இது வைரமல்ல! அசல் ரங்கூன் கமலம்!... உம்மிடியாரில் வாங்கினேன்;... உன் அப்பாவும் இருந்து அதிர்ஷ்டமும் முன்னைக் காலம்போல இருந்திருந்தால், இந்நேரம் ஆயிரம் வைர நெக்லஸ் வாங்கிப் போட்டிருப்பேனே உனக்கு!... அந்த அட்டிகையின் மாடலை நீ, ரொம்பப்

புகழ்ந்தே! ஆகவே, அதே அச்சாக தேடித்தேடி வாங்கிட்டேன்!... உன் அதிர்ஷ்டம் நல்ல விதமாக இருந்தால், பிறகு, வைர நெக்லஸ் ஒன்றை வாங்கிப் போட்டுவிடுகிறேன் அம்மா!... இல்லே, இப்போதே வேண்டுமானாலும், மனசை ஒளிக்காது சொல்லிப்பிடு. இப்பவே போய் வாங்கி வந்திடுறேன்! நாலையும் நினைச்சு, வருங்காலத்தையும் உத்தேசித்து சிக்கனமாய் இருக்கவேணுமிங்கிறது என் லட்சியம். என் லட்சியத்தின் ஜீவனே நீ! உன் இஷ்டப் பிரகாரம் உன்னை நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்திட்டேன்னு, அப்பறம் எனக்கு ஏதம்மா கவலே?'' என்றாள். தொண்டை கரகரத்தது.

தாயின் பேச்சு மகளின் மனத்தைத் தொட்டது. ''உண்மைதான் அம்மா!... வைரம் வேணுமம்மா!... எனக்கு! நீ பிரியப்பட்டு வாங்கி வந்ததாலே, இதைக்கூட மறுக்க எனக்கு மனசில்லே!...'' என்று சொல்லி, சற்றே நிறுத்தினாள்.

''ஆனந்தரங்கத்தின் பரிசை நான் திருப்பிக் குடுத்திட்டதைப் பத்தி உன் அபிப்ராயம் என்னான்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''அம்மா, அது உன் சொந்த விஷயம். நீ செஞ்சது சரியின்னு உனக்குத் தெரிஞ்சா, அதுவே சரிதான்! நான் சின்னப் பெண். எனக்கு இதெல்லாம் என்னம்மா புரிகிறது?'' அவள் முகம் கறுத்தது.

''சட்டரீதியிலேயே என் விஷயத்தைப் பொறுத்த மட்டிலே நீ பேசுறியம்மா!... சரி, இது இத்தோடு இருக்கட்டும். நெக்லஸ் உனக்குத் திருப்திதானே !... இல்லேய ?''

''ஆஹா ! விலே என்ன?''

''விலை கொஞ்சம்தான்! ம்... பழைய வாசனை!... ஆயிரத்தெண்ணூறு ரூபாயம்மா! அசல் தங்கம்!''

''அதிகம்!''

''விலையா கூடர்?''

''இல்லை, இது எனக்கு அதிகம்!...''

''நல்ல பெண்ணம்மா நீ! நீ பிறந்தப்ப கொண்டு வந்த சீதேவியை நீ மட்டும் நம் வீட்டிலேயே நிரந்தர வாசம் செய்யும்படி பண்ணியிருந்தேயின்னு, உன்னை இந்நேரம் எப்படி எப்படியெல்லாமோ தேவகன்னிகை யாக ஆக்கிப் பார்த்திருப்போமே?'' என்று சொன்னாள் தாய்.

''நானும்மா அந்தச் சீதேவியை அடித்துத் துரத் தினேன்?'' என்று சிடுத்தாள் மகள்.

''துன்பம் உன்னைச் சிரிக்க வைக்குது!'' என்று தானும் சிரித்தாள் மகள்.

''துன்பம் உன்னைச்சிரிக்க வைக்குது!'' என்று தானும் சிறித்தாள் தாய். ''நம் குடும்ப அதிர்ஷ்டம் அவ்வளவுதான். அதனுலென்னம்மா? வாழ்ந்த வரை பெருமையோடும் பெருமிதத்தோடும் வாழ்ந்தாச்சு! அந்த ஒரு அமைதி நம் சொச்சக காலத்துக்கும் ஒத்தாசை செய்யுமே!'' என்முள்.

''நான் படிச்சு முடிச்சதும், முதல் வேலையாக ஒரு வேலையைத் தேடிக்கொள்ளவேணும். என் சம்பளத்தைக் கொண்டு நம்ம குடும்பச் செலவு தன்னக்கட்டிப் போகும்படி செய்ய வேணும், தோணும்போது கதை கட்டுரை யென்று எழுதினல் உபரியாகச் சம்மானமும் கிடைக்கும்.''

''ம்!'' என்று பெரு மூச்சு விட்டாள் மரகதத்தம்மாள் ''சகோதரக்கிளென்னு இல்லாததாலே உன் நினைப்பு இப்படி ஓடுது!... ம்!... எனக்கொரு கெட்ட பழக்கமாயிடுச்சு இது. நடந்த கதையையே எண்ணி நலியிறேன். இது கூடாதின்னு புரியுது. ஆனா, மனசுதான் கேட்கல்லே! ஆமா, இப்போதே பணம் கிணம்னு பேசுறீயே, அப்படியானால், உன் கல்யாண சமாச்சாரம் எப்போது ஆரம்பமாகிறதாம்?'' என்று வினவினாள்.

''அதற்கென்னம்மா இப்போ அவசரம்?''

''நல்ல பெண்ணம்மா நீ!... அன்னைக்கு வந்தாரே பெரியவர் சோமநாதன்— அதுதானம்மா, ராஜசேகரனோட அப்பா— அவர் எனக்கு எட்டத்துச் சொந்தம். அண்ணா ஆகவேணும். ராஜசேகரனுக்கு உன்னைப் பிடித்திருக்குதாம். என் சம்மதம் கேட்டார். நான் உன்னோட சம்மதத்தைக் கேட்டுச் சொல்கிறதாய்ச் சொன்னேன். மத்தியானம் அவரை மாம்பலத்திலே கண்டேன். கூடிய சீக்கரம் வந்து சொல்வதாக மறுபடியும் தவணை வச்சிட்டு வந்திருக்கேன்!...''

தமிழ்ச்சுடர் சலனம் கண்ட முகத்தை நிமர்த்தி அர்த்த புஷ்டியுடன் நோக்கினாள். 'அப்படியென்றால் மிஸ்டர் உதயணன் கேஸை பெண்டிங்கிலேயே வைத்துவிட்டாளா அம்மா?... இல்லை, எங்கள் காதலை அங்கீகரிக்காமல் இந்த விஷயத்தையே கான்சல் செய்துவிட்டாளா அம்மா?... அதனால் தான் புது கேஸை எடுத்துக்கொண்டிருக்கிறாளா?' கண்களைக் கட்டிக் காட்டில் விட்டபாங்கில் அவள் தவித்தாள். மன நெகிழ்ச்சியில் கன்னி நெஞ்சம் எம்பி எம்பித் தாழ்ந்தது.

''சுடர்!'' என்று தூண்டினாள் பெற்றவள்.

''அம்மா! முதலில் பரீட்சை முடியட்டும். பிறகு என் கலியாணத்தைப்பத்தி யோசிச்சுக் கிடலாமே?'' என்று விடை பகர்ந்தாள் குமாரி தமிழ்ச்சுடர்.

''அப்படியா? சரியம்மா. உன் இஷ்டப்படியே ஆகட்டும், சுடர்!'' என்ருள் மரகதத்தம்மாள். சடுதியில்எதையோ நினைவுபடுத்திக் கொண்டு, இடது கையைப் பார்த்தாள் அந்தம் நிறைந்த லேடீஸ் ரிஸ்ட் வாட்ச் ஒன்று இருந்தது.

''இந்தாம்மா, கைக்கடியாரம். இது உன்பரிசு, ஆமாம். உனக்கு கிடைச்ச இலக்கியப்பரிசுப் பணத்தைக் கொண்டு வாங்கியது. என்னம்மா, அப்படிப் பார்க்கிறே?... என்னையும் உன்னையும் பிரிச்சுப் பேசுறேனேன்று? சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். உன் பரிசுச் செக் காஷ் ஆகி தனியே இரும்புப் பெட்டகத்தில் இருக்குதம்மா!... ஆமாம். இருப்பது எல்லாம் உன் பணம்தான்!... இதைப்பாரம்மா! பிடித்திருக்கா?'' என்று மரகதத்தம்மாள் சொல்லி, கடிகாரத்தை நீட்டிஞள் மகளிடம்.

தமிழ்ச்சுடர் அதை வாங்கி முன்னும் பின்னுமாகத் திருப்பி அழகுபார்த்தாள். அழகு காட்டியது கடிகாரம் 'ரோமர்' என்ருல், அதன் மதிப்பு தனிரகம் தான்! ''ரொம்ப அழகாயிருக்கம்மா!'' என்று சான்றிதழ்வழங்கிஞள்.

''பரீட்சைக்கும் இது பயன் படும்!''

''எப்படியம்மா? என் பாடத்தையெல்லாம் இந்த ரிஸ்ட் வாட்ச் பாடம் செஞ்சிடுமாம்மா?''

தாய் சிரித்தாள்.

தாயின் சிரிப்பைக் கண்டு மகள் சிரித்தாள்.

''அடுத்தாற்போல, நல்ல ரேடியோவும் வாங்கிடனும்னு இருக்கேன், முன்பு நம்ம வீட்டிலே இருந்து உடைஞ்சுபோன அந்த ரேடியோ மாதிரியே வாங்கிடலாம்!'' என்றும் செய்தி அறிவித்தாள் அன்னை.

''உன் திட்டங்கள் அவ்வளவுதானா?''

''நீ என்னம்மா என்னை தமாஷ் பண்ணுறே? நீ படியம்மா. நான் போய் விரதத்துக்கு ரவா கிளறுற வேலையைப் பார்க்கிறேன் அம்மா!'' என்று சிரித்தபடி சொல்லிவிட்டு, காப்பி லோட்டாவை எடுத்துக்கொண்டு கிளம்பினாள் மரகதத்தம்மாள். ''நெக்லஸையும் கடிகாரத்தையும் எடுத்து உன்காட்ரேஜ் பீரோவில் வச்சுக்கம்மா!''

''ஓ கே!'' என்று சொல்லி கல்லூரிப் பாடத்தில் கவனம் செலுத்த முனைந்த தமிழரசியின் நெஞ்சரங்கத்திலே, அப்பொழுது உதயணனும் ராஜசேகரனும் உச்சாணிக் கொம்பில் நின்று அழகு காட்டி விதியெனச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அது சமயம், அவளது கன்னி மனம் தன்னுடைய தாழ்ந்த செல்வ நிலையை எண்ணி எண்ணி ஏக்கமடைந்து கொண்டிருந்தது. 'வாழ்க்கை என்பது உண்மையிலேயே அம்மா சொல்கிற மாதிரி ஒரு பிரச்னைதான் போலிருக்கிறது!' என்ற எண்ணம் வலுவடையத் தொடங்கியது! மறுமுனையில் கவனிப்பாராற்றுக் கிடந்த அவளது சொந்த டைரியில் அவள் கவனம் விழுந்தது. ஏதோ ஒரு வைராக்கியத்தால் உந்தப்பட்டு, ஏதே ஒரு முடிவுடன் பேனாவும் நாட்குறிப்புமாக மனம் லயித்தாள் குமாரி தமிழ்ச்சுடர்! காதல் பிரதிக்ஞை விடுத்த உதயணன் தன் பூங்கரம் பற்றி உணர்வின் சுழிப்புடன் மனம் மயங்கி நின்ற இன்பக் கோலம் உயிர்த் துடிப்பாக இயங்கிக் கொண்டேயிருந்தது!...

## 14. அபலை

சோக்க வெள்ளிப் பாற் குடத்தைச் சிறை வைத்த இன்ப வேதனையில் மனம் தவித்துக் கொண்டிருந்த ஜன்னல் கம்பிகளையே வெறித்துப் பார்த்தவாறு படுத்துக் கிடந்த மரகதத்தம்மைக்கு உறக்கம் பிடிக்கவில்லை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிப் புழுங்கினாள்; நினைத்திராத பிரச்னைகளெல்லாம் புதிராக மூட்டம் போட்டு பேயாகத் தலைவிரித்தாடத் தொடங்கி விட்டதைக் கண்ட அவள் தலையினின்றும் தலையைத் தூக்கிக் கொண்டு உட்கார்ந்தாள். ஸ்ரீமான் குணசீலனின் மறைவுக்குப்பின் அமைந்த அவ்வீட்டின் நெறிமிக்க தலைவி மரகதத்தம்மையாகவும் தம் கடமைகளையும் பொறுப்புக் களையும் கண்டிப்புடன் செயலாற்ற வேண்டிய தன் ஒரே மகள் தமிழ்ச் சுடரின் லட்சியத் தாயாகவும் மாறிமாறித் தோன்றினாள். அவ்விருவகைப் பின்னணிக்கு மத்தியில் ஒரு காலத்தில் காதல் தோல்வி அடைந்த மரகதமாகவும் அவள் புதிராகி விளையாடத் தவறவில்லை.

இப்போது அவள் சுயப்பிரக்ஞையுடன் சுயநோக்கு பூண்டு தன்னைத்தானே எடைபோட்டுப் பார்க்கவேண்டிய தொரு கட்டத்திற்குத் தன்னை உடந்தையாக்கிக் கொண்டாள். அப்படிப்பட்டதொரு இக்கட்டுக்குதான் ஆளாகிவிட்டிருப்பதாகவே அவளது அந்தரங்கமும் மனச்சாட்சியும் அவளிடம் உணர்த்தின.

'என் லட்சியத்தின் ஜீவன் நீ! உன் இஷ்டப்பிரகாரம் உன்னை நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்திட்டேன்னு' அப்புறம் எனக்கு ஏதம்மா கவலை? என்பதாக உள்ளம் நெகிழ்ந்து, மனம் உணர்ந்து பேசிய அப்பேச்சு தன் மகளின் நெஞ்சைத் தொட்டதை தன் மகளின் முகபாவத்திலிருந்து புரிந்துகொண்ட மாதிரி அப்பேச்சு தன்

நெஞ்சையும் தொட்டு உலுக்கி விட்டதையும் அவள் உணர்ந்து கொண்டாள். அவ்வுணர்வின் ஆரம்பப் புள்ளி யிலிருந்து பிரிந்த பலதரப்பட்ட சிந்தனைகள் அவளை வட்டமிடத் தொடங்கின. தன் செல்வத் திருமகளைப் பொறுத்த அளவில் அவள் பிறந்ததிலிருந்து அவள் வளர்த்து ஆளாக்கப்பட்டது வரைக்கும் கண்டிப்பும் கருருமாக நிர்வகித்து வந்த தான், அத்தகைய கொள்கை களே தன் முதல் லட்சியம் என்று கொண்டுவந்திருந்த இலக்குப் பிடிப்பு இப்போது தன்னை விட்டுப்பிரிந்து, தன் மகளின் இன்ப எதிர்காலத்தை ஒட்டிப் பின்னிப் பிணைந்து கொள்ள வேளை பார்த்துக்கொண்டிருந்த புதுத் திருப்பமும் அவளுக்குப் புலப்படத் தொடங்கியது. 'என் தமிழ்ச்சுடரைப் பொறுத்தமட்டில் என் கொள்கைகள் அவள் நல்வாழ்வை எண்ணி இதுவரை ஸ்திரமாக இருந்த தென்னவோ உண்மைதான். அதுதான் நியாயமும்கூட. அதன்காரணமாகவே, நான் என் மகளை ஒரு லட்சியப் புதல்வியாகவும் உருவாக்க முடிந்தது! அதுதான் பெற்ற என் மனத்துக்கு நிறைவையும் பெருமையையும் தருகின் றன!' என்றும் அவள் அமைதி அடைந்தாள்

ஆனல் அந்த அமைதி, 'தமிழ்ச்சுடரின் திருமண விஷயமாக நான் செய்ய வேண்டிய முடிவு—கடமை—பொறுப்பு என்ன?' என்ற ஒரு கேள்வியில் தறிகெட்டுச் சுற்றத் தொடங்கி விட்டது.

சுவர்க் கடிகாரம் பத்தடித்து ஓய்ந்தது!

ஆனல் அவளது மனச்சலனம் மட்டும் ஓயவே யில்லையே!....

ஒரு குவளை தண்ணீர் எடுத்துக் குடித்துவிட்டு வந்து மீண்டும் கட்டிலில் வந்து குந்தினள். மீண்டும் எண்ணங் கள் புயலாக வீசலாயின!

*

மரகதத்தம்மையின் இதயம் இப்போது உத யணனைப்பற்றி நினைத்தது: உதயணன் என்ற இளைஞன் தன் மகளின் கல்லூரித் தோழனாக அமைந்து அன்பு பாராட்டித் தன் பங்களாவுக்கு தமிழ்ச்சுடரை அழைத் துச் சென்று ராசோபசாரம் செய்த அருமையை மகள் புகழ்ந்த நடப்பு, பின்னர் ஆஸ்பத்திரிக்குச் சென்ற சமயத்தில் அந்த உதயணன், ஒரு காலத்தில் தன்னை காதலில் தோல்வி அடையச் செய்த தனவந்தர் ஆனந்த ரங்கத்தின் புதல்வன் என்ற ரகசியத்தை உணர்ந்த சம்ப வம்- அப்பால், உதயணனை அவன் பழகிய பான்மையை அனுசரித்து 'உதயணன் ரொம்ப நல்ல பிள்ளையாகத் தோணுது!' என்று தன் புதல்வியிடம் சிலாகித்துப் பேசிய விதம் போன்ற கதைப்பிசிறுகள் அவளது தளர்ந்த நெஞ் சத்தில் தோன்றின. ஆனந்த ரங்கம் பிழைத்துவிடுவா ரென உதயணனிடம் ஆறுதல் மொழிந்தபோது, ''எல் லாம் உங்களைப் போலொத்த நல்ல உள்ளங்களோட அனுக்கிரகம்தானம்மா! உங்க அன்பு பெரிசு!...ரொம்ப நன்றிங்க!'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறிய நிகழ்ச்சி கோடி காட்டியது. ஒரு தடவை தன்னையும் சுடரையும் தன் வீட்டுக்கு வரும்படி கோரிய பேச்சின் உண்மையும் அவளுள் ஒளி காட்டிற்று. உதயணனைப்பற்றிச் சொல் லும்போது அவன் மிகவும் நேர்மையுடனும் நாணயத்துட னும்பாசத்துடனும் அன்புடனும் பழகும் நெறிமுறை களைப்பற்றி தமிழ்ச்சுடர் பெருமைப்பட்டுப் பேசிய நிகழ்ச்சிகள் ஒன்றல்ல இரண்டல்லவே? ஆக; இந்த நடப் புக்களை வைத்துச் சிந்தித்துப் பார்த்தால், உதயணனின் இன்ப நினைவு தமிழ்ச் சுடரின் கன்னி மனத்தில் ஆழப் பதிந்துதான் விட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அதனால்தான், ராஜசேகரனைப் பற்றிய பேச்சை ஆரம் பித்தபோது, தன் திருமண விஷயமாகப் பிறகு பார்த்துக் கொள்ளலாமென்று சுடர் கூறிவிட்டாள் போலிருக்கி

றது!··· அப்படியென்றால், நான் ஆனந்தரங்கத்தின் பரிசைத் திருப்பிக் கொடுத்து வந்ததை அறியும் என் மகள் அவரது கடிதத்தில் தன் மைந்தனுக்கு சுடரை மணம் முடித்து வைக்கும்மாறு கோரிக்கை விடுத்திருந்ததற்கும், பரிசுக்கும் சேர்த்து, கடிதத்தின் அடியில் 'என்னை மன்னித்துவிடுங்கள்!' என்று பொதுப்படையாக பதில் கொடுத்திருந்த நிலவரத்தையும் என் அன்புப் புதல்வி அறிய நேர்ந்தால், அவள் மனம் வருந்தாதா? ஆனந்தரங்கத்தின் இரு கோரிக்கைகளுக்குமே நான் மறுப்புச் செய்த விவரம் அறிந்தால் அவள் கன்னி உள்ளம் கானல் நீர்தான் காதல் என்று என்மாதிரி நோகாதா?... நான் செய்த காரியத்தைப்பற்றியும் மகளிடம் தெரிவிக்காமல் இருந்தது தவறு இல்லையா? என்னையே பெரிதாக நினைத்து என் செல்வத்தை இரண்டாம் பட்சமாக மதிப்பிட்டு விட்டது எவ்வளவு பெருந் துரோகம்!··· துரோகமா?··· ஐயையோ, தெய்வமே!...'

அலைபாய்ந்து கொதித்துக் குமுறிக் கொந்தளித்த மரகதத்தம்மையை அவள் மனச்சாட்சி குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வேடிக்கை பார்த்தது.

அப்போது புதிய கவலையொன்றும் அவளைப் பீடித்தது. 'ஆனந்தரங்கம் உறங்கிக் கொண்டிருந்ததாகச் சொன்ன வேலையாள் கிழவனை தனகோடியிடம் கொடுத்துவந்த ஆனந்தரங்கத்தின் பரிசுப்பெட்டியை நல்லபடியாக அவர் வசம் அவன் சேர்ப்பித்திருப்பானல்லவா?' என்ற தவிப்புடன் அவள் படுக்கையில் சாய்ந்தாள், கண்ணீரின் விம்மலுடன்.

மணி பன்னிரண்டு அடித்தது மரகதத்தம்மைக்கு நன்றாகக் காதுகளில் விழுந்தது!

# 15. கதைக்குள் கதை

திராவிடமுன்னேற்றக்கழத்தின் முன்னணித் தலைவர்கள் சிலர் வருகிற அறுபத்தேழு தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை விளக்கி, தங்கள் கழகம் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றுவது உறுதி என்றும் அவ்வாறு வெற்றி பெற்றால், தங்களை நம்பிய பொது மக்களுக்குத் தாங்கள் முழு நேரப்பணி செய்வது நிச்சயம் என்றும் மெரினுகடற் கரையில் பேசிய பொதுக் கூட்டணிப்பேச்சை அந்தச் செய்தித்தாள் தலைப்புச் செய்தியாக கொட்டை எழுத்துக்களில் மரக்கட்டை அச்சில் வெளியிட்டிருந்தது!

இதைப் படித்ததும் தமிழ்ச்சுடர் அசந்துவிட்டாள். அச் செய்தி மலைப்பாகவும் அதிசயமாகவும் தோன்றியது. அந்நிலையில், அவள் மனம் கட்டுக்கடங்காத ஈடுபாடு கொண்டது. உடனே, "அம்மா! அம்மா!" என்று அலட்டினுள்.

கைவேலையை அடுப்படியில் அப்படி அப்படியே போட்டுவிட்டு என்னவோ ஏதோ வென்று பரக்கப்பரக்க பறந்து ஓடிவந்தாள் மரகதத்தம்மாள். "என்னம்மா விஷயம்?" என்றுள்.

பதிலாடாமல், அந்தப் பத்திரிகையை நீட்டி, தலைப்புச் செய்தி எழுத்துக்களில் வலது கை ஆள்காட்டி விரலைச் சுட்டிக்காட்டினுள் தமிழ்ச்சுடர். "ஏம்மா, இவங்க தேர்தலிலே ஜெயிச்சு ஆட்சியைப் பிடிச்சிடுவாங்களாம்மா?" என்று துடிப்புடன் விசாரித்தாள்.

இலேசாகச் சிரித்தாள் மரகதத்தம்மாள். "எனக்கு ஜோஸ்யம் தெரியாதே அம்மா?...இந்தத் தலைவிதியை

நிர்ணயம் செய்கிறவுங்க பொது ஜனங்கள் தாமே?... என்ன நடக்கும்னு இப்போதைக்கு நமக்கு என்ன புரியும்?...இவங்க சொல்ற உறுதி மொழிகளை ஜனங்க நம்பினல், அநேகமாய் இவங்களே ஆளும் கட்சியாய் மாறுடலாம்னு சொல்லலாம்!···அரசியல் என்கிறது ஒரு சூதாட்டம்னும் உங்க அப்பா அடிக்கடி பேசுறது வழக்கம். சூதாட்டத்தோடவிதி எப்படி அமையுதோ, பார்க்கலாம்!... ஆனா, ஒன்றுமட்டும் உண்மை!···" என்று இழுத்தாள்.

"என்னம்மா?"

"இப்போதுள்ள காங்கிரஸ் சர்க்கரும் தமிழ்நாட்டுக்காக எவ்வளவோ செஞ்சிருக்குது; செஞ்சுக்கிட்டும் வருது. ஒண்றிரண்டு குறை இல்லாமலா இருக்கும்? ஆனா, ஒண்ணு. யார் வந்தாலும், எப்போதுமே யாராலுமே பொது ஜனங்களை பூரணமாய்த் திருப்தித்படுத்த மட்டும் முடியாது! பொது ஜனங்கதான் தேர்தலைப் பொறுத்தவரைக்கும் சர்வவல்லமை படைச்ச கடவுள்கள்! அவங்க நினைச்சால் எதையும் செஞ்சிடுவாங்க!... ஆக்கிறதும் அழிக்கிறதும் அவங்க கைக்குள்ளே தான்!..."

'ம்' என்று பெருமூச் செறிந்தாள் தமிழ்ச்சுடர் "அடுத்த வருஷம் இந்நேரம் நம் நாட்டோட நிலைமை தெளிவாய்த் தெரிஞ்சிடும்!" என்றாள்.

"ஆஹா!..."

மரகதத்தம்மாள் உள்ளே சென்றாள்.

அரசியல் சூழலின் சூடான பேச்சை அத்துடன் நின்றது: எனவே, சூடான காலைக்கதிர்கள் எங்கும் வியாபித்தன.

ஞாயிற்றுக்கிழமைப் பொழுது மணி எட்டு என்றால், அதற்கொரு மகிமைதான்.

தமிழ்ச்சுடர் கூடத்தில் புத்தகங்களை எடுத்து வைத்துக்கொண்டு அமர்ந்தாள், ஓய்வாக கொட்டாவி வந்தது; இரவு நெடும்பொழுது படித்து விட்டாள். பன்னிரண்டு பத்து—அவள் உறங்கச் சென்றபோது. அவளது புதுக் கடிகாரம் ரம்யமாக இருந்தது கல்லூரித் தோழி பங்கஜம் கேட்டாள். "ஏண்டி சுடர், உன் மாரேஜுக்கு இதுதான் முதலாவாதின முன்னறி விப்பாக்கும்!"

"போடி!" என்று வெட்கத்துடன் மழுப்பினாள் தமிழ்ச்சுடர்.

"உன் லவர் மிஸ்டர் உதயணனுக்கு ஒரு செல வினத்தைக் குறைத்துவிட்டாய்!"

"ஏதேது, நீயே ஊருக்கெல்லாம் 'டாம் டாம்' போட்டிடுவே போலிருக்கே!... நீ மிஸ்டர் சாரங்கனோடு பழகுறமாதிரி, நான் மிஸ்டர் உதயணரனோடு பழகு கிறேன். இந்த ஒருவாய்ப்பை அவருக்கு மட்டுமே நான் கொடுத்திருக்கிறேன். ஆனால், அவர் என் கணவராக வாய்ப்பாரா என்பதை கடவுளும் என் அம்மாவுமல்லவா முடிவிடவேணும்!... நீ அப்பா செல்லம். உன் காதலை 'அப்ருப்' செய்துவிட்டார் உன் அப்பா! ஆனால் என் அம்மா சொல்தான் எனக்குச் சகலமும்!... அவர்கள் 'அப்ருப்' செய்தால் என் பாக்கியந்தான்;... மிஸ்டர் உதயணன் திட்டத்துக்கு அவர் பெற்றோர்கள் 'ஒ. கே.' சொல்லிவிட்டார்கள்!"—டக்'கென்று நிறுத் தினாள் சுடர்.

"பாரேன், உன் லவ்ட்ரீம் கட்டாயம் வெற்றி பெறும்!" என்று ஆசி கூறினாள் பங்கஜம்.

தமிழ்ச்சுடர் உடம்பைச் சிலிர்த்துக்கொண்டாள். கடவுளைப்போலவே தன் தாயும் விடுவிக்க முடியாத புதிராகவே தோன்றினள் அவளுக்கு.'புதிரென்ன' புதிர்?... வைர நெக்லஸை மறுத்ததுடன் ஆனந்தரங்கத்தின் இரண்டாவது வேண்டுகோளையும் மறுத்ததற்கு அடையாளமாகத்தான் அடிக்குறிப்புப் பதிலை அம்மா எழுதிவிட்டாளோ? அதற்கு மறைமுகமான அத்தாட்சிபோலத் தான், ராஜசேகரனைப்பற்றிப் பேச்சை எடுத்துவிட்டாளோ?' மீண்டும் அவளுக்கு இதே நினைவோட்டம் தொடர்ந்தது. அன்று இராத் தூக்கம் கெட்டதுடன், இனிமேல் பரீட்சை முடியும் பரியந்தம் இந்தக் காதல் வியவகாரத்தைப் பற்றிச் சிந்திக்கவே கூடாது!'' என்று தான் திடசங்கற்பம் செய்துகொடிருந்தாள். ஆனால் நேற்று மாலையில் உதயணன் அவளை—தமிழ்ச்சுடரைச் சந்தித்தான். ''நம் லவ்மாரேஜ் பற்றி உங்க மதர் 'ஓ கே,' சொல்லிவிட்டார்களா?'' என்று ரொம்பவும் அவசரப்பட்டுக் கேட்டான்.

அவள் அவசரமில்லாமல் இளநகைசிந்தினள். உங்க அப்பா உங்க காதலை—விருப்பத்தை அங்கீகரித்து விட்டார். ஆனால் என் அம்மாவாக நம் காதலைப் பற்றி யூகம் செய்து என்னிடம் கேட்டால்தான், நான் என் மனத்தை அவர்களிடம் திறந்து காட்டமுடியும். நான் பெண். ஆண்களைப்போல அவரசரப்பட்டுவிடமுடியாது. என் உள்ளம், நாம் இருவரும் முதன் முதலாகச் சந்தித்துக்கொண்டோமே அக்கணமே உங்கள் வசப்பட்டு விட்டது. ஆகவே, என் மாதிரி தாங்களும் பரீட்சை முடியும்வரை கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடித் தால்தான் நல்லது. அன்று நீங்கள் விரும்பின மாதிரி, தெய்வ அருள் இருந்தால், நாம் பரீட்சைக்குப்பின் தம்பதியாகி விடுவோம்!... ஒன்றுமட்டும் சத்தியம்

அன்றும் இன்றும், ஏன், என்றுமே நீங்கள்தாள் என் தூயமனத்தில் நித்தியமல்லியாக மணம் பரப்புவீர்கள். தெய்வம் என் பிரார்த்தனையையும் கனவையும் ஈடேற்றி வைக்கும் என்றே நம்புகிறேன். உங்களையே நம்பியுள்ளேன் நான். இவ்வுண்மையை மட்டும் நீங்கள் சத்தியத்தின் குரலாக—தர்மத்தின் வாக்காக—அன்பின் வேண்டுதலையாக மதித்து என்னைக் காப்பாற்றி விடுங்கள்!'' என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாள், குமாரி தமிழ்ச்சுடர்.

''தமிழ்ச்சுடர்! என் வாக்கை நான் என் உடலில் ஆவி உள்ளவரை காப்பாற்றியே தீருவேன். கொடுத்த வாக்கை காப்பாற்றாதவன் மனிதனல்ல!...கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிடும் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல நான்!... என்னை நம்பு ஏனென்றால் உன்னையே நான் நம்பியிருக்கிறேன்! இது சத்தியம்!...'' என்று மீண்டும் உறுதி வழங்கினான்.

தமிழ்ச்சுடர் ஆனந்தக் கண்ணீரைத்துடைத்துக் கொண்டாள்.

வாசலில் ''தர்மம் போடுங்க!'' என்றொரு அபயக் குரல் கேட்டது.

பசிக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை ஏது!

வெளிப்புறம் பழைய சாதம் கொண்டுபோய் பிச்சை இட்டுவந்தாள் தமிழ்ச்சுடர்.

* * *

அருமை மகள் தமிழ்ச்சுடரிடம் அவசரமாகப் பேசவேண்டுமென்ற குறிக்கோளுடன் விரைந்து வந்தாள் அன்னை மரகதத்தம்மை.'' சுடர்!...தமிழ்ச்சுடர்! படிக்கிறீயா?...இப்போதான் பலகாரம் ரெடியாச்சு. எனக்

கும் வரவர முடியலே. கோபிச்சுக்காதேம்மா!...நீதோசை சாப்பிட்டானதும், எனக்காக ஒரு பதினேஞ்சு நிமிஷம் ஒதுக்கம்மா. நேற்றைக்கே உன்கிட்டே பேச வேணும்னு யோசிச்சேன். நீ முன் நேரந்திலேயே அசந்து தூங்கிட்டே அதனுலே உன்னை உசுப்ப மனசுவரல் லேம்மா! சரி, முதலிலே தோசைசாப்பிடவாடி, வா, கண்ணே!'' என்று 'நயந்து' கூப்பிட்டாள்.

அம்மாவின் தூய பாசத்தின் பரிவால் வழக்கம்போல நெகிழ்ச்சி அடைந்தவளாக, அவளுடன் பின்கட்டுக்குத் தொடர்ந்தாள் தமிழ்ச்சுடர்.

காப்பி பலகாரம் முடிந்தது.

தாயும் மகளும் ஹாலில் வந்து அமர்ந்தார்கள்.

மரகதத்தம்மை சுருக்கம் படிந்து வெளிறியிருந்த தன் நெற்றியில் வலது கைவிரல்களை வைத்து அழுத்திய வளாக ஓர் அரைக்கணம் சிந்தனை வசப்பட்டிருந்தாள்.

அன்னையின் தோற்றம் ஒருபுறம் நம்பிக்கையையும், மறுபுறம் பயத்தையும் மாறிமாறி உண்டாக்கிக் கொண்டிருந்தன, தமிழ்ச்சுடரின் காதல் நெஞ்சத்திலே, ஆனல், அம்மா தன்னிடம் இவ்வளவு பீடிகையுடன் பேச முன் வத்திருப்பது கட்டாயம் தன் கல்யாண விஷயமாகத்தான் இருக்குமென்றே அவள் ஊகித்தாள். இதைத் தவிர, அந்தக்குடும்பத்தில் இப்போதைக்கு அத்துணை அவசரமானகாரியம் வேறு என்ன இருக்க முடியும்? 'ஆனல், அம்மாவிடம் தான் பரீட்சைக்குப் பிறகுதான் என் திருமண விஷயம்!' என்று சொல்லி விட்டாளே தமிழ்ச்சுடர்!

ஒருதினம் அவள் படித்த 'சொல்லித் தெரிவதில்லை!' என்ற நவீனத்தில் காணப்பட்ட வரிகள் அவள் நினைவில் குமிழ் பறித்தன.

'காதல் சட்டம் கடந்தது. ஆனால், காதலின் சட்டம் கடவுளுக்கும் கூட ஒரு விடுகதைதான்!'

அவள் விநய பூர்வமாக அக்குறிப்பை அங்கீகரிக்கவே செய்தாள். சட்டம் கடந்த விதியாகவே இப்போது தன்னுடைய காதல் வியவகாரம் சுய உருவைக் காட்டப் போகிறதோ, என்னவோ?

"அம்மா சுடர்!"

"என்னம்மா!"

மரகதத்தம்மை பேச இதழ் பிரித்தாள்.

அவ்வேளையில் வாசல் வெளியில் கார்ச்சத்தம் கேட்டது. காரொலியில் தெருநாய்களின் கூக்குரல் கூட அடங்கித்தான் போயிருந்தது.

தமிழ்ச்சுடர் எழுந்து எட்டிப்பார்த்தாள்.

டாக்ஸி ஒன்றிலிருந்து ஒரு மனிதர் இறங்கி உள்ளே சென்றார்.

தமிழ்ச்சுடருக்கு அந்த ஆளை இனம் புரியவில்லை.

மரகதத்தம்மைக்குப் புரிந்தது. "வாங்கய்யா!" என்றாள்.

"ஆமாம்மா! ஐயாகிட்டே நானு பட்டிருந்த கடனுக்கு முந்தி ஒருவாட்டி ஒரு நூறுரூபாய்த்தான் செலுத்திட்டுப் போனேன். இடையிலே வீட்டிலே காயலாவா ஆயிட்டாங்கா. வர முடியலே. இப்போ ஒரு நானூறு தாரேன். இன்னும் நூறு ரூபாயும் வட்டியும் மார்ச்சு மத்தியிலே தந்திடறேன். தந்திட்டு புரோ நோட்டை ரத்து செஞ்சுக்கினு போயிட்றேன் அம்மா? இந்தாங்கம்மா நானூறு!" என்று சொல்லி நான்கு நூறுரூபாய்ச் சலவைத்தாள்களை நீட்டினார் வந்தவர்.

"ரொம்ப சந்தோஷம், நரசய்யா!" என்று மகிழ்ந்து, அவருல் கொடுக்கப்பட்ட நூறு ரூபாய்த் தாள்கள் நான்கையும் ஏந்திஞள் மரகதத்தம்மாள்.

இக்காட்சியைக் கண்ட தமிழ்ச்சுடருக்கு ஒரு சமயம் ஜவுளிக் கடையில் செலுத்தப்பட்ட நூறுரூபாய் நோட்டு கள்ள நோட்டு என்று தெரிவிக்கப்பட்டதையும் அது உண்மை என்பதை பக்கத்து வீட்டு பாங்க் காஷியர் மூலம் அறிந்ததையும் ஆனல் அப்படி மோசக் கருத்து செய்த 'கேடி'யாரென்று மட்டுப்படாமல் போன தையும் நினைவு கூர்ந்தாள் தமிழ்ச்சுடர். உடனே அம்மா விடமிருந்து நூறு ரூபாய் நோட்டுகள் எல்லாவற்றையும் வாங்கிஞள். பாங்க் காஷியர் சொன்ன அடையாளங் களைப் பரிசீலித்தாள். நோட்டுக்களையும் நரசய்யாவை யும் பார்த்தாள். பிறகு, வெளியே சென்று திரும் பிஞள்.

அப்போது, "ரசீது போட்டுக் கொடுத்திடம்மா!" என்ருள் தாய்.

"ஆகட்டும்மா!" என்று சொன்ஞள் தமிழ்ச்சுடர்.

"தங்கச்சி ரூபாயும் கையுமாய் வெளியிலே போன தும் எனக்குக்கூட சம்சயம் தட்டிப்போச்சு. நல்ல வேளை, எனக்கு நல்ல மூச்சு திரும்பிச்சு. நாளெல்லாம் ரொம்ப நாணயமானபுள்ளிங்க. இப்போ வெல்லாம் தான் கள்ள நோட்டுப் புழக்கம் பட்டி தொட்டியிலெல் லாம் கூட ஏகமாப் பெருகிடுச்சு. இதை இந்த அர சாங்கம் எப்ப கண்டுபிடிக்கப்போகிறதோ, அது அவங் களுக்குத்தான் வெளிச்சம்!" என்ருர் நரசய்யா.

"அந்த மாதிரி கள்ள நோட்டு அடிச்சுப் பிழைக்கிற சமுதாய துரோகிங்களை நாம்தான் அரசாங்கத்துக்கு கையும் மெய்யுமாய்ப் பிடிச்சுக் கொடுக்க வேணும்.

எதுக்கெடுத்தாலும் அரசாங்கத்து பேரிலே பழியைப் போட்டித் தப்பிக்கிறது சுத்த தப்பு. நமக்கும் இந்த மாதிரிகடமைகளிலே பொறுப்பு இருக்கு என்கிறதை நாம் மறந்திடக் கூடாது!'' என்றாள் மரகதத்தம்மாள்.

அப்போது நாலைந்து போலீஸ்காரர்களும் பக்கத்து வீட்டு பாங்க் காஷியரும் அங்கே பிரசன்னமானார்கள்.

மரகதத்தம்மை விழித்தாள்.

"அம்மா, இந்த் ஐயா அரசாங்க விருந்தாளியாகப் போகிறாரம்மா. முன்பொருவாட்டி நம்மை இக் கட்டிலே மாட்டி வச்சுதே ஒரு நூறு ரூபாய் நோட்டு, அதைக் கொடுத்த ஆளை உனக்கு இனம் புரியலையே, அந்த புண்ணியவான் இவர்தானம்மா! இந்த நாலு நூறு ரூபாய் நோட்டுகளும் அசல் கள்ள நோட்டுகளாக்கும்!'' என்று வியாக்கியானம் சொன்னாள் தமிழ்ச் சுடர்.

நரசய்யரின் விழிப்புடன் அவரது கைகளில் மாட்டப்பட்ட கை விலங்குகளின் ஒளி மோதியது.

அப்போது, இன்னொரு ஆள்—கிழவன் உள்ளே வந்தான்.

"அம்மா, நம்ப ஐயா காலமாகிறதுக்கு முந்தி ஒரு ரிக்ஷா வாங்கிறத்துக்காக எங்கிட்டே மூந் நூறு ரூபாய் கடன் கொடுத்தாங்க. நோட்டுசாட்டு எதுவும் இல்லே. ஆனா, ஐயா திடும்னு காலமாகிட்ட விவரம் ரொம்பநாள் கழிச்சுதான் தெரிஞ்சது. நடப்பை உங்ககையிலே சொல்லிப்பிடணும்னு தவிச்சேன் ஆனா, பணத்தோட வந்துதான் சொல்லணும்னு இருந்திட்டேன். இப்பதான் அந்தப்பணத்தை என்னாலே கொண்டாந்து கொடுக்க முடிஞ்சது. ஒண்ணும் அரையுமாய் மிச்சம் பிடிச்சது

இது" என்று சொல்லி கத்தை ரூபாய் நோட்டுக்களை மரகதத்தம்மாளிடம் நன்றியுடன் நீட்டினான் தண்டையார்பேட்டை ரிக்ஷாக்காரன் முத்துவேல்.

எண்ணிப்பார்த்தாள் மரகதத்தம்மாள். "இருபத்தைந்து ரூபாய் அதிகமாக இருந்தது. "பணம் இருபத்தஞ்சு கூடுதலாயிருகிகுதப்பா !" என்றாள்.

"அது வட்டிப்பணமுங்க !"

மரகதத்தம்மைக்குக் கண்ணீர் வந்து விட்டது. "உன் நாணயத்தை எப்படிப் பேற்றுவேன்? எனக்கு வட்டிவாசி எதுவும் வேண்டாமப்பா! இந்த விஷயமே எனக்குத் தெரியாது. இந்த மட்டுக்கு நீ நாணயமாய் நடந்துக்கிட்டதே பெரிய விஷயம். இல்லேன்னா, எங்களுக்கு இந்த விஷயமே தெரியாதில்லேபா? இந்தா, உன் பணம் போய் இருபத்தஞ்சு?..." என்று சொல்லி, மிகுதிப்பணத்தை நீட்டினாள் மரகதத்தாம்மாள்.

தமிழ்ச்சுடர் அக்கிழவனை—அந்த மனித ஏழையை வணங்கினாள்.

"இந்த ஏழையை மறந்திடாதே நரசய்யா. மனுசனாய்ப் பிறந்தவங்கள் மானத்துக்கும் கட்டுப்பட்டவங்க, இதையும் மறந்திடாதேயும் !... நீங்க எங்க கடன் பணத்தைக் கட்டுறதுக்கு வழி செய்தாகவேணும். இல்லேன்னா, மறுபடியும் அரசாங்கம் உன்னை அழைச்சுக்கிடும்!..." என்று காரசாரமாகப் பேசினாள் தமிழ்ச்சுடர்.

கை விலங்குகள் மறைந்தன.

* * *

அடுத்த இரண்டாவது நிமிஷத்திலே!' "ஹேல்லோ சுடர்"! என்று குயிலாகக் கூவிக் கொண்டே

குயிலாய் வந்தாள் குமாரி பங்கஜம். முகத்தில் பவுடர் அபிஷேகம். கையில் 'டம்பப்பை!'

கல்லூரிச்சிநேகிதியை எதிர்கொண்டு அழைத்தாள் தமிழ்ச்சுடர்.

''ஸஃபயரிலே ஒரு இங்கிலீஷ் படம் ஆடுது, உன்னையும் அழைச்சிட்டுப்போக வந்தேன்!'' என்றாள் பங்கஜம்.

தமிழ்ச்சுடர் தன் தாயைப் பார்த்தாள்.

''உன் ஓயாத படிப்புக்கு ஒரு 'சேஞ்'சாக இருக்கும். போயிட்டு வாம்மா!''

''சரி, சேஞ்ச் கொடுங்கம்மா!'' என்றாள் பங்கஜம்.

பணம் கொடுத்தாள் தாய். ''ஆமா, கதை எப்படி?'' என்று கேட்டாள்.

''காதலியைக் கைவிட்ட காதலனை பழிக்குப்பழி வாங்கும் ஒரு அபலைப் பெண்ணின் கதை அம்மா இது! பிரமாதமான படமாம்! என் நண்பர் சாரங்கன் சொன்னார்!''

மரகதத்தம்மைக்கு வேர்த்துக் கொட்டியது.

''காதலிலே தோற்றது தோற்றாகி விட்டது. பின் தன் காதலனைப் பழி வாங்கத்தான் வேண்டும்? இதில் என்ன 'சென்டிமென்ட்' இருக்குதாம்?... குற்றத்தை மறந்து மன்னிப்பதுதானே தர்மம்?...'' என்று இடைமறித்தாள் தமிழ்ச்சுடர். அவள் குரலில்தான் எத்துணை ஆத்திரம்?... சிமிக்கிகள் ஆடின!

''உன் வாதம் சரி, ஆனாலும் படத்தைப்பார்த்தால் நமக்கு ஒரு நிம்மதியாக இருக்குமே! வா, போகலாம்!...

உனக்குப் பதில் சொல்ல அந்தப்படத்திலாவது முடியாதுன்னு பார்போமே!'' என்று கூறினாள் நோழி.

''போயிட்டு வாரேனம்மா!'' என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டாள் தமிழ்ச்சுடர்.

ஆனால், அந்த மகள் தன் தாயின் கொஞ்ச நஞ்ச மன நிம்மதியையும் கெடுத்துவிட்டுச் சென்று விட்டாளே என்ற ரகசியம் மரகதத்தம்மாளுக்கு மட்டிலும் தானே புரிய முடியும் ?

## 16. தெய்வீகக் காதல் !

'காதலிலே தோற்றது தோற்றுகிவிட்டது. பின், அந்தப் பெண் தன் காதலனைப் பழிவாங்கத்தான் வேண்டுமா? இதில் என்ன 'சென்டிமென்ட்' இருக்குதாம்?... குற்றத்தை மறந்து மன்னிப்பதுதானே தர்மம்?...'

வாழ்க்கையிலே மனித மனத்தின் பலவீனத்தைச் சொல்லிக்காட்டி, மனித மனம் செய்யவேண்டிய தர்மத்தைச் சுட்டிக் காட்டிவிட்டு சுடர் போய் அரை மணிக்குமேல் ஆகிவிட்டது. ஆனால், தன் மகளின் பேச்சு, தாயை நரகவேதனையல்லவா அனுபவிக்கச் செய்துவிட்டது!...

நேற்று முன் தினம் தன்னைக் குற்றவாளில் கூண்டில் நிறுத்தி தன் மனச்சாட்சி படுத்திய பாட்டுக்கு ஒரு கழுவாய் தேடிக்கொள்ளவேண்டும் என்றல்லவா நேரத்தையும் காலத்தையும் எதிர்நோக்கித் தவம் கிடந்தாள் அன்னை மரகதத்தம்மை.

அந்தக் கழுவாயின் முடிவு என்ன?

பேச்சை மகளிடம் எப்படி ஆரம்பிப்பது?

தன் முடிவுகேட்டு மகள் எப்படி அதை வரவேற்பாள்?

இப்படிப்பட்ட கட்டங்களைச் சமாளிப்பதற்குரிய இதய வலுவும் அவளை அடைந்திருந்தது. அந்த வலு தாய்மையின் கடமை என்ற அந்த ஒரே அடிப்படையிலேயே காலூன்றி நின்றது. மனப் புயலுக்குப்பின் தன் மனத்தில் விளைந்த அமைதியை அவளுக்கு அன்றிரவு பன்னிரண்டு மணிக்குமேலாக நல்ல மூச்சையும் நல்ல தூக்கத்தையும் அருளின. விடிந்ததும், மகளிடம் எச்சரிக்கையுடன் பேச்சை ஆரம்பித்தபோதுதான் எத்தனை இடர்ப்பாடுகள் முளைத்துவிட்டன ?

பிறர்பொருளை நயவஞ்சகமாக அபகரித்து எக்காளமிடும் கடவுளின் ரகசியக் குற்றவாளிக்கு நிகராகவே வானம் திடீரென்று மந்தாரம் போட்டது:

அவள் மனமோ வெளி வாங்கிவிட்டிருந்தது. அந்த நல்ல பலனின் சுமுகமான விளைவாக, அவள் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டிருந்தாள். வாடைக் காற்றின் சுகம் வெளி உஷ்ணத்தையே அமுத்திவிட்டிருந்தது.

மரகதத்தம்மையின்— ஆமாம், தமிழ்ச் சுடரின் மாதாவின் முடிவு என்ன?

அவள் தன்னைத்தானே எண்ணினாள்: தனக்குத்தானே எண்ணமிட்டாள். அவ்வெண்ணத்தில் அவள் மரகதமாக உருக்கொள்ளவில்லை; மரகதத்தம்மாளாகவே உருக்கொண்டிருந்தாள். தமிழ்ச்சுடரின் எதிர்காலத் திட்டத்தில்—தமிழ்ச்சுடரின் வருங்கால மனமகிழ்ச்சியில் அக்கறையும் அன்பும் பரிவும் நேர்மையும் கொண்ட லட்சியத் தாயாக அவள் புதிய உள்ளம் கொண்டு இலங்கினாள்; விளங்கினாள்.

சரி.

அவள் முடிவு?...

'காதலிலே தோற்றதுதான் தோற்ருகிவிட்டது. பின், அந்தப் பெண் தன் காதலனைப் பழிவாங்கத்தான் வேண்டுமா?...' என்று ஆங்கிலத் திரைப்படக் கதாநாயகியின் குரூர முடிவு கேட்டு மனம் கொதித்துச் சாடிய மகளின் வெஞ்சினம் அவளையும் மீறி அப்போதும் இடைமறிக்கத் தவறவில்லை.

என் முடிவு கண்டுதான் என் மகள் இப்படிப் பொரிந்து தள்ளிஞளோ? நெக்லஸை ஆனந்தரங்கம் மீண்டும் எனக்கு தன் இறுதி ஆசையென அன்றைய நிலையில் கொடுத்தார். அதை நான் மீண்டும் மறுதளித்து விட்டேன்!...இவ்வுண்மையை என் மகளிடமும் சொல்லி விட்டேன்! ஆனால், ஆனந்தரங்கத்தின் இரண்டாவது கோரிக்கையையும் நான் நிராகரித்த விதத்தை அவர் கடிதத்தின் அடிக் குறிப்பாக எழுதிவைத்த நான் என்னுடைய இந்தச் செயலைப்பற்றி சுடரிடம் சொல்ல நேர்ந்தால் அவள் பாவம், என்ன நினைப்பாள்? ஏன் அவளிடம் இதைச் சொல்லவில்லை?...எனக்கு நான்தான் முதலாவது நின்ற பாவம் என்னை அப்படிச் செய்தது. இப்போது என்னை மனம் புழுங்கச் செய்கிறதே!...எனக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ருமல் என்னை ஏமாற்றிக் கைவிட்டுவிட்ட ஆனந்தரங்கம் திரும்பவும் எனக்குக் கொடுத்த பரிசை நான் ஏற்க மறுத்தேன். அது சரி. என் அளவில் சரி. என் ஏமாற்றத்துக்கு அவரைப் பழிவாங்கி, அவரது மன ஆறுதலைப் பறித்துக் கொண்டவரை எனக்கு அதுவே ஆறுதல் ஆகும். இது என்னுடைய சுயநல அடிப்படையில் ஒரு வெற்றிகூடத்தான்! ஆனல், என் மகளைத் தன் மகனுக்குத் திருமணம்

செய்துகொடுக்கும்படி அதே ஆனந்தரங்கம் கோரியிருந் ததையும் அல்லவா நான் ஏற்கவில்லை இது என்ன நியாயம்?…ஆனந்தரங்கத்தின் மகன் உதயணன்பால் தமிழ்ச்சுடர் அந்தரங்கமான நேசம் பூண்டிருப்பதை அறிந்தும்கூட நான் இப்படிச் செய்துவிட்டேனே? வரிசை நிராகரித்த அளவில் நான் நின்றுவிட்டிருந்தால் எவ்வளவு உசிதமாக இருந்திருக்கும்?—அவரது இரண் டாவது வரத்தையும் நான் ஏற்காமல் இருந்ததற்கு உட் குறிப்பாக ஏன் நான் அப்படிப்பட்ட அடிக் குறிப்பை எழுதினேன்? இரண்டு கோரிக்கைகளை விடுத்திருந்த ஆனந்தரங்கத்தின் மனத்தைச் சுடவேண்டுமென்று நான் செய்த சாகஸம் இப்போது என்னையே சுட்டுவிட் டதே?…எந்தக் குறிப்பும் அவசரமாக எழுதாமல் நான் இருந்திருக்கக்கூடாதா? இப்போது என் முடிவை வைத்து ஆனந்தரங்கத்தின் முடிவு எப்படி திசை திரும்பி யதோ? ஈஸ்வரா! என் ஆத்திரம் அவருக்கும் வந்து, அதன் காரணமாக உதயணனுக்கு வேறிடத்தில் பெண் பார்க்க முனைந்திருந்தால் என் மகள் நிலை என்னவது? இப்போது, எப்படிப் பார்த்தாலும், என் மகள் நிலை தானே ஊசலாடுகிறது? ஆனந்தரங்கம் லட்சாதிபதி! அவருக்கென்ன? அன்று அவரைத் தேடி பணம் வந்தது? இன்று அவரிடமே பணம் இருக்கிறது. சீமான் வீட்டுச் சம்மந்தம் கிடைக்கும்! ஆனால். என் மகளுக்கு அவள் மனத்தில் இடம்பெற்ற மணாளன் கிடைக்கவேண்டுமே? …அகிலாண்டேஸ்வரி!…இப்போதுதான் புதுப் புதி தொன்று பளிச்சிடுகிறது!…தனகோடி அந்தப் பெட் டியை ஆனந்தரங்கத்திடம் நாணயமாகச் சேர்ப்பித்திருக் கத்தான் வேண்டும்! அப்படிச் சேர்ப்பித்திருந்து, அதைத் திறந்து பார்த்து என் முடிவையும் அறிந்திருந்து, இந்தச் சில தினங்களாக அவர் மௌனம் சாதிப்பதிலிருந்து அவர் என் கடிதக் குறிப்பைப்பற்றிச் சட்டை செய்ய

வில்லையென்றுதானே அர்த்தம்? ஐயையோ, இது என்ன புதுக் குழப்பம்!…என்னுடைய அனுவசியமான பழி யுணர்ச்சி கடைசியில் என் அருமை மகளின் காதல் கனவையல்லவா பொய்க் கனவாக்கிவிடும்போலத் தோன்றுகிறது?…'

தூண்டில் புழுவாய்த் துடித்தாள். அவளது உள்ளத்தில் ஏற்பட்ட கொதிப்பு அடுப்படியில் உலைகொதித்துக் கொண்டிருந்ததை நினைப்பூட்டியது. தலையைப் பிடித்துக் கொண்டு உள்ளே விரைந்தாள். புழக்கடைப் பக்கம் சென்று திரும்பினுள். காடைக் குருவிகள் சில கூவிக் கொண்டிருந்தன. உலையைக் கவனித்துக்கொண்டிருந்தாள் மரகதத்தம்மாள். சவுக்கு விறகை உள்ளே மாட்டினுள்.

பருப்பு அரைக்கால்படி வேண்டுமென்று நாலாவது வீட்டுச் சிறுமி கேட்டாள்.

கொடுத்தாள் மரகதத்தம்மாள்.

அச்சிறுமி போனவுடன், குழம்புக்கு ஏற்பாடு செய்ய முனைந்தபோது, மிளகாய் வற்றல் டப்பா காலியாக இருந்ததைக் கண்டாள். போன சிறுமியைக் கூப்பிட்டு மிளகாய் கொஞ்சம் கடன் கேட்கலாமே என்று தோன்றியது அவளுக்கு. மறுகணம், அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டாள் அவள். 'எந்தக் குறையையும் பிறர் ஏன் அறியவேண்டும்?'—வீட்டைப் பூட்டிக்கொண்டு மண்ணடிக் கடைவீதிக்குச் சென்று மிளகாய் வாங்கிக்கொண்டு திரும்பினுள்.

உலை கொதித்து அடங்கியது. வடிநீரை வடித்தாள். கலவடையில் இறக்கி வைத்தாள் அவள்.

மரகதத்தம்மை தலையை ஒருமுறை உலுக்கிக் கொண்டாள். பூஜை அறைக்குச் சென்றாள். விபூதியை அள்ளி நெற்றியில் அப்பிக்கொண்டு, விழுந்து வணங்கி எழுந்தாள். 'என் மகள் உதயணனையே மனப்பூர்வமாக விரும்பியிருக்கவேண்டும். அப்படியிருந்தால், அப்படியே அவள் எண்ணமும் அமைந்திருந்தால், எப்பாடுபட்டாவது என் பணம் முழுவதையுமே செலவழித்தாவது அவளுக்கு அவள் மனம் இஷ்டப்பட்ட உதயணனையே திருமணம் செய்து வைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இருவர் மனங்களும் பொருந்தும் போது, இருவர் ஜாதகங்களும் கட்டாயம் பொருந்தியே இருக்கவேண்டும்!...' ஈஸ்வரா! என் முடிவுக்கு நீதான் நல்ல முடிவு காட்டவேண்டும்!...'

வற்றல் குழம்பு தயாராகிவிட்டது.

வாசலில் காரின் சத்தம் கேட்டது.

கூடத்துக்கு வந்து எட்டிப்பார்த்தாள் மரகதத்தம்மாள்.

அப்பொழுது உதயணன் அங்கு வந்து நின்று 'வணக்கம்' சொன்னான்.

"சௌக்கியமாய் இருக்கீங்களா?"

"ஆமாங்க!"

"அப்பா எப்படி இருக்காங்க!"

"இப்போ கொஞ்சம் பரவாயில்லே. இடையிலே கொஞ்சம் முடியலே. இப்போது உடம்பு தேறி வருது!..."

"ரொம்ப சந்தோஷம். உங்க வீட்டுக்கு வரணும்னு இருந்தேன். நேரம் ஒழியலே! கூடிய சீக்கிரம் வருகிறேன்!"

''வாங்க!...ஒரு முக்கியமான சங்கதியாக வந்தேன்!''

பரீட்சை முடிவை அறியத் துடித்த மாணவியாக இருந்த நிலையை இப்போது அடைந்தாள் மரகதத்தம்மாள். ''சொல்லுங்க, தம்பி!''

''என் அப்பா பேரிலே உங்க குடும்பத்துக்கே பொதுவான ஒரு அதிருப்தி இருக்கிறதா அறிகிறேன். அதற்குக் காரணம் என்ன, சொல்ல முடியுமாம்மா?... இப்படிக் கேட்கிறது அவ்வளவு நாசூக்காகத் தோணலை எனக்கு. என்றாலும், அதைத் தெளிவுபடுத்திக்கிட்டால் தான் நல்லதுன்னு தோணுது என் மனசுக்கு!...''

இத்தகைய வினவை அவள் எதிர்பார்த்திருப்பாள்?

மரகதத்தம்மை சொன்னாள் நடந்த கதையை.

உதயணன் தலையைத் தொங்கப் போட்டவாறு விடைபெற்றுத் திரும்பி விட்டான்.

இது என்ன புதுக்கதையாக ஒன்று உருவாகித் தொலைத்திருக்கிறதே?...

அவளுக்கு தன்னை எண்ணி அழுவதா, சிரிப்பதா என்றே புரியவில்லை 'எந்த ஒரு தகவலையும் வெளிக் காட்டாமல் போயிடுச்சே இந்தப் பிள்ளை?'—தவித்தாள்.

அந்தத் தவிப்புத் தீர ஏதாவது புத்தகம் எடுத்துப் படிக்கவேண்டுமென்று மாடியில் ஏறித் தன் மகளின் படிப்பறையை அடைந்தாள்.

கீழே கடிகாரம் பன்னிரண்டு அடித்ததை அவள் கேட்டாள்.

படிப்பதற்குக் கதைப் புத்தகம் கிடைத்தது. அத்துடன் தமிழ்ச்சுடரின் டைரிக் குறிப்பும் அந்தத் தாய்க்குக்கிட்டியது.

*தமிழ்ச்சுடர் தன் நாட்குறிப்பில் எழுதியிருந்தாள்:*

'...நான் அன்பர் உதயணன் பேரில் கொண்டிருக்கும் தெய்வீகக் காதல், நித்தியமல்லியின் தூய்மையான அற்புத மணத்தை ஒத்தது. ஆனால், இருக்கும் நிலவரத்தைப் பார்த்தால் என் தாய் என் காதலை அங்கீகரிப்பார்கள் என்று தோன்றவில்லை. ஆனால், என் அன்னைதான் என் தெய்வம், அவர்கள் முடிவுதான் எனக்கு விதி. என்னை ஈன்ற தெய்வம், அவர்கள்!...விதி எப்படித் திசை திரும்பினாலும் சரி, என்னைப் பொறுத்தளவிலே, என் நெஞ்சில் என் அன்பர் உதயணனின் இன்ப நினைவு, என் உயிர் என் உடலில் உறைந்திருக்கும்வரை, நித்தியமல்லியின் அமரத்துவம் பெற்ற சுகந்தமாக என்றென்றும் என் கன்னி நெஞ்சில் ஊடாடி நிலைக்கும் என்பது மட்டும் உறுதி!..'

*தாய்மனம் அழுது புலம்பிக்கொண்டிருந்தது!*

*அதோ, குமாரி தமிழ்ச்சுடர் படம் பார்த்துவிட்டுத் திரும்பிவிட்டாள்!*

## 17. கொடுத்த வாக்குறுதி!

*தமிழ்ச்சுடர் வழக்கத்தைவிட அன்றைக்குக் குறைவாகவே உணவு கொண்டாள். பலாச்சுளை வற்றல் குழம்பும் பருப்புத் துவையலும் என்றால் ஒரு பிடி கூடுதலாகவே சாப்பிடுவாள். உப்புக் கண்ட வாசனை வேறு அவளுக்குப் பிடிக்கும். ஏனோ அப்பொழுது அவ்வளவு உண்ணவில்லை.*

மரகதத்தம்மாளுக்கு இதைக் கண்டு மனம் சங்கடப் பட்டது. "ஏனம்மா, கறி குழம்பு சரியாயில்லையா, என்ன?" என்று வாத்சல்யத்துடன் கேட்டாள்.

"எல்லாம் வாய்க்கு உணக்கையாயிருக்குதே?"

"பின் ஏனம்மா குறைவாகச் சாப்பிட்டே?..."

"சும்மாதான்!" என்று மழுப்பிக் கொண்டே எழுந்து கைகழுவினாள் தமிழ்ச்சுடர்.

"சொல்லம்மா!"

"படம் பார்த்து வந்தாலே, என்னவோ என் மனசு சரிப்படலே!"

"படம் பார்த்ததற்கும் உன் மனசுக்கும் என்ன கண்ணு சம்பந்தம்?"

"படத்திலே கதாநாயகியை நினைச்சுத்தான் மனசு குலைஞ்சிடுச்சு. தன் காதல் தோற்றதாலே தன் காதலனை அவள் பழிவாங்கின 'இட்டம்' எனக்குக் கட்டோடு பிடிக்கலே' அம்மா!"

"அப்படியா?"

"ஊம்!"

"அப்படியானு, தன்னுடைய காதலைத் தோற்கடிச்ச அந்தக் காதலனை அவள் மன்னிச்சிடவேதான் வேணும்னு நீ நினைக்கிறீயாம்மா?"

"நிச்சயமாக! ஏன்னு, அவன்தான் தன்னுடைய தவறை உணர்ந்து அவள்கிட்டே மன்னிப்பு கேட்கிறானே?"

"மன்னிப்பு கேட்டதாலே மட்டும் மனக்குறை தீர்ந்திடுமா, என்ன?"

"ஏன் தீரக்கூடாது? ஏன் தீரவேண்டாம்?" என்று அழுத்தமாகக் கேட்டாள்.

மரகதத்தம்மாள் வறட்சியாகச் சிரித்தாள். "எதை யும் அவரவர்கள் அனுபவிச்சாத்தான் தெரியுமம்மா; சரி, அந்தக் கதையைப்பத்தி இப்போதென்ன நமக் குள்ளே வாதப் பிரதிவாதம்?... நான் இப்போது ஒரு புதுக்கதைச்குத் திருப்பப்போறேன்!" என்று மெள்ள ஆரம்பித்தாள் அவள்.

"கதையா?" என்று கேட்டு தாயை ஆர்வத்துடன் பார்த்தாள் "சொல்லம்மா. கதை என்றால்தான் எனக் குப் பிடிக்குமே?" என்று தூண்டவும் செய்தாள் தமிழ்ச் சுடர்.

"ஆமம்மா. கதைதான். என் வாழ்க்கைக் கதையின் ஒரு பகுதிக்கதை அது. என்னுடைய முதற் காதலைத் தோல்வியடையச் செஞ்ச ஸ்ரீமான் ஆனந்தரங்கம் முன்பு எனக்கு வாக்குக் கொடுத்த அளவில் என் திருமணத் துக்கு வைர நெக்லஸ் பரிசளிச்சாரில்லையா? அதை அப் போது நான் ஏற்கமறுத்தேன். இப்போது சில நாள் முந்தி மரணப் படுக்கையிலே இருந்தப்பவும் அதே வைர நெக்லஸை அழகான தந்தப் பெட்டியிலே வச்சு எனக்குக் கொடுத்தாரில்லையா?— அதையும் நான் திருப்பிக் கொடுத்திட்டேன். இந்த வரைக்கும்தான் உனக்கு என் கதை தெரியும். அதற்கப்புறம் அக்கதையிலே ஒரு பகுதி யின் தங்கிடுச்சு. இந்தாப்பாரு, இந்தக் கடுதாசியை!..." என்று சொல்லி வெள்ளைத்தாள் ஒன்றை மகளிடம் படப் புடன் நீட்டினாள் மரகதத்தம்மாள்.

அதை உன்னிப்பாகப் பார்த்தாள் தமிழ்ச்சுடர். "உன் கையெழுத்தாட்டம் இருக்குதே அம்மா?"

''கையெழுத்து என்னதுதான் ஆனுல் அது ஆனந்த ரங்கம் எனக்கு அன்று பரிசுடன் வைத்திருந்த கடிதத் தோட நகல் இது!... பாரேன்! அடிக் குறிப்பையும் படியம்மா!''

படித்தாள் தமிழ்ச்சுடர். படித்துவிட்டு சலனம் எதுவுமின்றிச் சிரித்தாள்.

''ஏனம்மா சிரிக்கிறே?',

''என் தெய்வத்தின் தீர்ப்புதான் அம்மா என் விதி. உன்னுடைய முடிவுதானம்மா எனக்கு வேதவாக்கு. என்னை நினைச்சுச் சிரிக்கிறேன்? அவ்வளவுதானம்மா!'' என்று நிதானமாகச் சொன்னுள்- தமிழ்ச்சுடர்.

''என்னுடைய அடிக்குறிப்புப் பதிலைப் பார்த்திட்டுமா சுடர் இப்படி உன்னுலே சிரிக்க முடியுது?... அன்பு பாராட்டாமல், பழி வாங்குறது மனித தருமத்துக்கு ஒவ்வாது என்கிற கொள்கையுடையவள், அதற்கு நேர் மாருக நடந்துகிட்ட என் போக்கைக் கண்டுமா உன்னுலே சிரிக்க முடியுது?''

''துன்பம் வந்தால் சிரிக்கவேணும்னு சொல்லியிருக்காங்களே அம்மா?''

''சொன்னதை செயல்வடிவிலே நடந்து காட்ட உன்னுலே முடியுது. அப்படின்னு, உன் மனசு என் முடிவைக் கண்டு துன்பம் அடைஞ்சிருக்கு என்கிறதை நீயே ஒப்புக்கிடுறே!—இல்லையாம்மா?''

அதற்கு தமிழ்ச்சுடர் மௌனம் சாதித்தாள்.

வேர்க்க விறுவிறுக்க எழுந்தாள் மரகதத்தம்மாள். நெருங்கிச் சென்று, மௌனத்தின் கம்பீரத்துடன் நிதானமாக அமர்ந்திருந்த மகளின் கரங்களைப் பற்றி

ளுள். "அம்மா தமிழ்ச்சுடர்!... ஆனந்தரங்கம் என் கிட்டே இரண்டு கோரிக்கை விடுத்திருந்தார். இரண்டுக்குமே நான் சம்மதிக்காமல் பதில் கொடுத்திட்டேன். ஆனால், நெக்லஸை நான் மறுத்தது சரி. அது என் சொந்த விஷயம். ஆனால், உன்னை தமது பிள்ளைக்கு மணம் முடிச்சு வைக்க வேணும்னு வேண்டியிருந்தார். அதையும் சேர்த்து மறுத்த பாவத்தின் விளைவை நான் கழிஞ்ச சில தினங்களாக அனுபவிச்சிட்டேன். நீ உதயணன் பேரிலே கொண்டிருக்கக்கூடிய உண்மையான பிரேமையை நான் பூரணமாக உணர்ந்துக்கிடாமல், என் தோல்வியின் சடனையிலே நான் அப்படி மறுதளிச்சு எழுதினது எவ்வளவு பெரிய தப்பு என்கிறதைச் சுட்டிக் காட்டி என்னை என் மனச்சாட்சி குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தின வேதனை என்னை இன்னமும் வாட்டி வதைச்சுக்கிட்டிருக்குது, அம்மா. அந்தப் பாவத்துக்கு பிராயச் சித்தம் செய்தாக வேண்டிய ஒரு மனித தர்மமும், என் மகளான உனக்கு நான் செய்தாக வேண்டிய தாய்க்கடனும் இப்போது எனக்காகக் காத்துக்கிட்டு இருக்குதம்மா!... நானே முதல் என்றும் எனக்கு அடுத்தே நீ என்றும் கொண்டிருந்த பதவி வெறி என்னை ஆட்டிப் படைச்சது போதும்: இனிமேல் நீதான் எனக்கு முதல்; நான் உனக்கு அடுத்தபடிதான். இதையே தான் அன்றொருநாள் என் மனச்சாட்சியின் கண் திறப்புக்குப் பின்னே நான் உன்கிட்டே தெரிவிச்சேன்!... இப்போது நடக்க வேண்டியதைப் பார்ப்போம்!...

'உன் மனசிலுள்ளதைத் திறந்து சொல்லிட்டுது உன்னுடைய டைரிக் குறிப்பு. ஆகவே, நீ உதயணனை மனப்பூர்வமாக நேசிக்கிறே என்கிறதை நான் அன்போடு புரிஞ்சிக்கிட்டேன். நான் உன் மன அந்தரங்கத்துக்கு ஒப்பாத போனால் உன் நினைவிலும் நெஞ்சிலும் ஏற்படக்

கூடிய முடிவையும் நான் உணர்ந்துக்கிட்டேன். அம்மா சுடர்! நீ உதயணனையே கல்யாணம் செஞ்சுக்கலாம். அதற்கு ஏற்பாடு செஞ்சிடவா?…"

மரகதத்தம்மை மூச்சு விட்டாள். தொண்டையைக் கனைத்துக்கொண்டாள்.

*  *  *

தமிழ்ச்சுடர் உணர்ச்சி வசப்பட்டுக் காணப்பட்டாள். இதயத்தின் உணர்வுக் குமிழ்கள் கண்களில் ஈரம் செய்தன. "அம்மா!…நீங்க என் டைரிக் குறிப்பைப் பார்ப்பீங்கன்னு நான் நினைக்கலே. அதுமாதிரியே, நீங்க இப்படி மனம் திரும்பி என்னிடம் பேச்சுக் கொடுப்பீங்கன்னும் எதிர்பார்க்கலே!… உங்க மனம் என் அந்த ரங்கத்தை எடைபோட்டு, சிந்திச்சு, இப்படிப்பட்ட தீர்மானத்துக்கு வந்திருக்குது. அதுக்குக் குறுக்கே நான் நிற்க முடியுமா?… உங்க இஷ்டப்பிரகாரம் செய்யுங்க. ஆனா' நான் உங்களுக்குத் தெரியாமல், நீங்க எழுதி முடிச்சு அன்றைக்கே ஆனந்தரங்கத்தின் கடிதத்திலே அடிக்குறிப்பு எழுதியிருந்ததை நான் படிச்சுட்டேன். அந்த ஒரு பயங்கரத் திருப்பம்தான் எனக்கு என் டைரியில் காணப்பட்ட குறிப்பை எழுதுறதுக்கு மனப்பலத்தையும் துன்பத்தைச் சிரிப்பால் போக்கிறதுக்கு உண்டான நெஞ்சுப் பக்குவத்தையும் கொடுத்திச்சு!…உதயணனைப் பொறுத்தமட்டிலே, அவர் அப்பா மாதிரி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாது இருக்கமாட்டாரென்றே எனக்குத் திடமாய்த் தோணுது அப்படியே அவரும் தன் கடமையை உணர்ந்து செயல்பட்டால் சரி. இல்லை, உனக்கு ஏற்பட்ட அதே முடிவு எனக்கும் ஏற்பட்டால், அதனால் ஒன்றும் பாதகமில்லை. என் நெஞ்சுக்கு அன்பர் உதயணனின் அமர நினைவு கிடைச்சிட்டுது. அதுவே

போதும். அந்த ஆறுதலே என்னைக் கடைசிவரை வாழ வைக்கும்!"—தமிழ்ச்சுடரின் நா தழுதழுத்தது.

"அம்மா, உதயணன்மீது நீ வச்சிருக்கிற இத்தனை நேசமும் பாசமும் ஈடேறுமென்றுதான் நான் நம்புகிறேன். நீ சினிமாவுக்குப் போயிருந்தப்ப உதயணன் இங்கு வந்தார். நம் குடும்பத்துக்கு தன் தந்தைபேரிலே ஆத்திரம் மூள என்ன காரணம்னு விசாரிச்சுது. நான் நடந்த கதையைச் சொன்னேன்!···அவர் அப்பா கொடுத்த பரிசைத் திருப்பிக் கொடுத்ததைமட்டும் தான் எனக்கு வெளியிட துணிச்சல் இருந்திச்சு!···" என்று விளக்கம் கொடுத்தாள் மரகதத்தம்மை.

தமிழ்ச்சுடர் அதிசயமாகப் பார்த்தாள் தாயை. கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுதவன் மனிதனல்ல என்று என்கிட்டே பலமுறை அவர் சொல்லி, தான் எனக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றியே தீருவேன் என்றும் அடிக்கடி சொல்வாரம்மா!... இந்நேரம் அவர் பங்களாவிலே ஏதானும் புயல் வீச ஆரம்பிச்சிருக்கும்!..."

"புயலுக்குப் பின்னே அமைதி நிலவவே செய்யுமம்மா!... என் பதிலையும் பரிசையும் ஆனந்தரங்கம் பார்த்து பலநாள் ஆகிட்டுது. என் முடிவை ஏற்றுக்கிட்டதாலேதான், அவர் மேற்கொண்டு ஒரு செயலும் செய்யலே!... இருந்து விட்டுப் போகட்டும். நானே நாளைக்கு வலுவிலேபோய் அவர்கிட்டே ஆனந்தரங்கத்துக்கிட்டே நெஞ்சுருகும்படி என் வேண்டுகோளை வைக்கிறேன்!... கட்டாயம் அவர் சம்மதிக்கவே செய்வார்!... எல்லாம் சுலபமாகவே முடியும்மா!..."

தமிழ்சுடர் மனம்விட்டு அழகுகூட்டிப் புன்புறுவல் செய்தாள்.

சூரியன் இறங்கு முகத்தில் இருந்தான்.

அருகில் கிடந்த பத்திரிகையைப் புரட்டினுள் தாய்.

குடந்தை அரசினர் பெண்கள் கல்லூரியின் ஆண்டு விழாவின்போது, படித்த பெண்கள் திருமணத்தைத் தள்ளிப்போடக் கூடாது என்று தமிழரசின் முதல்வர் உணர்ந்து கூறியிருந்ததைப் படித்துவிட்டு, அப்பகுதியை மகளிடமும் காண்பித்தாள் மரகதத்தம்மாள்.

வெட்கத்துடன் சிரித்தாள் குமாரி தமிழ்ச்சுடர்!

## 18. "அம்மா!..."

திரு அண்ணுதுரை அவர்கள் தீட்டிய பழைய கட்டுரை ஒன்றை தமிழ்ச்சுடர் ஒரு கூட்டில் அடைத்து வைத்திருந்தாள். அது கல்லூரி நூலொன்றில் இருந்தது. இரண்டாம் தவணையாகவும் அவள் அக்கட்டுரையின் சிந்தனைகளைப் பார்வையிட விரும்பினுள்.

'...கலை என்றுல் வானவில்லிலே தோன்றி மறைந்து விடும் அழகை எப்போதும் மக்கள் கண் எதிரே கொண்டு வந்து நிறுத்தும் ஒரு மாயாஜாலத் தந்திரம் என்றும், ஊனக்கண்ணுக்குப் புலப்படாத உருவ அழகுகளைக் கலைக் கண்கொண்டு கண்டறிந்து, மற்றவரின் பார்வைக்குக் கொண்டுவரும் மந்திரவாதியின் வேலை என்றும் கூறி, கலையை சாதாரண மக்களுக்குச் சம்பந்தமேயற்ற அதி யற்புதப் பொருளாக்கினர் பலர். கலையை ரசிப்பதற்கு தனியானதோர் பண்புவேண்டும் என்றனர். இவ்வளவு சுற்றுச் சுவர் எழுப்பி, இவர்கள் வளர்த்த கலை எதற்குப் பயன்பட்டு வந்தது என்று கவனித்தால், சுகபோகிகளின்

சுந்தரிகளை வருணிக்கவும் சூரர்களைப் பாராட்டவும் மற்றும் இயற்கை எழில், செயற்கை எழில் என்பன போன்றவைகளை விளக்கவும் பயன்பட்டதேயன்றி, வாழ்வுக்கும் பயன்படவில்லை!...'

கீழ்த்தளத்தில் மறுபடியும் அம்மா அழைத்த அழைப்பு அவள் காதுகளில் துல்லிதமாக விழுந்தது. விழுந்த மாரகச் சேலையை கொய்து போட்டுக் கொண்டாள். நெஞ்சகத்தைத் தீண்டிய கைவிரல் ஸ்பரிசத்தின் இன்பக் கிளுகிளுப்பு அவளுள் ஒரு புதிய—புத்தம் புதிய கலை உணர்வை—கலை அழகை உண்டுபண்ணிவிட்டிருந்ததை அவள் உணர்ந்தாள். படித்த கட்டுரையை மடித்துப்போட்டுவிட்டு, மீண்டும் நிலைக்கண்ணாடிக்கு வந்தாள். நெஞ்சிடைத் தவழ்ந்த உதயணன் அவளது கண்களில் தோன்றி அந்தக் கண்ணாடியை புதுமெருகு பெறச் செய்திருந்தானோ? கடந்த சில நாட்களாக அவள் அடைத்து வைத்திருந்த கனவின் வாசல் கதவுகள் திறந்துவிடப்பட்டு நீண்ட பொழுதாகிவிட்டது சதா உதயணனைப்பற்றியே அவள் மனம் எண்ணமிட்டது. லீவு நாளை இப்படிப்பட்ட மனலயிப்பில் கழித்துவிட்டால், அப்புறம் நாளைக்காலையிலிருந்து புதுத்தெம்புடன் கல்லூரிப் பாடங்களைப் படிக்கலாம் என்று அவள் தனக்குள் சமாதானப்படுத்திக் கொண்டாள். 'தாய் எனும் மகத்தான தெய்வசக்தி எனக்கு எவ்வளவு பெரிய கனவு லோகத்தைக் காட்டிவிட்டது!... அன்பர் உதயணன் கட்டிக் கொடுத்த காதல் மாளிகையிலே நான் காதல் தீபம் ஏற்றிவைக்கப் போகிறேன். என் உதயணன் அவர் அப்பா போலல்ல. என்னை அவர் அங்கீகரித்து விட்டதுபோலவே என்னை அவர் அடைந்தும் விடுவார்! என்னுள் நிலைத்துவிட்ட நித்தியமல்லியின் நிரந்தரமான அற்புத வாசனைக்கு இனிமேல் புதிய

பொலிவும் புதிய மணமும் கிட்டும்!...' நினைவுப் பூக்கள் எண்ணச் சரம் தொடுத்தன. அவள் மனம் உதயணனைச் சந்தித்த முதற்சந்திப்பை நினைத்தது. அவனுடன் பேசி மகிழ்ந்த மகிழ்ச்சிகளை நினைத்தது. அவன் தன் வீட்டில் தனக்கு ராஜோபசாரம் செய்த காட்சியை நினைத்தது. பூங்கரம் தொட்டு ஜெனரல் ஆஸ்பத்திரி மாடியில் வாக்குக் கொடுத்த ஆனந்தச் சம்பவத்தை நினைத்தது, மணந்தால் தன்னையே மணப்பது என்று கொண்டிருந்த வைராக்கிய சங்கல்பத்தை நினைத்தது.

கடைசியில் அவளுடைய அன்றொருநாள் தான் டைரியில் எழுதிவைத்த குறிப்பு தென்பட்டது.

மீண்டும் படித்தாள் குமாரி தமிழ்ச்சுடர். தன் எண்ணத்தின் முடிவை தானே ஆராய்ந்தாள் அவள்.

குறிப்பு ஓடியது.

'...நான் அன்பர் உதயணன் பேரில் கொண்டிருக்கும் தெய்வீகக் காதல், நித்தியமல்லிலன் தூய்மையான அற்புத மணத்தை ஒத்தது. ஆனால், இருக்கும் நிலவரத்தைப் பாரத்தால், என்தாய் என் காதலை அங்கீகரிப்பார்கள் என்று தோன்றவில்லை, ஆனால் என் அன்னைதான் என் தெயவம் அவர்கள் முடிவுதான் எனக்கு விதி. என்னை ஈன்ற தெய்வம் அவர்கள்! விதி எப்படித் திசை திரும்பினாலும் சரி, என்னை பொறுத்தளவிலே என் நெஞ்சிலே என் அன்பர் உதயணனின் இன்பநினைவு, என் உயிர் என் உடலில் உறைந்திருக்கும்வரை, நித்தியமல்லியின் அமரத்வம் பெற்ற சுகந்தமாக என்றென்றும் என் கன்னி நெஞ்சிலே ஊடாகு நிலைக்கும் என்பதுமட்டும் உறுதி!...'

கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பினாள் தமிழ்ச்சுடர். நிலைக்கண்ணாடியில் அவளது புதிய காந்த சக்தி பிரதிபலிக்கக் கண்டாள். நீராடி, அழகு சேர்த்துக் கொண்டு மணம் கமழ நின்றாள் அவள். ஞாயிற்றுக் கிழமைப் பொழுதைச் சிக்கனமாகவும் பயனுள்ளதாக வும் கழிக்கவென்றுதான் கடலோரம் படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

மஞ்சள் வெய்யிலின் மயக்கும் நீலை புவனத்தைச் சுற்றிச் பின்னிக் கிடந்தது.

மரகதத்தம்மை மாடிப்படிகளைக் கடந்து கொண்டே "சுடர்... அம்மா தமிழ்ச்சுடர்!" என்று அழைத்தாள்.

"இதோ வந்திட்டேனம்மா!" என்று அந்த டைரியையே பார்த்துக் கொண்டிருந்தாள் மகள்.

அதற்குள் அன்னை மேலே வந்து நின்றாள். "உன் குறிப்பைப்பார்க்கிறாயா?" என்றாள்.

"ஊம்!"

"உன் மனத்திடம் வருவதென்பது ஆயிரத்திலொரு வருக்குத்தான் சாத்தியம்!" என்றாள் தாய்.

எதற்காகச் சொன்னாள் இதை?

தன் முதல் காதல் தோற்றபின், அவள் வேறிடத்தில் வாழ்க்கைப்பட்டாளே என்றா?

அர்த்த புஷ்டியுடன் அம்மாவை ஏறிட்டுப் பார்த்தாள் சுடர். அவள் கையில் ஒரு புகைப்படம் இருந்தது.

"அம்மா, இதைப்பார்," என்றாள் மரகதத்தம்மாள்

படமொன்றில் சுடர் சிறுமியாக இருந்தாள். இரு பக்கத்திலும் மரகதமும் அவள் கணவர் குணசீலமும் இருந்தார்கள். மூவரும் மொட்டையடித்துக் கொண்டிருந்தார்கள்!"

நீ சொல்லியிருக்கிறாய். ஒரு சமயம் நான் சாகப் பிழைக்கக் கிடந்து. புனர்ஜென்மம் எடுத்தப்ப, எடுக்கப் பட்ட படம் அது. இதை நான் எப்படியம்மா மறக்க முடியும்?

''ஆமம்மா! அது ஒரு பெரிய கண்டம். அந்தச் சமயம் நானும் உன் அப்பாவும் பட்ட கஷ்டத்துக்கு அளவே கிடையாதம்மா!'' மரகதத்தம்மாவின் கண் களில் நீர் சுரந்து வழிந்தது. துடைத்துக் கொண்டாள். ''சரி நாம் புறப்படலாமா? நாழிகை ஆயிட்டுதே!...'' என்றாள்.

''ஆஹா!''

''நாளைக்குக் காலையிலே எனக்கு ஒரு சோதனை நாளம்மா. இந்தச் சோதனையிலே நான் வெற்றியடைஞ் சிட்டா, ஸ்ரீமான் ஆனந்தரங்கம் எனக்கு வெற்றி கொடுத் திட்டால் அப்புறம் என் கவலையெல்லாம் பறந்து போயிடுமம்மா!... நாளைக்கு முகூர்த்த நாளாம்!... சொன்னாங்க!''

''நாளை முகூர்த்த நாள்தான் அம்மா. என் தோழி ஒருத்திக்கு நாளை கலியாணம்!''

''அப்படியா?... ரொம்ப நல்லது. நான் உதவுவது மாதிரி நல்லவங்க உதவமாட்டாங்க என்று சொல்லு வாங்க. கல்யாணம் எங்கே நடக்குது?''

''ரிஜிஸ்தர் ஆபீசில், அம்மா!''

''ஏன்?''

''என் தோழி தான் விரும்பும் காதலனைக் கல்யாணம் செஞ்சுக்குறதுக்கு அவளது விதவை அம்மா சம்மதிக்கலையாம். அதற்காகக் கோபப்பட்டு, தாயை முறித்துக்கொண்டு இப்படி நடக்கிறாள்!''

"அட கடவுளே!... சரி, நீ கல்யாணத்துக்கு எப்போது போக வேணும்?"

"நான் போவதாக உத்தேசமில்லையம்மா! இந்த அணுயுகத்திலே தாய்ப் பாசத்துக்குக்கூட சோதனை வந்திட்டுது! பத்து மாதம் சுமந்து பெற்ற தாயைக்கூட துச்சமாக மதிக்கிறதுக்கு இந்த விசித்திரயுகம் இந்தப் பெண்ணுக்குத் துணிச்சலைத் தந்திட்டுதே! ஈஸ்வரா!"

மரகதத்தம்மாள் உணர்ச்சிப் பெருக்குடன் நின்றாள் "சரி, புறப்படலாம், சுடர்... கோபிச்சுக்காதேம்மா! புறப்படு, தமிழ்ச்சுடர்!"

தமிழ்ச்சுடர் சிரிப்புடன் நகர்ந்தாள்.

* * *

வாசலில் அப்போது உதயணன் இளநீலவர்ணக் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான்.

"வாங்க!" என்று முகமன் மொழிந்தாள் தமிழ்ச்சுடர். முத்துவளைகளும் சிமிக்கிகளும் மஞ்சள் ஒளியில் மின்னின.

"ஆமாம்!" என்று சிரித்தான் உதயணன். நல்ல சிரிப்பு வரவில்லை அவனிடமிருந்து.

மரகதத்தம்மாள் நிமிர்ந்து பார்த்து உதயணனைக் கண்டு மகிழ்ந்து "வாங்க, தம்பி!" என்றாள்.

அவன் இப்போதும் நல்ல சிரிப்பைக் கொட்ட முடியவில்லை.

"என்னவோ போல இருக்கீங்களே? உடம்பு சரியில்லையா, மிஸ்டர் உதயணன்?" விசாரித்தாள் குமாரி தமிழ்ச்சுடர்.

"உடம்புக்கு ஒன்றுமில்லை. மனம் சரியில்லை. அம்மாவுக்கு ரொம்பக் காலமாய் விட்டுவிட்டு வருகிற சித்த

பேத நோய் இப்போது கூடுதலாய்ப் போச்சு. அம்மா வோட நோய் என் தம்பியைப் பீடிச்சுது! இப்போ எங்க கஷ்டமும் கவலையும் அதிகமாய்ப் போய்க்கிட்டு இருக் குது!... எல்லாத்துக்கும் மேலே, இப்போது திரும்பவும் என் அப்பாவுக்கு நெஞ்சுவலி சதா வர ஆரம்பிச்சிட்டுது! நல்லவேளையாக, நானும் எங்க இளைய ராஜாவும் நல்ல படியாகத் தப்பிச்சிட்டோம்!...ம்... அப்பாவை நினைச் சால்தான் மனசு ஆறவில்லை!'' — உதயணன் கண்ணீ ருடன் நின்றான்.

மரகதத்தம்மாள் அண்டி வந்தாள், துயரத்தோடும் தவிப்போடும்.

உதயணன் திரும்பினான்:

''அம்மா! நீங்க அண்ணைக்கு என்கிட்டே சொன்ன தைப்பத்தி எங்கப்பாகிட்டே விசாரிச்சேன். கோபமும் பட்டேன். அவர் வருந்தினார். பணத்தையே கண்டிராத தான் பணத்தாசையால் பீடிக்கப்பட்டு இப்படி கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போயிடுச்சு அப்படீன்னு கதறினார். அவர் கொடுத்த வைர நெக்லஸை நீங்க பெரிய மனசு வச்சு வாங்கிக்கிட்டதிலே அவருக்கு ரொம்பத் திருப்தி அம்மா!··· சரி, நீங்களும் தமிழ்ச்சுடரும் உடனே என்னோடு எங்க பங்களா வரைக் கும் வரவேணும்!··· அவர் நல்ல ஞாபகத்தோடு இருக்கை யிலேயே உங்ககிட்டே ஏதோ பேசணுமாம்! நல்ல விஷயம்தான்··· சுப விஷயம்தான் அம்மா!'' என்று நிறுத்தினான் உதயணன். டெர்லின் ஸ்லாக்கின் சந்தன நிறம் எடுப்பாக இருந்தது.

தமிழ்ச்சுடர் கலவரத்தோடு அன்னையை நோக்கி னாள். அவளது கைக்கடிகாரம் பளபளத்தது.

கல்லாய்ச் சமைந்து விட்டாள் மரகதத்தம்மாள். "ஆனந்தரங்கத்தின் பரிசை நான் ஏற்றுக்கிட்டேனு?... அட தெய்வமே'... அப்படியென்றால், அந்த வேலைக்காரன் தனக்கோடி என்னையும் ஆனந்தரங்கத்தையும் ஏமாற்றி விட்டானு?"

அவள் என்னவோ சொல்ல நினைத்தாள், உதயணனிடம் பிறகு, அங்கு பங்களாவுக்குப் போவதற்குத் தயாராகிவிட்டாள். தமிழ்ச்சுடரும் உடன் தொடர்ந்தாள்.

தமிழ்ச்சுடரின் கையால் கொடுக்கப்பட்ட டிக்கிரி காப்பி உதயணனுக்குப் புதிய மனத்தெம்பை அளித்ததில் வியப்பு ஏது? இல்லை விந்தைதான் ஏது?

* * *

ஆனந்தரங்கத்தின் பங்களா வந்து விட்டது.

உதயணன் இறங்கியவுடன், முதலில் பதட்டத்துடன் காரிலிருந்து இறங்கியவள் மரகதத்தம்மாள்தான். அடுத்ததாக, தமிழ்ச்சுடர் இறங்கினுள்.

மரகதத்தம்மாள் கூர்ந்து சுற்று முற்றும் நோக்கினுள்.

காவல்காரக் கிழவன் தனகோடியைக் காணும்!

மரகதத்தம்மைக்கு உள்ளம் குலுங்கிச் சரிந்தது: உடல் குலுங்கிச் சரியாமல் இருந்தது. 'அப்படியென்றால், ஆனந்தரங்கத்தின் பரிசான வைர நெக்லஸை நான் வேலைக்காரன் தனகோடியிடம் திருப்பிக் கொடுத்து, அதை ஆனந்தரங்கம் அவர்களிடம் சேர்ப்பித்து விடும்படி சொல்லி வந்தபடி அவன் செய்யவில்லை என்றுதான் பொருள்! அந்தப் பொருளை கிழவன் அபேஸ் செய்துதான் விட்டிருப்பான்!... கடவுளே!'— அவள் மனம் கொதித்தது. 'நான் நினைச்சிருந்தது என்ன!

இப்போது நடந்திருக்கிறது என்ன?...' தவித்தது அவள் பெண் மனம்.

''உள்ளே வாங்கம்மா!'' என்று வரவேற்றான் உதயணன்.

அங்கே மயான அமைதி சூழ்ந்திருந்தது.

எவ்விதச் சலனமுமின்றி வந்த செங்கமலவல்லி, ''தம்பி! உங்கப்பா கதை முடிஞ்சிடுச்சு!'' என்று சொல்லித் தும்மினாள். கையில் 'பொமரேனியன்' நாய் தவழ்ந்தது' நீர்த்துளி ஒன்று இடது கண் மூலையில் ஊசலாடியது.

மரகதத்தம்மை பதட்டத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள். ''ஆ'' என்று உதயணன் அலறிக்கொண்டே உள்ளே ஹாலைக் கடந்தபோது, அங்கு தேம்பிய வண்ணம் வேலைக்காரக் கிழவன் தனகோடி வந்தான்.

''தம்பி! உங்கப்பா மூச்சு திடுதிப்பென்று நின்னுடுச்சு தம்பி!... அம்மா! நீங்க கொடுத்திட்டுப்போன பெட்டியை என்னமோ தோணி திறந்து பார்த்தேன். அதிலிருந்த உங்க பதிலைக் கண்டதும் எனக்கு பயமாப் போச்சு. இந்த உங்க முடிவை பெரிய எஜமானர் அறிஞ்சா, மனசொடிஞ்சு போயிடுவாரேன்னு இது நாள் பரியர்தம் அதைப்பத்தி அவர்கிட்டே யாதொண்ணுமே சொல்லாமல் இருந்தேன். இப்போ கொஞ்சம் நல்லபடியா இருந்தமாதிரி காணப்பட்டார். நெஞ்சு வலியும் கொஞ்சம் குறைஞ்சிருந்திச்சு. நீங்க தந்திட்டுப் போன பெட்டியைக் கொடுத்தேன்' அந்தக் கடுதாசியைப் படிச்சார். 'ஐயோ!'ன்னு ஒரு அலறு அலறினாரு. அப்பவே பொசுக்கினு உயிரும் பிறிஞ்சிடுச்சு, தம்பி!'' அழுதான் தனகோடி.

''அப்பா!··· அப்பா!'' என்று கதறியவாறு ஓடினன் உதயணன்.

மரகதத்தம்மாளும் தமிழ்ச்சுடரும் தேம்பிக்கொண்டிருந்தார்கள்!

ஆனந்தரங்கத்திற்கு மட்டுந்தாஞ அழத் தெரியவில்லை?— அவர் மனையாட்டி செங்கமலவல்லிக்கும்தான்

* * *

நாட்கள் நழுவின!

ஆனந்தரங்கத்தின் மகன் உதயணனுக்கு அடுத்த தடவையாகவும் குமாரி தமிழ்க்சுடர் தன் கையாலேயே டிக்கிரி காப்பி போட்டு நீட்டினள்.

உதயணன் மௌனமாக அதை வாங்கிப் பருகினன்.

வைர நெக்லஸ் தந்தப் பெட்டியில் அழகு காட்டியது!

''அப்புறம் என்னம்மா உங்க முடிவு?'' என்று ஆதங்கத்துடன் வினவினன் உதயணன். முகத்தில் செழித்திருந்த உரோமங்களை வருடியவாறு கேட்டான் அவன். மோதிரங்கள் மின்னின.

மரகதத்தம்மை வாய் திறந்தாள்:

''தம்பி! இந்த நெக்லஸ் உங்ககிட்டேயே இருக்கட்டும் நான் என் தெய்வம் குணசீலனின் சொத்து. அவரோட நினைவு ஒண்ணுதான் எனக்கு. என் கல்யாணத்துக்கப்புறம் விலை மதிக்க முடியாத சொத்தாக இருந்திச்சு; இப்பவும் அவர் இன்ப நினைவுதான் எனக்கு மாபெரும் ஆறுதலாக இருந்திட்டு வருது! இந்த நிலையிலே எனக்கு அந்நிலையான உங்க அப்பாவோட பரிசான இந்த வைர நெக்லஸை நான் வாங்கிக்கிடுறதை என் மனச்-

சாட்சி இடங் கொடுக்காது. ஆகச்சே, இதை நீங்களே வச்சுக்கிடுங்க!... ஆனா, நீங்க என் மகளைக் கல்யாணம் செஞ்சிக்க விருப்பம் தெரிவிச்சு, அந்தக் காரியமும் சுபமாய் முடிஞ்சுதின்னா, இந்த வைர நெக்லஸை என் மகளுக்கு நீங்க கொடுக்கிறதிலே எனக்கு யாதொரு ஆட்சேபமும் கிடையாது தம்பி! இனி, நீங்கதான் உங்க முடிவைச் சொல்லவேணும்!''

என்று சலனம் சூழச் சொல்லி, சலனம் சூழ உதயணனை ஏறிட்டுப் பார்த்தாள் மரகதத்தம்மாள். பயம் தாய் மனத்தை அலைபாயச் செய்தது.

குமாரி தமிழ்ச்சுடர் இன்பத்தையும் துன்பத்தையும் ஒரே பாவனையாக மதிப்பிடும் பக்குவம் பெற்ற பாங்கில் நிச்சலனமாக அமர்ந்திருந்தாள். கதம்பச்சரம் மணத்தது. நெற்றில் பொட்டு பொலிந்தது.

''அம்மா! உங்களுடைய பவித்திரமான நினைப்பு எனக்கு ரோமாஞ்சலி உண்டாக்குது. உங்க கருத்துப்படி இந்த வைர நெக்லஸை என் தமிழ்ச்சுடருக்கே பரிசாய்க் கொடுத்திடுறேன். என் அப்பா வேண்டியிருந்த இரண்டாவது கோரிக்கையாவது உங்க மூலமாய் நிறைவேறப் போகுது. இந்த அளவிலே என் அப்பாவோட ஆவி ஒண்ணுக்குப் பாதியாவது நிம்மதி அடையமுடியும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்குது!... என் உயிரிலேயும் உள்ளத்திலேயும் தமிழ்ச்சுடர்தான் என்றென்றைக்கும் உறவாடிக்கிட்டு இருக்கும்!... இதேபோல என் நினைப்பு ஒன்றுதான் என் தமிழ்ச்சுடர் மனத்திலும் எண்ணத்திலும் மணம் பரப்பிக்கிட்டு எப்போதுமே இருக்கும்' எங்கள் இரண்டு பேருடைய காதலுக்கு நீங்க தான் வாழ்த்துச் சொல்ல வேணும்!...'! என்று தழுதழுக்கக் கூறிய உதயணன் எழுந்து மரகதத்தம்மாளின் திருமதி குணசீலனின் பாதங்களில் வணங்கி எழுந்தான்.

''தம்பி, உங்க அன்பு தூய்மையானது. நீங்களும் என் அருமை மகளும் சகல சௌபாக்கியங்களோடு தீர்க்காயுசாய் நீடூழி சுபமாய் வாழவேணும்னு ஆசீர்வாதம் செய்யிறேன். என் தாய் மனசு மெய்யாவே இப்பதான் அமைதி அடைஞ்சிருக்கு!...'' என்று வாழ்த்துச் சொன்னாள் மரகதத்தம்மை. அவளது கண்ணீருக்குள் ஆனந்தம் விளையாடியது. உதயணனுக்கும் தமிழ்ச்சுடருக்கும் அவள் கையால் விபூதி பூசி விட்டாள்! இருவரின் வணங்குதலையும் ஏற்றாள்.

''அம்மா!...'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் அழைத்தாள் தமிழ்ச்சுடர் அன்னையைக் கையெடுத்துக் கும்பிட்டபடியே மெய்மறந்து நின்றாள்!

பரீட்சை நெருங்குதில்லே! சீக்கிரம் சமையல் செஞ்சிடுறேன். விருந்து சாப்பிட்டுட்டுப் போயிடலாம்னு உன் அத்தான்கிட்டே சொல்லம்மா! ஒரு அரைமணி நேரம் உன் படிப்பும் மாப்பிள்ளையின் படிப்பும் என்னாலே கெட்டதாக இருக்கட்டும்!... நீங்க ரெண்டு பேரும் பரீட்சை படிப்பு சம்பந்தமாய் பேசிக்கிட்டே இருங்க...' நொடியிலே சமைச்சிடுறேன்!...'' என்றாள் மரகதத்தம்மாள்.

உதயணனும் தமிழ்ச்சுடரும் ஒருவரையொருவர் வினயத்துடனும் விவேகத்துடனும் பார்த்துக்கொண்டு, பட்டப் பரீட்சைக்கு வரும் பாடங்களைப்பற்றி ஆராயமுனைந்தார்கள்.

ஏறுமுகச் சூரியன், திறக்கப்பட்ட அந்தச் சாளரக் கதவுகளை நலியாமல் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்!...

—நிறைந்தது—